கல்கி

KALKI 26.2.95 ரூ. 3.00



சர்வோ® ஸீவனை அதிகரிக்கும்.

சொல்லுவது



மாருதி.





இதயத்தை வென்ற மீசை!



• பழனிசாமி

ஹிட்லரிலிருந்து வீரப்பன் வரை மீசை ஒரு 'டிரேட் மார்க்' ஆகவே பலருக்கு இருந்து வருகிறது! என்றாலும் மீசைக்கு நடுவே கொஞ்சம் முகமும் தோன்றியபடி நாளிதழ் விளம்பரங்களில் தினசரி காட்சியளிக்கும் பழனிசாமியை நேரில் பார்த்தபோது ஆச்சரியமாகத்தான் இருந்தது.

ஒரு செக்யூரிட்டி நிறுவனம், திருமணப் பொருத்த மையம் ஆகிய இரண்டிற்கும் நிர்வாக இயக்குனராக இருக்கிறார் பழனிசாமி. நமக்கு செக்யூரிட்டியோ, திருமணப் பொருத்தமோ இப்போதைக்குத் தேவையில்லை என்பதால் பழனிசாமியிடம், அவரது புஷ்டி மீசை பற்றிக் கேட்டோம். ஆசை ஆசையாக பதில் சொன்னார் :

கே : ஏன் இப்படி ஒரு பயமுறுத்தும் மீசையை வச்சிருக்கீங்க?

ப : இது எங்க பரம்பரை சம்பந்தப்பட்ட விஷயம். எங்கள் கொங்கு வேளாளர் பிரிவில் மீசைங்கறது ஒரு கட்டாயம்.

கே : உங்க முன்னோர்கள் எல்லாம் இந்த அளவுக்கா முகத்தில் ஒரு ரோம சாம்ராஜ்ஜியமே வச்சிருந்தாங்க?

ப : அவங்க கொடுவாள் மீசைதான் வச்சிருந்தாங்க. நான் என்னிக்குமே மத்தவங்களிலேயிருந்து வித்தியாசப்பட்டு இருக்கணும்னு விரும்பும் டைப். மத்தவங்க கவனிக்கும்படி இருக்கணும் பாருங்க.

கே : எப்போதாவது கூழ் குடித்ததுண்டா?

ப : புரியுதுங்க! புதுசா மீசை வச்சிக்கும் போதுதான் அந்த சிரமம். இந்த மீசைக்கு வயசு 22 ஆச்சுங்களே! அதனாலே கூழோ, ஜூஸோ, மீசையிலே படாமலேயே குடிக்க முடியும்...

கே : உங்கள் மீசையின் போஷாக்கு ரகசியம் என்னவோ?

ப : நாமக்கல்லிலே இருக்கும் எங்க பண்ணையிலே உள்ள தேங்காயிலிருந்து கிடைக்கும் சுத்தமான தேங்காய் எண்ணெயைத்தான் தினமும் என் மீசைக்குத் தடவுவேன். சில பேரு வாசனை திரவியங்களைப் பயன்படுத்துவாங்க. அது சரியில்லேன்றது என் எண்ணம். செயற்கையான எதையும் மீசையிலே தடவக் கூடாது.

கே : இரண்டு பக்கமும் சமமா இருக்க, தனிப்பட்ட கவனம் எடுத்துக்க வேண்டியிருக்குமே? இல்லேன்னா குரங்கு பூனைகளுக்கு அப்பத்தைப் பகிர்ந்து கொடுத்த கதை மாதிரி ஆயிடுமே...?

ப : அது ரொம்ப ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டிய விஷயம்தான். எங்க நிறுவனத்துக்குன்னு ஒரு முடியலங்காரக் கலைஞரை நியமிச்சிருக்கேன். அவர் மட்டும்தான் என் மீசையை ட்ரிம் செய்வார்.

கே : நண்பர்களிடம் பந்தயம் கட்டியதுண்டா?

ப : மாட்டவே மாட்டேன். என்னைப் பொறுத்த வரை ஒரு லட்சம் ரூபாயை இழக்கறியா? மீசையை இழக்கறியான்னா, பணத்தை இழக்கிறேன்னுதான் சொல்வேன். ரூபாய்க்கென்னங்க... என்னிக்கு வேணா சம்பாதிச்சிக்கலாம்.

கே : மீசையை எடுத்துட்டா மட்டும் திரும்பவும் வளராதா என்ன?

ப : இப்படி வளர ஒரு ஆறு மாசமாவது ஆகுங்களே. அதுவரை எப்படிக் காலம் தள்றது? மீசைங்கறது எனக்கு ஒரு குறியீடு மாதிரி. "மீசைக்காரர் வராரு". "மீசைக்காரர்கிட்டே ஒன்னு சொன்னா நடந்திடும்" - இப்படியெல்லாம் மத்தவங்க பேசுவதைக் கேட்கும்போது எனக்கு எவ்வளவு பெருமையா இருக்கும் தெரியுமா?

கே : உங்க மீசையைப் பற்றி உங்க மனைவியின் கருத்து என்ன? உங்கள் குழந்தைகளைக் கொஞ்சும்போது கூட மீசை இடைஞ்சலாக இருக்குமில்லையா?

ப : தொடக்கத்திலே என் மீசையைப் பார்த்து என் மனைவி கொஞ்சம் பயந்ததுண்டு. ஆனா, எப்போதுமே அதை எடுக்கச் சொன்னதில்லே. இப்போதெல்லாம் இதைப் பற்றி அவளுக்குப் பெருமைதான். நான் என் குழந்தைகளை அதிகம் கொஞ்ச மாட்டேன். ரொம்ப கண்டிப்பு காட்டுவேன்...

கே : எப்போதாவது மீசையை எடுத்துவிடலாமே என்று நினைத்ததுண்டா?

ப : மூச்! ஒரு முறை இதயத்துல ஆபரேஷன் கூட நடந்தது. அப்போ டாக்டர்கள் என் மீசையை எடுக்கணும்னு ஆன வரையில் சொல்லிப் பார்த்தாங்க. பிடிவாதமாக மறுத்துட்டேன்.


— குல்ஜா

இரவு நேரங்களில் நகரம் எப்படி இயங்குகிறது? நிழலான காரியங்களுக்கு மட்டும்தான் இரவுப் பொழுதா? உண்மை நிலவரம் அறிய ஓரிரவு 10 மணிமுதல் காலை 5 வரை சென்னை நகரின் பல பகுதிகளில் வலம் வந்தோம். தொகுப்பு:

மேற்கு மாம்பலம், தம்பையா ரெட்டி சாலை – இரவு மணி 10:

கடைகளில் ஷட்டர்கள் மூடப்பட்டு விட்டன. ஒரு ஃபாஸ்ட் ஃபுட் கடையில் மட்டும் ஜேஜே என்று கூட்டம். சொய்ங் சொய்ங் என்று மசால் தோசை மும்முரமாகப் பிறவி எடுத்துக் கொண்டிருக்க, 'சட்னி ரொம்பக் காரம்' என்று காரில் வந்த கண்ணாடி மனிதர் புகார் சொல்லிக் கொண்டிருந்தார்.

பெரும்பாலும் இரவு டூட்டி போகிறவர்களும் பாச்சலர் ஹாஸ்டல்களில் தங்கிப் படிக்கிற – வேலைக்குப் போகிறவர்களும் இங்கு வந்து டிபன் சாப்பிடுவது வழக்கம் என்று ஒரு சர்வர் சொன்னார். மனைவி சமையலிலிருந்து தப்பிக்க நினைப்பவர்களும் 'அஜீரணம், சோடா குடிச்சுட்டு வந்திடறேன்' என்று டபாய்த்து விட்டு இங்கு வந்து விடுவதாகத் தகவல்.


• பிரபாகர்

MADRAS BY

ஸ்டெர்லிங் ரோடு சிக்னல் – இரவு 11.15:

நகரம் அடங்கி இருக்கிறது. டிராஃபிக் கான்ஸ்டபிள் தொப்பியைக் கழட்டி, தலையைத் தடவிக் கொண்டு, ரோட்டோர டீக்கடையில் உட்கார்ந்து சாவகாசமாய் தினத்தந்தி பிரிக்கிறார். சிக்னல் அருகே உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் டிரைவர்கள் மாநாடு கூட்டுகிறார்கள்.

''ஒரு ஹிந்திக்காரர் மஞ்சள் பை வைத்துப் போய் விட்டார். திறந்து பார்க்க பயம், பாம் இருக்குமோ?''- ஒரு பிரமாத மீசைக்காரர் அனுபவம் சொல்ல, ''ஆமா, இவரு ஓட்டறது பெரிய ஜெயலலிதா பென்ஸு காரு. பாம் வெக்கறாங்க'' என்று கமெண்ட்.

அதுசரி, ஜெ. பென்ஸில் தான் போகிறாரா?

எக்மோர், கனிமரா நூலகம் எதிரில்– இரவு 12.05:

பகலில் அலறும் வாகனங்கள் ஏதும் இப்போது இல்லை. எருமைகள் சாவகாசமாக ரோடில் நடைபயில, ரயில்வே ஸ்டேஷன் அருகே மட்டும் இன்னும் உலவும் மக்களைக் காண முடிகிறது. கே.பி.என். டிராவல்ஸ் வாசலில் வெளியூர் போகும் பிரயாணிகள், அவர்களுக்கு டீ சப்ளை செய்யும் பையன்கள், கொஞ்சம் தள்ளி குப்பைகளைச் சேர்த்து, குளிர்காயும் கிளீனர் பையன்கள். (''மூணு மணிக்கு மேலதான் தூங்குவோம்.

இங்க, பிளாட்பாரத்துல தான்!'') பாதி தூக்கத்தில் அவர்தம் பெற்றோர்கள், வளர்ப்பு நாய்கள்.

<u>சென்ட்ரல்-மாநகராட்சி பில்டிங் அருகே- இரவு 12.45:</u>

ஒரு டீக்கடை. அருகே பெட்டிக்கடை. ஏழெட்டு இளைஞர்கள். பேச்சை கவனித்ததில் அத்தனை பேரும் சமீ பத்திய சி.ஏ.



• சாலையோரம், கவலையின்றி...



• எழும்பூர்: குளிர்காயும் குட்டிப் பையன்கள்

NIGHT

ரிஸல்ட் டால் பழி வாங் கப் பட்டவர்கள்.

"மணி ஒன்னாவப் போவுதுடா. வீட்டுக்குப் போக வேணாமா?"

"இப்படியே கிளம்பி ஊர் ஊரா போயிடலாமான்னு பாக்கறேன்."

"அப்ப உன் டாவு?

"எங்கிருந்தாலும் வாழ்க!"

"தம்மு வாங்கட்டா?"

"பீடி போறும். இனி 'கிங்ஸ்' அடிக்கறதில்லைன்னு முடிவு."

"ஏன்டா?"

"நாலாவது அட்டெம்ட்டா! மனசாட்சி வேணாம்?"

<u>கொத்தவால் சாவடி.- இரவு 1.30:</u>

லாரி லாரியாகக் கருவேப்பிலை இறங்குகிறது. ஆண்களும் பெண்களும் கூடைகளில் நிரப்பி சுமந்து போகிறார்கள். போலீஸ்காரர்கள் நாலைந்து பேர் ஒவ்வொரு லாரியாக 'விசாரித்து'க் கொண்டிருக்க, அன்னாருக்கு சுடச் சுட டீ வருகிறது. ("ஏலக்கா போட்டிருக்காடா?")

கொத்தவால் சாவடி ஏரியாவுக்கு இரவுக்கென்று பிரத்யேக முகம் ஏதுமில்லை. உறக்கமற்ற உழைப்பாளிகளுக்கு, குளிரிலும் வியர்க்குமளவுக்கு வேலை இருக்கிறது. ("தண்ணி போட டயம் இல்லீங்க"- ஒரு சுமை தாங்கி)

<u>செலக்ட் ஹோட்டல், லஸ் - இரவு 2.00:</u>

ஜகஜ்ஜோதியாய் ஒளிரும் விளக்குகள். பரபரப்பு மனிதர்கள். முட்டை பரோட்டா,



"நம்ம எம்.எல்.ஏ. தேர்தல் சமயத்திலே, 'நான் உங்க வீட்டுப் பிள்ளை'ன்னு சொல்லி ஓட்டு கேட்டதை சாதாரணமாத்தான் நினைச்சேன். ஆனா இப்போ..."

"ஏன், என்னாச்சு?"

"என்னோட சொத்தையெல்லாம் பசங்களுக்கு பாகம் பிரிக்கறப்போ, எனக்கும் ஒரு பாகம் வேணும்னு வந்து நிக்கறாரு!"

–டி.என்.பாலகிருஷ்ணன்

❁❁

கோழி பிரியாணி, ஹாஃப் பாயில், பாயா என்று கடச் கட அடுக்கும் பையன்கள். வேக வேகமாய் பணம் எண்ணும் கவுண்ட்டர் மனிதர்.

"பகலை விட ராத்திரிதான் சார் நல்ல வியாபாரம்" என்கிறான் பாலாஜி என்கிற ஹோட்டல் பையன்.

தண்ணி அடித்து விட்டு 'காரத்'திற்காக நாக்கைச் சுழட்டிக் கொண்டு வருபவர்களும் உண்டு. கதை டிஸ்கஷனுக்காக சில சினிமாக் காரர்கள் கூட 12 மணிக்குமேல் வருவார் களாம். ("ஒரு டீயை ரெண்டு மணி நேரம் சாப்பிடுவாங்க.")

பீச் ரோடு– இரவு 2.30:

காற்று கூட பயந்து பயந்து வீசுவது போல் தெரிய, ஒரே ஒரு நபர் மட்டும் அந்த அகாலத்தில் தள்ளுவண்டியுடன் மெல்ல நடந்து வருகிறார். பெயர் பிரபாகர். கடலை விற்பவர்.

"அம்மா வந்த புதுசுல பீச்சுல நைட் 11 மணிக்கு மேல யாரும் உட்காரக் கூடா துன்னு ரூல் இருந்திச்சு. இப்ப ஒண்ணும் பிராப்ளம் இல்லை. 2, 3மணி வரை கூட கடலை சாப்பிட ஆளுங்க இருக்காங்க. போலீஸ், பிரச்னை ஏதும் இல்லை" என்கிறார். (அவர் வண்டியில் மிச்சமிருந்த கடலை, பருப்பு, சிப்ஸ் வகையறாவை கட்டிக்காட்டி, "மீந்ததை என்ன செய்வீங்க?"

"நாளைக்கு செய்யற ஐட்டத்தோட மிக்ஸ் பண்ணிருவங்க.")

திருவல்லிக்கேணி (கோவில் வளாகம்)– இரவு 2.45:

தேர் அருகே பாரா்வில் இருந்த கான்ஸ்டபிள் கூட தூங்கிக் கொண்டிருக்க, வீடுகளில் நிசப்த சங்கீதம். குளக்கரையில் பிளாட்பாரக் குழந்தைகள் தூங்க, தேரடியில் தெரு நாய் குளிருக்குச் சுருண்டிருக்கிறது. போஸ்டர் தின்னும் பசுமாடு. கொஞ்சம் தள்ளி டி.எச்.ரோடு வந்தால் இந்த நேரத் திலும் சனிப்பெயர்ச்சி புத்தகத்தில் மும்முர மாயிருக்கும் ஒரு ரிட்ஷாக்காரர். நைட் ஷோ முடித்து மௌண்ட் ரோடிலிருந்து நடந்தே வரும் வாலிபர்கள். அவர்கள் பேச்சில் அடுத்த நாள் ஆபீஸுக்குப் போக வேண் டியது பற்றிய அலுப்பு. உரக்க கொட்டா விகள்.

பல்லாவரம் பஸ் நிலையம்– அதிகாலை 3.40:

விரையும் வெளியூர் பஸ்கள். எங் கிருந்தோ கூடைகளில் பூ வந்து இறங்குகிறது. புகையிலைக் கிழவிகள் தூக்கத்தோடு தூக்கிப் போகிறார்கள். முதல் ரயிலில் வந்த தினசரி செய்தித் தாள்களை இணைப்புகளோடு அடுக்கும் சைக்கிள் பையன். இரவு முழுக்க எழுதி முடித்த 'புரட்சி தலைவி'யை (த் இல்லை) ஆசையாக தூர நின்று பார்க்கும் லுங்கி ஆசாமி. சூடு பிடிக்கத் தொடங்கும் டீக்கடைகள்.

குரோம்பேட்டை– காலை 5 மணி.

இன்னும் என்ன? கண்கள் எரிய வீட்டுக் கதவைத் தட்ட, "நீ உருப்படப் போறதில்லை. ராத்திரி முழுக்க எங்க போய் ஊர் மேஞ்சுட்டு வர்றே? எத்தனை நேரம் முழிச்சிட்டிருக்கிறது?"

–தாய்க்குலப் புலம்பல்.

(பி.கு: ஒரு ராத்திரி ஊர் சுற்றியதில் இரண்டு விஷயங்கள் எல்லா இடத்திற்கும் பொதுவானதாக இருந்தன.


1. இரவு முழுக்க நகரில் போலீஸ் ரோந்து இருக்கிறது.

2. ஒரு பெண் கூடப் பார்க்கக் கிடைக்க வில்லை.

-கிச்சா

படங்கள்: கேமராதிருஞானம்

Kalki Shopping Page



இப்போ கைதப்பிச்சே! இனிமே சாப்பிடு..!
எண்ணூர் மின் நிலையத்தை திறந்து வெச்சிட்டு இப்பத்தான் வாரோம்... இனிமே தமிழ் நாட்டுல மின் வெட்டு இல்லை!
இந்தா டீ கரெண்ட் பில்...
மின் கட்டண உயர்வு
அம்மா இன்னாவல் வடிவத்தில் 47 குளம் வெட்டியாச்சு! ஆனா!
அரசியல்



கல்கி



1995
பிப்ரவரி 26
பவ
மாசி 14
மலர் : 53
இதழ் : 30

தமிழிசைக்கு சுக்கிர தசை!

சுண்களே கொஞ்சம் கவனமாகப் பாருங்கள்! இது கனவல்ல, நிஜம்தான் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்! அறிவே! சற்று யோசித்துப் பார்! படிக்கின்ற செய்தி பொய்யல்ல; மெய்தான் என்று நிச்சயப்படுத்திக் கொள்!

''அப்படி என்ன அதிசயச் செய்தி?'' என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

தமிழ் மொழியில் பல்வேறு இசை வல்லுனர்கள் அருளித்தந்த கீர்த்தனை களைப் புத்தக வடிவில் அச்சிட்டு இசை பயில்வோருக்கு வழங்குவதற்கும், எதிர்கால சந்ததியினர் தமிழ் இசையின் பெருமையை உணர்வதற்கும் வழி வகுக்க ஜெயலலிதா ஆணையிட்டுள்ளார்!

காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதிகங்கள், சம்பந்தர், திருநாவுக் கரசர், சுந்தரர் ஆகியோர் அருளிச் சென்ற தேவாரத் திருப்பதிகங்கள், ஆழ்வார் களின் பாசுரங்கள், அருணகிரிநாதரின் திருப்புகழ், சீர்காழி முத்துத் தாண்டவர், அருணாசலக் கவிராயர், மாரிமுத்தாப் பிள்ளை ஆகியோரின் இசைப் பாடல்கள் ஆகியன, பண்களின் சுவரம், தாளக் குறிப்புகளுடன் வெளியிடப்பட உள்ளன. இதற்குத் தமிழ்நாடு அரசின் இசைக் கல்லூரி மூலம் நடவடிக்கை எடுக்க முதல்வர் ஆணை பிறப்பித்துள்ளார்!

இதை விடவும் அதிசயமான செய்தி என்ன இருக்க முடியும்?

தமிழ்நாட்டில் தமிழர்களுக்காக நடக்கும் தமிழக அரசு, தமிழ் இசையின் பெருமையைப் புரிந்து கொண்டு இப்படி ஒரு நல்ல காரியம் செய்ய முன்வந் திருப்பது மெய்யாலுமே ஒரு புரட்சிதான். இதற்காக முதல்வரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

ஒரே ஒரு வேண்டுகோள். வேறு பல திட்டங்கள் போல இதுவும் அறிவிப்பு டன் நின்றுபோகாமல், அடிக்கல் நாட்டியதுடன் அஸ்தமித்து விடாமல், கடைசி வரை தக்கவர்களைக் கொண்டு நிறைவேற்றப்பட வேண்டும். அப்படி செயலுருத் தரப்படுகிறதா என்பதை முதல்வரே அவ்வப்போது கவனித்து வரவும் வேண்டும். ''என்ன ஆச்சு? எந்த அளவு முன்னேற்றம்?'' என்று சம்பந்தப்பட்டவர்களை பத்து நாட்களுக்கு ஒரு தடவை ஃபோனிலே தட்டிக் கேட்டு வந்தாலே போதும், காரியம் நடந்துவிடும்.

பாடல்கள், புத்தகங்களுக்குள்ளே முடங்கிப் போனாலும் எடுத்துக் கொண்ட பிரயாசை வீணாகிவிடும். மேடைகளிலே பாடப்பட வேண்டும். அதற்கும் வித்வான்களிடம், குறிப்பாக இளைய தலைமுறையினரிடம், ''தமிழர்களுக்காக நடக்கும் கச்சேரிகளில் தமிழ்ப் பாடல்களைக் கணிசமாகப் பாடுங்கள்'' என்று முதல்வர் கேட்டுக் கொண்டால் பிரமாதமான பலன் கிடைக்கும்.

தொண்டர் தரிசனம்

'இந்திரா காந்தியின் கொடும்பாவி எரித்த குமரி அனந்தன்' என்று வாய் ஓயாமல் வசைபாடித் தீர்க்கிறது வாழப்பாடி கோஷ்டி. எந்தச் சந்தர்ப்பத்தில், சூழலில், எதற்காகக் குமரி அனந்தன் அப்படி நடந்து கொண்டார் என்பதை மறந்து, கோயபல்ஸ் பாணியில் மூளைச் சலவை செய்ய எண்ணுகிறார்கள். ஆனால் அந்தத் தந்திரம் பலிக்காது.

குமரி அனந்தனின் தொண்டர் தரிசனம், அவரது முந்தைய பாத யாத்திரை போலவே வெற்றி பெறும். பாத யாத்திரையின் போது மக்களைச் சந்தித்தவர், இன்று தொண்டர்களைத் தரிசிக்கிறார். அவர்களது கருத்துக்களைக் கேட்டறி கிறார்; ஒத்துழைப்புக் கோருகிறார்; உற்சாகப்படுத்துகிறார்.

கட்சியை வளர்ப்பது என்பது அறிக்கை மழை பொழிவதிலே அல்ல. தமிழகத் திலே மீண்டும் காங்கிரஸ் வேரூன்ற வேண்டுமானால், தலைவர்களும் தொண் டர்களும் மக்களிடம் போக வேண்டும். அவர்கள் குறைகளை அறிந்து, அவர்கள் சார்பில் பேசவேண்டும். இயன்ற மட்டும் குறை களைய முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும். ஒன்றும் முடியாவிட்டால் அனுதாபத்தையாவது நேரில் தெரிவிக்க வேண்டும். வாழப்பாடி மீது பதில் தாக்குதலால் மட்டும் பயனில்லை.

கட்சியை வளர்க்கும் ஆற்றல் தொண்டர்களுக்கே உண்டு. இதைப் புரிந்து கொண்டு, அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் தந்து நடந்து கொள்ளும் குமரி அனந்தன், அவர்களுக்குச் சரியான திட்டம் வகுத்துத் தந்து வழிகாட்டினால் நிச்சயம் கணிசமான வெற்றி பெறுவார்.

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்

வீடு பெற்ற அதிர்ஷ்டசாலிகளை தெரிந்துகொள்ளுங்கள்

காசி பில்டர்ஸ் வழங்கும்

காசி குரூப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீமின் மூலம் வீடு பெற்று அதில் குடியிருக்கும் நூற்றுக்கணக்கான அதிர்ஷ்டசாலிகளின் புகைப்படங்களும் அவர்கள் குடியிருக்கும் விலாசங்களையும் வரும் இதழ்களில் காணத் தவறாதீர்கள்.

Rs. 3,000/- 'A' Series
3 லட்சம் மதிப்புள்ள வீடு



K. Jayakumari,
No. 36, Kutti Naicken Street,
India Silk House Backside,
Madras - 600 002.

Rs. 2,000/- 'A' Series
ரூ. 2 லட்சம் மதிப்புள்ள வீடு




R. Devendran,
C/o. Devi Textiles,
6-A, Anna Salai, Pammal,
Madras - 600 075.

Rs. 1,000/- 'B' Series
ரூ. 1 லட்சம் மதிப்புள்ள வீடு



Kameswari,
12/C, M. G. R. Salai,
Nehru Nagar,
Madras - 600 093.

Rs. 1,500/- 'A' Series
ரூ. 1.5 லட்சம் மதிப்புள்ள வீடு



K. Sankar,
'Q' Flat 1st Floor, Sagar
Apartments, Ph-II, 87, East Vanniar
Street, K. K. Nagar West,
Madras - 600 092.

Rs. 2,000/- 'B' Series
ரூ. 2 லட்சம் மதிப்புள்ள வீடு



J. Kalarani,
78, Nehruji Nagar,
Dindigul

Rs. 2,000/- 'A' Series
ரூ. 2 லட்சம் மதிப்புள்ள வீடு




G. Premavathi,
18, Subramania
Sastriar Street,
Arani.
T.S. District

Rs. 2,000/- 'B' Series
ரூ. 2 லட்சம் மதிப்புள்ள வீடு



Nithianandam,
'I' Flat 3rd Floor,
Parkavi Apartments PH-III,
18 to 22, Mariamman Koil
Street, K.K. Nagar, West,
Madras - 92.

Rs. 1,000/- 'A' Series
ரூ. 1 லட்சம் மதிப்புள்ள வீடு



Tmt. Durga Rajan,
'C' Flat in 3rd Floor,
Parkavi Apartments PH-III,
18 to 22, Mariamman Koil
Street, K.K. Nagar, Madras - 92

Rs. 1,000/- 'B' Series
ரூ. 1 லட்சம் மதிப்புள்ள வீடு



Mr. S. Sriram,
'J' Flat Ground Floor,
Kasi Towers Apts., Mariamman
Koil Street, K.K. Nagar West,
Madras - 600 092.

Rs. 3,000/- 'A' Series
ரூ. 3 லட்சம் மதிப்புள்ள வீடு



K. Jagadeesan,
P. O. Box No. 20508,
Jeddah - 21465
K.S.A.

Rs. 1,500/- 'B' Series
ரூ. 1.5 லட்சம் மதிப்புள்ள வீடு



R. Seethalakshmi,
Plot No. 11, Thiruvalluvar
1st Lane, Adambakkam,
Madras - 600 088.

வரும் 26.2.95 அன்று நடக்கவிருக்கும் குலுக்கலில்
உறுப்பினராகச் சேர்ந்து நீங்களும் பயனடைய உடனே முந்துங்கள்.

காசி பில்டர்ஸ் வழங்கும் பரிசு மழை

We accept Fixed Deposits at the rate of 24% with 3% incentives.

ஒரு சதுரடிக்கு 5% முதல் 10% வரை சிறப்பு தள்ளுபடி

"காசி குரூப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீம்" திட்டத்தில் 01-01-95 முதல் 26-02-95 வரை ரூ.1,250/- முதல் ரூ. 5,000/- வரை மாதத் தவணைகளாகச் செலுத்தி குலுக்கல் மூலம் 277 சதுர அடிகள் முதல் 1111 சதுரடிகள் வரையிலுள்ள வீட்டினைப் பதிவு செய்யும் உறுப்பினர்களுக்கு ரூ. 600/- முதல் ரூ. 2,500/- வரையிலான சிறப்புப் பரிசுப் பொருட்கள் வழங்கப் படும். மற்றும் "சுபமங்களா" திட்டத்தில் ரூ. 10,000- மட்டுமே செலுத்தி சொந்த வீடு பெறலாம். மீதமுள்ள தொகைக்கு நாங்களே கடனுதவி ஏற்பாடு செய்து தருகிறோம். இத் திட்டத்தில் வீடு பதிவு செய்பவர்களுக்கு ரூ. 1000/- மதிப்புள்ள கவர்ச்சிகரமான பரிசுப் பொருட்கள் வழங்கப்படும். இது தவிர மேலும் எங்களது காசி திரையரங்கில் திரையிடப்படும் "எங்கிருந்தோ வந்தான்" திரைப்படத்திற்கு மேற்கண்ட தேதிகளில் வீடு பதிவு செய்பவர்களுக்கு இலவச அனுமதி சீட்டு வழங்குவதுடன் திருப்பதி திருத்தணி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள எங்களது ஹோட்டல் காசி இன்டர்நேஷனலில் அனைத்து வசதிகளுடன் ஒருநாள் தங்குவதற்கும் அனுமதி அளிக்கிறோம்.

வீடு கிடைக்கும் இடங்கள் :

கே. கே. நகர் (மேற்கு), விருகம்பாக்கம், போரூர், வளசரவாக்கம், சாலிகிராமம், கில்நகர், வடபழநி ஆகிய இடங்களில் வீடுகள் கட்டித் தருகிறோம்.

வைப்பு நிதி :

இத் திட்டத்தில் முதலீடு செய்பவர்களுக்கு 24% கூட்டு வட்டியுடன் 3% ஊக்கத் தொகையும் வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு :

காசி ஹவுசிங் & டெவலப்மென்ட் லிமிடெட்

மற்றும்

காசி பில்டர்ஸ்

காசி தியேட்டர் காம்ப்ளக்ஸ்,
91, 92 ஜவாஹர்லால் நேரு சாலை, அசோக் நகர், சென்னை - 600 083.
போன் : 4821969, 4822206, 4825606, 4825506 FAX : 044-4821897
ஞாயிறு முழு நேரம் அலுவலகம் உண்டு.

கிளை அலுவலகம் : 13, கிழக்கு ஜோன்ஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. போன் : 456 464

குறிப்பு: 11-02-95 முதல் ஒரு சதுரடியின் விலை ரூ. 450/-லிருந்து 500/- ஆக உயர்த்தப்படும்.

களவு போகும் கோவில் நகைகள்!



• ராதாகிருஷ்ணன்



• கிருஷ்ணசாமி ரெட்டியார்

1942.

இங்கிலாந்து அரச குடும்பத்தைச் சேர்ந்த வேல்ஸ் இளவரசர், தமது இந்தியச் சுற்றுப் பயணத்தின்போது மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வருகிறார். அம்மனுக்குப் போடப்பட்டிருக்கும் நகைகளையும், முத்து, வைர, வைடூரிய மாலைகளையும் கண்டு பிரமிக்கிறார்.

"இந்த நகைகளைக் கொடுங்கள். எங்கள் நாட்டுப் பொற்கொல்லர்களிடம் கொடுத்து இதேபோல் செய்யச் சொல்லிவிட்டு, அம்மன் நகைகளைத் திருப்பிக் கொடுத்து விடுகிறோம்'' என்று கோவில் பொறுப்பாளர்களிடம் சொல்கிறார். "கோவில் நகைகள் வெளியே போகக் கூடாது" என்று பக்குவமாகச் சொல்கிறார்கள் அவர்கள். புரிந்து கொண்ட வேல்ஸ் இளவரசர், "உங்கள் ஸெண்டிமெண்டை மதிக்கிறேன்'' என்றபடி, விடைபெற்றுக் கொள்கிறார்.

பிறிதொரு சம்பவம்.

மதுரையில் உலகத் தமிழ் மாநாடு. தமிழர்களின் தொன்மை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை விளக்கும் ஒரு கண்காட்சி. மதுரை மீனாட்சி அம்மனுக்கு தினசரி போட்டு அலங்கரிக்கப்படும் நகைகள் அங்கே காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

"சில முக்கியஸ்தர்கள் கண்காட்சியைப் பார்த்துச் சென்ற பிறகு, அந்த நகைகள், ஒரு பிரபல அரசியல்வாதிக்கு வேண்டிய பிரமுகரின் கழுத்தை அலங்கரிக்கப் போய்விட்டன'' என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. அதனால் கோவில் சொத்துக்களைப் பாதுகாக்க வழிமுறைகள் சொல்ல ஓய்வுபெற்ற நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது.

"மேற்சொன்ன புகார் என்னிடம் கொடுக்கப்பட்டது. நகைகள் முறைப்படி, புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டு வெளியில் கொண்டு போகப்பட்டிருக்கின்றன. மீண்டும் உள்ளே கொண்டு வரப்பட்டு கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளன. அந்த அளவுக்கு என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்'' என்று சொல்கிறார் கிருஷ்ணசாமி ரெட்டியார்.

சுதந்திரத்திற்கு முன்னும், பின்னும் நடந்த இந்தச் சம்பவங்கள் நமக்கு ஒரு விஷயத்தைத் தெளிவாக உணர்த்துகின்றன.

அறங்காவலர்கள் என்ற பெயரில் அரசியல்வாதிகள், என்று கோவிலில் அடியெடுத்து வைத்தார்களோ அன்றே கோவில் சொத்துக்களுக்கு ஆபத்து வந்துவிட்டது.

இன்று நம் தமிழகக் கோவில்களில் இருக்கும் நகைகளின் மதிப்பு ஆயிரக்கணக்கான கோடிகள். கன்னியாகுமரி அம்மன் போட்டிருக்கும் நெப்போலியன் காசு மாலை, நெல்லை காந்திமதி அம்மன் போட்டிருக்கும் விக்டோரியா காசு மாலை, ஸ்ரீரங்கம் கோவிலின் 'நீல நாயகம்' என்ற இரத்தின மாலை என்று, அந்தக் காலத்து ராஜாக்களும் ஜமீன்தார்களும் நிறையவே செய்திருக்கிறார்கள்.

"இன்றைக்கு தங்கம் மற்றும் வைர, வைடூரியங்கள் விற்கும் விலையைக் கணக்கெடுத்துக் கொண்டு ஒரு மதிப்புப் போடலாம். ஆனால் அந்த


நகைகளுக்கான தொன்மை (antique) மதிப்பைப் போடுவது யார்? நான் என்னுடைய அறிக்கையில் 'நகைகளின் தொன்மை மதிப்பைக் குறிக்க வேண்டும்' என்று கூறியுள்ளேன். தவிர, பயம், பக்தி குறைந்து வரும் இந்நாட்களில் 24 மணிநேரமும் கோவிலில் பாதுகாவலர்கள் இருக்க வேண்டும் என்று சொல்லியுள்ளேன். இப்போது கோவில் பாதுகாப்புப் படை என்று முன்னாள் ராணுவத்தினரைக் கொண்ட படை அமைக்கப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்கது" என்கிறார் கிருஷ்ணசாமி ரெட்டியார்.

பாதுகாப்புப் படையினரை நியமித்தால் மட்டும் போதாது; மதுராந்தகத்தில் நடந்தது போல் களவு போகின்ற தருணத்தில் அவர் டீ சாப்பிடப் போகாமலுமிருக்க வேண்டும்! காவலரின் பொறுப்புக்களும் நடந்து கொள்ள வேண்டிய முறைகளும் வரைமுறைப் படுத்தப்பட வேண்டும்'' என்கிறார் ம.தி.மு.க.வின் செய்தித் தொடர்பாளரான வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன். தொடர்ந்து, "அதிமுக. ஆட்சியில் கோவில் கொள்ளைகளுக்குப் பஞ்சமே இல்லை'' என்று பட்டியலிடுகிறார்:

"எம்.ஜி.ஆர். ஆட்சியில் மன்னார்குடி, தென் திருப்பேரை கோவில்களில் கொள்ளை நடந்தது. திருச்செந்தூரில் வேல் காணாமல் போனது. சரிபார்ப்பு அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை மர்மமான முறையில் இறந்து போனார். நெல்லை காந்திமதி அம்மன் கோவிலில், மூன்று நான்கு முறை கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. கடந்த நான்கு வருடங்களில் கோவில் கொள்ளைகள் மேலும் அதிகரித்திருக்கிறது. தம்புச்செட்டித் தெரு காளிகாம்பாள் கோவிலில் வைரமூக்குத்தி, கம்மல் களவு போனது. தவிர, விருதுநகர் அருகே முத்துராமலிங்கம் கிராமத்தில் கங்கா பரமேஸ்வரி கோவில், திருவண்ணாமலை நெடுங்குளம் ராமச்சந்திர பெருமாள் கோவில், நாகப்பட்டினம் நீலாயதாக்ஷி கோவில், கோவில்பட்டி சிவஞானபுரம் பத்ரகாளியம்மன் கோவில் ஆகிய கோயில்களில் கொள்ளைகள் நடந்துள்ளன. நாகர்கோயில் அருகே திருவட்டாறு ஆதிநாராயண பெருமாள் கோவிலில் தங்கக் கவசத்தையே உரித்து எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்!''

இவைகளில் எத்தனை திரும்ப மீட்கப்பட்டன,

ஏரி காத்த ராமரை



• பூட்டப்படும் இரும்புக்கதவு (வெளியே) பூட்டப்படாத மரக்கதவு (உள்ளே)

மதுராந்தகம் ராமர் கோவில் கொள்ளை தான் சமீபத்திய ஸ்டார் நியூஸ். "மர்ம மனிதன்", "அர்ச்சகர் உடந்தையா?", "150 பவுன்", "பத்துலட்சம்" என்றெல்லாம் மாறி மாறி, பத்தி பத்தியாக நாளிதழ்களில் எழுதித் தள்ளி விட்டார்கள்.

உண்மையில் களவு போனது சுமார் 70–75 பவுன் நகை என்பதும், மதிப்பு சுமார் 3–3½ லட்சம் என்பதும் ஒரு புறம் இருக்க, "இந்தக் கோவிலுக்கு திருடு போவது ஒன்றும் புதிதல்ல'' என்கிறார்கள் சேஷாத்ரி & தாமோதரன். ராமர் கோவிலின் முன்னாள் அர்ச்சகர்கள். இவர்களது தந்தை ராஜகோபாலாச்சாரி என்பவர் 45 வருடங்கள் கோவிலின் தலைமை அர்ச்சகராக இருந்தவர். ''1955, 70,85–ஆகிய மூன்று வருடங்களில், மூன்று முறை இதற்கு முன்னதாகக் களவு போயிருக்கிறது" என்கிறார்கள்.

சமீபத்திய திருட்டையொட்டி சஸ்பென்ட் செய்யப்பட்ட இரு அர்ச்சகர்களில் ஒருவரான கிருஷ்ணமாச்சாரி மிகவும் முதியவர். அன்றைய தினம் (1.2.95) விடுமுறையில் இருந்தவர். தமது லீவ் லெட்டரை முறைப்படி எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸரிடம் தந்து, பொறுப்புகளை ஒப்படைத்துச் சென்றிருக்கிறார்.

கமிஷ்னர் உத்தரவின் பேரில் சஸ்பென்ஷன் ஆர்டரில் கையெழுத்துப் போட்டிருக்கும் எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர் வள்ளுவன், அதற்காகத் தாமே வருத்தப்படவும் செய்கிறார்:



• சேஷாத்ரி



• தாமோதரன்

"எல்லர்ருக்கும் நன்றாகத் தெரியும், அர்ச்சகர் கிருஷ்ணமாச்சாரி மேல் ஒரு தவறும் இல்லை என்பது. லீவில் இருப்பவர் என்ன செய்வார்? பொறுப்பில் இருந்த அவர் மகன் ரங்கராஜனை சஸ்பென்ட் பண்ணியதைக் கூட ஒப்புக் கொண்டாலும், கிருஷ்ணமாச்சாரி ஒரு பாவமும் அறியாதவர்" என்கிறார் ஈ.ஓ.

கர்ப்ப கிரகத்தின் மர, இரும்புக் கதவுகளில், மரக் கதவைப் பூட்டாது போனதுதான் பெரும் தவறாக– சஸ்பென்ஷன் ஆர்டரில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

எத்தனை குற்றவாளிகள் பிடிபட்டனர் என்கிற கேள்வி ஒருபுறம் இருக்க, "கோவில் நகை சரிபார்ப்பு அதிகாரிகள் நகைகள் சரியாக இருக்கின்றனவா என்று கணக்கு மட்டும் பார்க்கக் கூடாது. அந்த நகைகள் ஒரிஜினலாகவே இருக்கின்றனவா? புத்தகங்களில், அதன் எடை விவரங்கள் எழுதப்பட்டிருக்கின்றனவா? என்பதையும் கவனிக்க வேண்டும்'' என்கிறார் ராதா கிருஷ்ணன்.

"**ச**முதாயத்தில் கடவுள் பக்தி, மனச்சாட்சிக்கு பயந்து நடப்பது ஆகியன தாம், நல்லாட்சிக்குச் சட்டத்தை விடவும் சிறப்பாக உதவும்.

ஆனால் ஆட்சியில் உள்ளோர் கடவுளை மறுக்கும்போதும், அல்லது தங்களையே கடவுளாக உயர்த்திக் கொள்ளும் போதும் மக்களுக்குக் கோவிலிலும் அவரவர் உள்ளங்களிலும் குடிகொண்டிருக்கும் இறைவனிடம்



• ஏரிகாத்த ராமர் ஆலயம்

இது குறித்து விசாரித்த போது சில ஆச்சர்யமான தகவல்கள் நமக்குக் கிடைத்தன.

"11.30க்கு காலை பூஜைகள் முடிந்து கோவிலைப் பூட்டிச் செல்லும் போது, கர்ப்பகிரகத் துக்கு அருகே உள்ள மர, இரும்பு ஷட்டர் கதவுகளில் இரும்புக் கதவையும், உள்பிராகார, வெளிப் பிராகாரக் கதவுகளை யும் மட்டுமே பூட்டிச் செல்லு வது வழக்கம். மூலவருக்கு மிக அருகே உள்ள மரக்கதவை எப்போதும் (பகல் பொழுது களில்) பூட்டும் வழக்கமே இல்லை" என்கிறார்கள் ஊர்க் காரர்கள்.

"எப்போதும் என்றால் எத் தனை நாட்களாக?'' என்று கேட்டபோது "எனக்கு நினைவு தெரிந்த நாட்களாக" என்கிறார் அறுபது வயதான ராமன் என்கிற உள்ளூர்வாசி.

யார் காக்கப் போகிறார்?

மரக் கதவு பகல் பொழுதுகளில் சாத்தப் படுவதில்லை என்கிற விஷயம் மக்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்க, இது விஷயத்தில் முக்கிய சாட்சியாக, போலீஸ் விசாரித்திருப்பது முன் சொன்ன முன்னாள் அர்ச்சகர் களான சேஷாத்ரி, தாமோதரன், ராஜ கோபாலாச்சாரி ஆகியோரை.

"எங்கள் காலத்தில் சாத்தித்தான் வைப்போம்" என்று அவர்கள் சொல்லியிருப்பது மக்களுக்கு வியப்பு கலந்த அதிர்ச்சி..



• வள்ளுவன்

சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கும் கிருஷ்ணமாச்சாரி குடும்பமும் முன்னாள் அர்ச்சகர் ராஜகோபாலாச்சாரி குடும்பமும் நெருங்கிய சொந்தம் என்பதும், காலம் காலமாக இருந்து வரும் குடும்பப் பகை இது விஷயத் தில் புகுந்து விளையாடி விட்டது என்றும் ஊரில் பர வலாகப் பேசப்படுகிறது.

"மனிதர்களின் சொந்த விருப்பு வெறுப்புகளின் விளைவுகளால் ராமர் தான் ரொம்ப பாதிக்கப்படு கிறார்'' என்று வருத்தப்பட்டார், கோவிலுக்கு அருகிலுள்ள அகோபில மடம் ஓரியண்டல் உயர் நிலைப் பள்ளி ஊழியர் ஒருவர்.

-கிச்சா

படங்கள்: ராஜுநாராயண்

பயபக்தி குறைந்து போவது இயல்புதானே? ஆக, கோவில் நகைகள் கொள்ளை போவ தில் வியப்பென்ன?'' என்று கேட்கிறார் மனஇயல் நிபுணர் ஒருவர்.

"கோவிலில் கொள்ளையடிக்கப் பட்ட நகைகளை விற்பது என்பது மிகவும் கஷ்டமான காரியம். அநேகமாக அது பஜாருக்கு வராது. தங்க மதிப்புக்காக மட்டுமின்றி, நகைகளின் தொன்மை மதிப்புக்காகவும் அதிக விலைக்குப் போகும். அயல்நாடுகளில் பெரும்பாலானவர்கள் வாங்குவார்கள். பழைமையான பொருட் களில் வர்த்தகம் செய்வோரையும் போலீஸ் கண்காணிக்க வேண்டும்'' என்று சொன் னார் உஸ்மான் சாலையிலுள்ள தங்க வியாபாரி ஒருவர்.

ப்ரியன்

மேலட்டை வண்ணப்படம் : யோகா

அறிமுகம்:

அக்னி ராஜரத்தினம்

'ராஜரத்தினம் ஒரு விமானக் கம்பெனியையும் வாங்கி விட்டார்' என்று சமீபத்தில் செய்தி வந்த போது தொழில் வட்டாரங்களில் பலரும் வியப்பிலே வாயைப் பிளந்தார்கள்!

ஏற்கெனவே பனாரஸ் ஸ்டேட் பாங்க், அப்போலோ டியூப்ஸ், கோவை அன்னபூர்ணா, கார்வாரே பெயிண்ட்ஸ், தேவ் ஷுகர்ஸ் என தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்தியா முழுவதும் ஏரான கம்பெனிகளை ஏதோ மார்க்கெட்டில் காய்கறி வாங்குவது போல் வாங்கிக் குவித்தவர் இவர்.

"Take over Tycoon" என்று ராஜரத்தினம் புகழ் பெற்றதில் வியப்பென்ன?

அப்பா பழனியப்பன் ஒரு விவசாயி. அம்மா விஜயலட்சுமி ஒரு பள்ளி ஆசிரியை. பி.எஸ்.ஸி., பி.எ., எம்.பி.ஏ. படித்தார் மகன். கூடவே சட்டமும் பயின்றார். நிர்வாகத்தில் முடிவுகள் எடுப்பது குறித்து டாக்டர் பட்டத்துக்கு ஆய்வறிக்கை சமர்ப்பித்துள்ளார்.



முதலில் கவனம் போனது மார்க்கெட்டிங் பக்கம்தான். A to Z Corporation என்ற நிறுவனம் துவங்கி அதன் மூலம் பல பொருட்களை வெற்றிகரமாக விற்பனை செய்தார். 'புதிய கம்பெனிகள் துவங்குவதற்குப் பதில் நலிவடைந்த நிறுவனங்களை வாங்கி நஷ்டத்தை லாபமாக்கிக் காட்டினால் என்ன?' என்று களத்தில் இறங்கினார். குறுகிய காலத்தில் கோடிகளுக்கு அதிபதியானார். உடனே 'சில தமிழக அரசியல்வாதிகளின் பினாமி இவர்' என்றொரு குற்றச்சாட்டு அடிபட்டது...! இதை மறுக்கிறார் ராஜரத்தினம்.

"நான் பதினைந்து ஆண்டுகளில் இந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறேன் என்றால், அதற்குக் காரணம் எனது உழைப்பு. அரசியல்வாதிகளுடனான தொடர்பை எந்த அளவுடன் நிறுத்திக் கொள்வது என்று எனக்குத் தெரியும்!" என்கிறார்.

"நலிவடைந்த தொழில்களைக் குறிவைத்து வாங்க அவசியம் என்ன?"

"புதிய தொழில் துவங்குவதில் பல சிரமங்கள் உண்டு. நிலம், நீர், கட்டடம், இயந்திரங்கள், மின் சப்ளை என்று அடிவாரத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும். நலிவடைந்தவற்றை வாங்குவதில் இதெல்லாம் ரெடிமேடாகக் கிடைக்கின்றன. நஷ்டம் எதனால் என்று கவனமாக அத்துறை வல்லுனர்கள் உதவியுடன் ஆராய்ந்து, கண்டு பிடித்து விட்டால், அதைக் கட்டுப்படுத்தி, சரி செய்து விடலாம்."

"உங்கள் வெற்றியின் ரகசியம் என்ன?" என்று கேட்டால் ராஜரத்தினம் சொல்கிறார்.

"நான் ஒவ்வொரு முடிவெடுக்கும் போதும் அது calculated risk ஆகத்தான் இருக்குமே தவிர, அதில் சூதாட்ட அணுகுமுறை இருக்காது."

தமிழகத்தில் தொழில் துறை வேகமாக முன்னேறியிருக்கிறது என்பது ராஜரத்தினத்தின் கருத்து. "சில அரசியல்வாதிகளும் பத்திரிகைகளும் 'முன்னேற்றமில்லை' என்று திரும்பத் திரும்பச் சொல்வதால் மட்டுமே அது உண்மையாகி விடாது. தேசிய அளவிலான சராசரி வளர்ச்சியைவிட, தமிழகத்தின் வளர்ச்சி விகிதம் உயர்வாக இருக்கிறது" என்கிறார்!

ஜெயகாந்தன், டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தியின் எழுத்துக்கள் ராஜரத்தினத்துக்குப் பிடிக்கும். பெரிய பலம் என இவர் கருதுவது சுமார் இருபது சகாக்கள். அத்தனை பேரும், இவருடன் கூடப் படித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் தானோ என்னவோ, தம் நிறுவனங்களுக்கு இவர் வைத்துள்ள பெயர், 'பி.ராஜரத்தினம் அண்டு அசோசியேட்ஸ்'.

இவர் நிறுவனத்தின் சின்னம் ஒரு தீக்கொழுந்து இணைந்த படத்துடன் 'அக்னி' என்ற சொல்!

— எஸ். சந்திரமௌலி

சிறகடிக்கும் சிறைக் குழந்தைகள்!

பல்வேறு குற்றங்களுக்காக நீண்ட காலம் சிறையிலிருக்கும் பெண்களின் குழந்தைகள். சிறைக்குள்ளேயே வளர வேண்டியிருக்கிறது. இந்தக் குழந்தைகளுக்கு நல்ல கல்வி வசதியோ, போஷாக்கான உணவோ, சுதந்திரமோ இல்லை. எந்தத் தவறும் செய்யாது போனாலும் குற்றவாளிகள் போலவே இந்தக் குழந்தைகளும் சிறையில் வாட வேண்டியிருக்கிறது.

இந்த அவலத்தை மாற்றி அமைக்க கர்நாடகாவின் சிறைத் துறை அடிஷனல் டைரக்டர் ஜெனரல் சீனிவாசனும் பெங்களூர் சென்ட்ரல் சிறையின் சீனியர் சூபரின்டென்டென்ட் ஜெயராமையாவும் முடிவு செய்தனர். இதன்படி சிறையில் உள்ள குழந்தைகள் விளையாட பொம்மைகள், மூன்று சக்கர சைக்கிள், விளையாட்டுக் கார், ஆடும் குதிரை இவை தரப்பட்டுள்ளன. நல்ல ரெடிமேட் ஆடைகள், புரதச் சத்து மிகுந்த உணவு, தடுப்பூசி போன்ற மருத்துவப் பராமரிப்பு எல்லாம் வழங்கப்பட்டுள்ளன.

இதைவிட முக்கியம், ஆறு வயதான இரு குழந்தைகளை சிறைக்கு வெளியே உள்ள ஒரு நர்சரி பள்ளியில் சேர்த்து உள்ளனர். பெங்களூர் சென்ட்ரல் சிறையில் மொத்தம் ஏழு குழந்தைகள் இருந்தாலும் இவை இரண்டு மட்டுமே ஆறு வயதைப் பூர்த்தி செய்தவை. மற்றவையும் இந்த வயதில் இதே சலுகையைப் பெறலாம்.

சிறைக் குழந்தைகளும் வெளி உலகைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்; மற்ற குழந்தைகளுடன் சகஜமாக உறவாடி தன்னம்பிக்கை பெற வேண்டும் என்பதே நோக்கம்.

தமது பொறுப்பில் உள்ள பத்தொன்பது மாவட்ட சூப்பிரின்டென்டென்டுகளுக்கும் ஆறு சென்ட்ரல் ஜெயில்களுக்கும் இந்தச் சீர்திருத்தங்களைக் கடைப்பிடிக்குமாறு அறிக்கை அனுப்பியுள்ளார் சீனிவாசன்.

பிரதமர் தொடங்கி, முதல்வர்கள், மந்திரிகள் பலரும் தங்கள் பதவிகளுக்கு ஆபத்து வந்து விடக்கூடாது என்பதற்காக, யாகங்கள், ஹோமங்கள் என்று செய்யப் போக, இந்த ஜுரம் தற்போது அதிகாரிகளுக்கும் பரவி விட்டது.

பாரத் ஓவர்சீஸ் வங்கி அடைந்துள்ள பல கஷ்டநஷ்டங்களுக்கும் ஏதோ சில துர்தேவதைகள்தாம் பொறுப்பு (நிர்வாகத்தில் உள்ளோர் அல்ல!) என்பதாகக் கருதி, பரிகாரம் காண்பதற்காக சமீபத்தில் சென்னையில் ஓர் உயர் அதிகாரி, வேத வித்துக்களை அழைத்து யாகம் நடத்தினார். வங்கிக் கட்டடத்துக்குள்ளேயே நடந்த இந்த ஹோமத்துக்காக ஆன பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவை அவரா கொடுப்பார்? வங்கியே ஏற்க வேண்டியதாயிற்று. அதாவது, வரி செலுத்தும் இந்த நாட்டின் மக்கள் ஏற்றார்கள்!

இப்போது இதே மாதிரி கேரளாவிலிருந்தும் ஒரு நியூஸ் வந்திருக்கிறது என்றாலும் அதிலே ஆறுதலான ஒரு இணைக்கதையும் உண்டு.



• "அட்ரஸ் மாறி வந்துட்டோம்னு நினைக்கிறேன்."

கொச்சியிலுள்ள சி.பி.ஐ. அலுவலகத்துக்கு ஏதோ 'சனி தசை' பிடித்திருப்பதாகவும் அதனால்தான் சமீப காலமாக ரொம்ப சிக்கல்களைச் சந்திக்க வேண்டியிருப்பதாகவும் சி.பி.ஐ. மேலதிகாரிகள் கருதியிருக்கிறாகள்! அதற்குப் பரிகாரமாக ஒரு ஹோமமும் ஏற்பாடு பண்ணியிருக்கிறார்கள்!

அதுவரை எப்படியோ, ஹோமம் நடந்த பிறகு நிஜமாகவே சனி பிடிக்க ஆரம்பித்தது! பீதாம்பரன் என்பவர், இந்த ஹோமத்தைக் கண்டித்து வழக்கு தொடர்ந்துள்ளார். 'மதச் சார்பற்ற நாட்டில், அரசு அலுவலகத்தில் ஒரு குறிப்பிட்ட மதச் சடங்கு நடத்துவது எப்படி சரியாகும்?' என்று கேட்டுள்ள அவர் கருத்தை கோர்ட் ஏற்று, ஹோமம் பற்றி விவரம் கேட்டு சி.பி.ஐ.க்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது.!

இந்த வழக்கிலிருந்து சி.பி.ஐ.யை அது நடத்திய ஹோமம் காப்பாற்றினால் சரி!

பெங்களூரிலிருந்து : **அமுதவன்**
திருவனந்தபுரத்திலிருந்து : **எஸ்.எஸ்.மணி**



Your home needs all the modern conveniences : Washing machine, TV, VCR, Refrigerator, etc. Here is the best way to get them. Consumer loans from ***Dhanalakshmi Bank.***

The repayment terms are easy and the procedure quite simple. So, next time, when you plan to buy latest conveniences, remember ***Dhanalakshmi Bank.***

For over six decades we have helped housewives make their lives a lot easier.

Get in touch with us. We'll be with you all the way.

* We also offer Home loans and Vehicle loans.

THE DHANALAKSHMI BANK LIMITED
Corporate Office: Th[illegible]sur - 680 001

CHAIRMAN: T.S. PATTABHIRAM

MANAGING DIRECTOR : T.S. RAMAKRISHNAN

T H E   B A N K   F O R   T H E   F U T U R E

SASI / 595 / 94

கி.ராஜேந்திரன்

அதிர்ச்சியில் உறைந்துபோன நிலையிலிருந்து ராஜகமல் தன்னை உசுப்பி விட்டுக் கொண்டு, அவசரமாகச் சீருடை தரித்து, துப்பாக்கியில் புல்லெட்டுகள் சரிபார்த்து, இடை பெல்ட் உறையில் செருகி நிமிர்ந்தபோது, நளினி அவன் சீருடையை நெஞ்சப் பகுதியில் கசங்கப் பற்றி, "ஜாக்கிரதை" என்றாள்.

கன்னத்தில் இதழ் பதித்து அவளை ஒதுக்கி நடக்க ஆரம்பித்த போது, "இந்தாங்க" என்றாள். "தேவைப்படலாம்."

திரும்பி ஐந்து செல் டார்ச்சை வாங்கிக் கொண்ட போது, தான் மறந்ததை அவள் எடுத்துத்தர நேர்ந்ததில் வெட்கமும் கோபமும் போட்டியிட, "தாங்க்ஸ்" என்று கடுகடுப்புடன் கூறி, இரண்டு இரண்டு படிகளாகத் தாவி இறங்கி, புல்லெட்டை ஒரே 'கிக்'கில் கிளப்பித் தாவினான்.

அது அவனுக்கு எப்போதுமே நம்பிக்கை தரும் வாகனம். சொன்னபடி கேட்டு நடக்கும் ஒரு வாட்ட சாட்டமான அராபிய குதிரை மாதிரி. கனம், வேகம், இலகுவான இயக்கம், 'ஃபட் ஃபட்' என்ற சீரான, ஆர்ப்பாட்டமற்ற ஒலி எல்லாம் உறுதியையும் லாகவத்தையும் ஊட்டின.

இலேசான தூறல், சோடியம் வேப்பர் ஒளியில் தங்கத் துகள்கள்.

சி.பி.ஆர்.சாலை, கிரீன்வேஸ் ரோடில் சந்திக்கும் இடத்தில் வெள்ளை போலீஸ் மாருதி ஜீப்பில் சசிவர்ணம்.

"எங்கே அவங்க?"

"மாயமா மறைஞ்சுட்டாங்க."

"உளறாதே!"


"இடது பக்கம் திரும்பினாங்க; நான் முனைக்கு வந்தப்ப அவங்களை பீச் ரோடிலேயும் காணோம்; துர்காபாய் தேஷ்முக் சாலையும் வெறிச்!"

"ஏறு!"

புல்லெட் சசியையும் கூடுதலாகச் சுமந்து சாலை ரிப்பன்களை விழுங்க, அடையாறு பாலம் முன்னதாக வலப் புறம் நிறுத்தி, டார்ச் ஒளியை வட்ட மடிக்கச் செய்தான். "என்ன அது!" மோட்டார் சைக் பளபளத்தது. 'ரேர் வியூ மிர்ரர்' கிளின்

"ஓடுய்யா! கிரீன்வேஸ் சாலை பக்கம் கேட். அங்கே செக்யூரிடியை 'வார்ன்' பண்ணு. நான் இங்கே மதிலேறி குதிச்ச மினிஸ்டர் வீட்டுக் காம்பவுண்டுக்குள் புகுந்திருப்பதைச் சொல்லு!"

முக்கால் உஷா வேகத்தில் சசி ஓட, புல்லெட்டை ஸ்டாண்டில் லைட் கல்லூரிக் நிறுத்தி, காலத்திய 'ஹை ஜம்ப்' ரிகார்டை நினைவில் கொண்டு, சுவரைத் தாவிக் கடக்க ஜட்ஜ் வீடுகள். மேலும் ஒரு



2

சுவர் தாண்ட, மந்திரி மாரிசாமி வீட்டுத் தோட்டத்தில் இருந்தான்.
பார், பார் என்ற உறுமலுடன் 'கிரீச்' ஒலியும் சேர்ந்து, இருட்டில் நெஞ்சில்
'திடுக்'கை ஏற்படுத்தியது. டார்ச் ஒளி திருப்பி, காதல் வயப்பட்ட இரு பூனை
களின் நெருக்கம் கண்டு புன்னகை பூத்தான். ஒளியில் அவை சிலையாவதை
விரும்பாது நகர்த்தி, "குளிருக்கு இதம்தான்; கேரி ஆன்" என்று முணுமுணுத்
தவாறே புல் தரையில் இலைகள் சரசரக்க விரைந்தான்.

பங்களாவைச் சுற்றிக் கொண்டு வாசலுக்கு வந்த போது செக்யூரிட்டி ஒருவன்
தடுத்து, "இங்க யாரும் வரலை, உங்களைத் தவிர" என்றான். "சரியை ஜீப்புக்குத்
திருப்பி அனுப்பிட்டோம்; நீங்களும்..."

ராஜ்கமல் ஐ.டி.கார்டை எடுத்து நீட்டி, "எனக்குக் குறுக்கே நிற்குமுன்
யோசி" என்றான்.

செக்யூரிட்டி நிஜமாகவே முகவாய் தடவ, அவன் ஒரு முடிவுக்கு வருமுன்
இவன் படிகள் ஏறி, காலிங் பெல் அழுத்தியிருந்தான். பொறுமை இழந்து
கதவைத் தடதடவென்று தட்டவும் செய்தான்.

"வரேன், வரேன்" என்ற கடுகடுப்பான பெண் குரலையடுத்து, வாசல்
விளக்கு எரிந்தது. ஜன்னல் வழியே குதிரை போன்ற நீளமுகம், மூக்குக் கண்
ணாடி அணிந்து பார்த்தது.

"யாரு?"

"போலீஸ்!"

செக்யூரிட்டி அருகில் செயலற்று நிற்பது கண்டு, உண்மை என்று உணர்ந்து,
வாசல் கதவு திறந்தாள். ஒட்டடைக்குச்சி!

"என்னவேணும்?"

"அமைச்சர் ஆபத்துல இருக்கார்; உடனே பார்க்கணும்."

"ஆபத்துல இருக்காரா?.. ஹி ஹி ஹி.." குதிரை தும்முவது போல் சிரித்தாள்.
"ஆபத்துல இருக்காரா?.. ஹி ஹி ஹி.."

"ஆபத்து. அவர் பெட்ரூமுக்குள்ள புகுந்தாச்சு. நீங்க
இப்ப உங்களுக்குத்தான் ஆபத்து. அவர் பெட்ரூமுக்குள்ள புகுந்தாச்சு. நீங்க
அவரையோ அவர் உங்களையோ பார்க்கிற நிலையிலே இல்லே. பிடிவாதம்
பிடிச்சா அவர் கோபத்துக்கு ஆளாவீங்க."

"ஒரு வேலைக்காரி கிட்டே விவாதம் பண்ணிக்
கிட்டிருக்க எனக்கு அவசியமில்லே.
நகரு."

ஓ து க் இ



முன்னேற, ''மெய்ட் இல்லே; மனைவி'' என்றாள்.

கணப்பொழுது அசைவற்று, பின்னர் மெல்லத் திரும்பி, ''ஸாரி'' என்றான்.

''பரவால்லே'' என்றாள். புன்னகையில் சோகம் இழையோடியது.

''பிளீஸ், எது பெட்ரூம்?''

தோள் குலுக்கி, ''பின் விளைவுகளுக்கு நான் பொறுப்பில்லே'' என்றபோது கண்ணாடி நழுவி மூக்கு நுனியில் ஒட்டிக் கொண்டு ஒரு கவர்ச்சியை உண்டாக்கியது. அதற்கு மேலாக அவனைப் பார்த்து, படிக்கட்டுகளைச் சுட்டிக் காட்டி, ''மேலே ஏறினதும் வலப்புறம் திரும்பினா, இடது பக்கம் முதல் அறை'' என்றாள்.

''தேங்க்ஸ்'' என்று கூறி, படிகளை மூன்றில் ஒன்றாகக் குறைத்து ஏறி, படபடப்புடன் கதவு தட்ட, பதிலில்லை. பின்வாங்கி, வேகமாக ஓடி வந்து தோளினால் தாக்க, ''தடால்''!

திறந்த கதவு திகைக்க வைத்தது. அந்தப் பெண் அவசரத்துடன் ஒரு போர்வையை விரித்து தன் உடலை மறைத்துக் கொண்டாள். மந்திரிக்கு அதுவும் எட்டாமல் கட்டில் விளிம்பில் கரங்களால் மானத்தை மறைத்து உட்கார்ந்திருந்தார். கோபத்தில் அவர் முகம் சிவந்து ஜிவுஜிவுக்க, ''என்ன இது... யார் நீ... யாரைக் கேட்டுக்கிட்டு வந்தே?''

''ராஜ்கமல், எஸ்.பி.ரேங்க். ஸ்பெஷல் ஸ்குவாட், செக்யூரிட்டி. உங்க உயிருக்கு ஆபத்து!''

''யார்கிட்டேயிருந்து?''

''ரெண்டு புலிங்க சுவர் ஏறி குதிச்சு, இந்த காம்பவுண்டுக்குள்ளே இறங்கினாங்க. ஈரமண்ணுல ஷூ தடம் பார்த்தேன்.''

''புலியாவது, பூனையாவது? இங்க யாரும் இல்லே.''

''பூனைங்க நிறைய இருக்கு தோட்டத்திலே. காதல் பண்ணிட்டிருக்கு. இந்தப் பொண்ணு யாரு?''

''நீ வெளியே போ! கெட் அவுட்!''

ராஜ்கமல் அங்கே இருந்த வார்ட்ரோபைத் திறந்தான். பட்டு, டெரிகாட் கட்சிக் கரையுடன் வேஷ்டிகள்; பலரகச் சேலைகள், ஒதுக்கினான். ஒருவரையும் காணோம்.

''கெட் அவுட்! கெட் அவுட்!'' கூச்சல்களை லட்சியம் செய்யாமல், சில திரைச் சேலைகளை நகர்த்தி, பாத்ரூமுக்குள் எட்டிப் பார்த்து, ஏமாந்து திரும்பி வெளியேற, ''கெட் அவுட்''டுகள் பின்தொடர்ந்தன.

குதிரை முகம் புன்னகைத்தது. ''இழேயும்

''நீ யாருன்னே எனக்குத் தெரியாது. முன்பின் தெரியாத என்கிட்டே வந்து கடன் கேட்கறியே?''

''அதுக்கு என்னங்க பண்ணுறது... தெரிஞ்சவங்க கிட்டேயெல்லாம் ஏற்கெனவே வாங்கிட்டேனே!

– வடுவூர் சிவ.முரளி

எல்லா அறைகளையும் திறந்து பார்த்துடுங்க. இது என் பெட்ரூம்...'' என்றது தேவையின்றி.

கடன் இழவே என்று எல்லாவற்றையும் நோட்டம் விட்டான், தோல்வியில் உள்ளம் சிறுத்ததை மறைத்துக் கொண்டு.

''டாட்டா'' என்றாள் கிண்டல் வெளிப்பட.

மாருதி ஜீப்பில் காத்திருந்த சசியை நெருங்க உடலே கனத்தது. ''பறந்துட்டாங்க.''

''இன்னொரு சுவர் ஏறி குதிச்சு வேற மந்திரி வீட்டுக்குப் போயிருக்கலாம்.''

இருக்கலாம்; இந்த வட்டாரம் பூரா மந்திரிங்க. ஒவ்வொரு வீடாகக் கதவு தட்டி அவமானப்பட்டுத் திரும்ப முடியாது... அதோட அப்படி அந்தப் புலிகள் நடந்துக்குவாங்களான்னு யோசிக்கிறேன்.''

''பின்னே...?''

''அவங்க மந்திரி வீட்டுக்குள்ள நுழையறதா நாம நம்பணும்னு நினைக்கிறாங்க; அப்படி ஒரு தோற்றத்தை உருவாக்கிட்டு வேற ஏதோ காரியத்துல இறங்கறாங்க.''

''என்ன காரியம்?''

''எனக்கு எப்படித் தெரியும்? தெரிஞ்சதுன்னா இப்படி உங்கிட்ட பேசிக்கிட்டா நிற்பேன்?''- எரிந்து விழுந்தான்.

முகம் ஏமாற்றத்தை உணர்த்த, புரிந்து கொண்ட நளினி அவன் தலையை நெஞ்சில் தாங்கினாள். ''என்ன ஆச்சு? சொல்லுங்க!'' என்று தூண்டினாள்.


சொன்னான். சுமை குறைவது போலிருந்தது. ஒரு மாயை.

''பைக் அங்கேயே இருக்கு. ஆளுங்களைக் காணோம். ஹெலிகாப்டரா வந்து கொத்திக்கிட்டுப் போச்சு?''

''ஹெலிகாப்டர் அங்க எப்படி இறங்க முடியும்? புஷ்பக விமானம் வந்தாத்தான் உண்டு.''

''மந்திரியாம் மந்திரி! பெண்டாட்டியைப் பக்கத்திலேயே வைச்சுக்கிட்டு வைப்பாட்டியைக் கொஞ்சறவன் ஒரு மனுஷனா? இந்தாளுதான் ஊருக்கு உபதேசம் பண்ணுறான். அயோக்கிய ராஸ்கல்! எப்படி சகிச்சுக்கிட்டு இருக்கா? என்ன பொண்ணு அவ?''

''கணவனே கண் கண்ட தெய்வம்



டைப்?"

"அவ இடத்திலே நான் இருந்தா புருஷனைக் கொன்னுடுவேன்!"

"கொன்னுட்டு தூக்குலயும் தொங்குவே! ஆனா மனைவி உயிர்த்தியாகம் பண்ணற அளவுக்கு அவன் தகுதியுள்ளவனா?"

மௌனமானாள்.

"உன்னைவிட அவள் கெட்டிக்காரி. ஒரு வேளை சமயம் வரக் காத்திருக்காளோ என்னமோ?"

"பதுங்கும் பெண் புலி?"

"பூனை கூட டேஞ்சர்தான். பூனை பிராண்டினாலும் கடிச்சாலும் ரேபீஸ் வரும். நாய் கடிச்சா வருமே அதுமாதிரிதான். வெறி பிடிச்ச பூனை மாதிரியே ஊளை யிட்டுச் சாவான்!"

அவள் நடுங்க, அவன் அணைத்து அமைதிப்படுத்த வேண்டியதாயிற்று.

"**வா**ய்யா ஹீரோ! பெரிய ஜீரோ வாங்கின போல!"

"சசி சொன்னானில்ல?"

"ஃபுல் ரிப்போர்ட் தந்தான். நான் அப்பவே சொன்னேனில்ல, தடாவுல உள்ளே தள்ளுய்யான்னு. இப்ப அவங்களையும் கோட்டை விட்டாச்சு; அவங்க இட்டம் என்னன்னும் தெரியலே!"

"நான் ரொம்ப நொந்து போயிருக்கேன் ஸார், குத்தாதீங்க... அந்த ஃப்ளாட் யாருக்குச் சொந்தம்? மோட்டார் சைக்கிள் இவங்களுக்கு எப்படி கிடைச்சது?"

"ஃப்ளாட் சாவி கொடுத்தவன், ஒரு மோட்டார் சைக்கிள் விட்டு வைக்க மாட்டானா என்ன?"

"விசாரிச்சீங்களா?"

"உம்... ஓனர் யாருன்னே தெரியாதுங்கறாங்க. அப்பப்ப யாராவது வருவாங்க; ரெண்டு நாள் தங்கிட்டுப் போயிடுவாங்கன்னு சொல்றாங்க. ஒரு கம்பெனி கெஸ்ட் ஹவுஸ் மாதிரி இருக்கு. ஆனா கம்பெனின்னா ஒளிவு மறைவு தேவையில்லே."

"மோட்டார் சைக்கிள் ரிஜிஸ்தர் நெம்பர்?"

"நம்பர் பிளேட் மாற்றியிருக்கு. அந்த நெம்பர்ல ஒரு மெர்ஸிடஸ் பென்ஸ் ஆர்.டி.ஓ.ல ரிஜிஸ்தர் ஆகி ஓடிக்கிட்டு இருக்கு."

ஃபோன் ஒலித்தது. எக்ஸ்டென்ஷனைக் கை காட்டினார் டெபுடி கமிஷ்னர். எடுத்தான்.

"யாருய்யா அது ராஜ்கமல்?" ஐ.ஜி.குரல்.

"எஸ்.பி.ராங்க் ஸார். ஸ்பெஷல் செக்யூரிடி ஸ்குவாட்."

"ஏன்யா வேண்டாத வேலையிலேயெல்லாம் இறங்கறான்? தலை வேதனை! டிபார்ட்மெண்டுக்கு கெட்டபேரு."

"ஏன் சார்! என்ன ஆச்சு?"

"இன்னும் என்னய்யா ஆகணும்? மினிஸ்டர், ஸி.எம். கிட்டே புகார் பண்ணியிருக்காரு. ஸி.எம். என்னைக் கூப்பிட்டு, 'பப்ளிக் விஷயத்துக்கும் பர்ஸனல் மேட்டருக்கும் வித்தியாசம் தெரியாதா?'ன்னு கேட்கறார்."

"ஒரு சாதா ஆளு வைப்பாட்டி வைச்சிருந்தா அது பர்ஸனல் மேட்டர் ஸார்; ஆனா மந்திரின்றபோது பப்ளிக் இன்ட்ரஸ்ட் வந்துடும்."

"அதுக்காக பெட்ரூம்ல பூந்துடறதா? என்னய்யா பெரிய தர்மோபதேசம் பண்றே! தட் ஃபெலோ இஸ் அண்டர் ஸஸ்பென்ஷன்!"

"ஸார்! ஸார்!"

"ஸாராவது மோராவது! ஸி.எம். சொல்லியாச்சு. நான் ஒண்ணும் செய்யறதுக்கில்லே. ஆள வீட்டுக்கு அனுப்பு. டிபார்ட்மெண்ட்ல என்கொயரி நடத்தறதா ஃபைல் ஓபன் பண்ணு. கோ ஸ்லோ; புரொஸீட் பண்ணாதே! ஆறப்போடு. மந்திரி மகாத்மியமெல்லாம் வெளியே வந்தா நல்லாருக்காது. அப்புறம் ஸி.எம். என்னையே வீட்டுக்கு அனுப்பிடுவார். புரியுதா? புரிஞ்சுதாய்யா?"

"யெஸ் ஸார்."

ஃபோனைக் கீழே வைத்து டெபுடி கமிஷ்னர் நிமிர்ந்தார். "நான் அப்பவே சொன்னேன்..."

"எத்தனை தடவை ஸார் அதையே சொல்லுவீங்க?" என்றான் எரிச்சலுடன். "இப்ப என் பதவி முக்கியமில்லே; என் அவமானமும் முக்கியமில்லே; அந்தப் புலிகள் என்ன ஆனாங்க? என்ன பண்ணப் போறாங்க?"

"ஐயோ!" என்றார் டெபுடி கமிஷ்னர். "உனக்கென்னய்யா, உன் படிப்புக்கு இந்த வேலை போனா வேற பெரிய கம்பெனி உத்யோகம் கிடைக்கும். என்னையில்ல மாட்டி வைச்சிருக்கே- ரெட்டைப் புலிங்க மத்தியிலே!"

தலையைப் பிடித்துக் கொண்டார்.

(தொடரும்)

டிரஸ்ட் ப்ளஸ்



INVITES DEPOSITS

Fixed Deposits will be accepted at the following rates of interest and subject to the terms and conditions as indicated in the form of application of deposit available at the administrative Office and other branch offices of the Company.

DEPOSIT SCHEMES

CUMULATIVE DEPOSIT SCHEME			FIXED DEPOSIT SCHEME	
Period in Months	For Rs. 1000 Deposit Amount Payable on Maturity	Effective Annual Yield	Period in Months	Rate of Interest per annum Monthly Quarterly
12 Months & 1 Day	Rs. 1150/-	15.00%	12 Months & 1 Day	
24 Months & 1 Day	Rs. 1334/-	16.05%	24Months & 1 Day	
36 Months	Rs. 1518/-	17.27%	36 Months	
48 Months	Rs. 1745/-	18.63%	48 Months	14% 14.16%
60 Months	Rs. 2006/-	20.12%	60 Months	

RECURRING DEPOSIT SCHEME (Minimum Rs. 500/-)			
Period in Months	Rate of Interest Per Annum	Maturity Value (for Rs. 500)	For Every Additional Rs. 100/-
12 Months & 1 Day	14%	Rs. 6480/-	Rs. 1296/-
24 Months & 1 Day		Rs. 13915/-	Rs. 2783/-
36 Months		Rs. 22470/-	Rs. 4494/-

1. Interest warrants payable at par at all branches of SBI.

Information required to be specified as per Non-Banking Financial Companies (Reserve Bank) Direction, 1977 and Non Banking Financial Companies and Miscellaneous Non-Banking Financial Companies (Advertisement) Rules, 1977, are given below.

A. Name of the Company : The Investment Trust of India Ltd.

B. Date of Incorporation : 2nd August 1946

C. Business carried on by the Company and its subsidiaries with details of branches or units, if any : Business :Hire Purchase Financing, Investments, Leasing, Industrial Financing, Mortgage Financing etc. Subsidiary : I.T.I. Pioneer AMC Ltd. And I.T.I. Capital Markets Ltd.
Branches : Madras, Coimbatore, Dindigul, Erode, Kallakurichi, Madurai, Nagercoil, Salem, Thanjavur, Trichy, Tirunelveli, Tirupur, Tuticorin, Vellore, Karaikal, Pondicherry, Calicut, Cochin, Kottayam, Trichur, Trivandrum, Hubli, Bangalore, Mysore, Hyderabad, Anantapur, Nellore, Proddatur, Rajahmundry, Visakhapatnam, Vijayawada, Bombay, Calcutta, New Delhi, Rajkot, Surat. Regd. Office: 117, Nungambakkam High Road, Madras 600 034.

D. Brief Particulars of the Management of the Company.
The Company is managed by the Managing Director under the supervision, direction and control of the Board of Directors.

E. Name, address & occupation of the Directors.
Mr. B.H. KOTHARI, Chairman & Managing Director, "Kothari Bagh", 11, Nungambakkam High Road, Madras-600 034, Industrialist. Mr. A.L. MUDALIAR, "Aranit", 858, Poonamallee High Road, Kilpauk, Madras - 600 010, Business Executive & Management Consultant. Mr. G.K. SUNDARAM, "Ranikottai" Circuit House Road, Coimbatore 641 018, Industrialist. Mr. G CHIDAMBAR, 101-A, Ismailpuri, 2nd St. Off : Velachery Road, Madras 600 032, Former Managing Director-LIC. Mr. N. SRINIVASAN, T-18, Sixth Avenue, Besant Nagar, Madras 600 090, Chartered Accountant. Mr. RAM GANAPATHI, No. 27, "Ashok Crescent", D.L.F. Kutbg Enclave, Phase-I, Gurgaon, Haryana - 122 001. Former Chairman of IDPR. Mr. C.R. RAMAKRISHNAN, "Meenakshi", No.4, Sir P.S. Sivaswamy Road, Mylapore, Madras 600 004, Former Joint Managing Director of Larsen & Toubro Ltd. Mr. M.R. SHAH, A-23/24, Woodlands Apartments, Peddar Road, Bombay 400 026, Business.

ICRA RATING
MAA+
HIGH SAFETY

ஒரு பிக்செட் டெபாசிட் முதிர்வடையும்வரை, வாழ்க்கை பல ஆண்டுகள் காத்திருக்காது என்பது எங்களுக்குப் புரிகிறது

➤ ஒரு பிக்செட் டெபாசிட்டில் நீங்கள் முதலீடுசெய்யும்போது, முதிர்வு காலம் முடியும் முன்பே பணத்தை எடுத்துக்கொள்ளும் எண்ணம் உங்களுக்கு அநேகமாக இருக்காது. ஆனால் அவசரத் தேவைகள் வரத்தான் செய்கின்றன. அத்தகைய காலங்களில், போட்ட பணத்தை மிக விரைவாக திரும்பப் பெறவே நீங்கள் விரும்புவீர்கள். ➤ ITI டிரஸ்ட் ப்ளஸ் இதையறிந்து, நீங்கள் எண்ணிப் பார்க்கமுடியாத அளவுக்கு முன்பே உங்கள் பணத்தைத் திருப்பித் தந்துவிடுகிறது. அதற்கு அறுபது நிமிடங்கள் ஆனாலே அதிகம்தான். ஆனால், மிக வேகமாக செயல்படுவது மட்டுமே எங்களின் சிறப்பம்சமா? அதே வேகத்துடன் நாங்கள் வழங்கும் மற்ற சேவைகளையும் சற்று பாருங்கள். ➤ இலவச வரி ஆலோசனை *. எங்களது 36 கிளை அலுவலகங்கள் மூலம் எங்களுடன் நீங்கள் எளிதில் தொடர்புகொள்ளலாம். இன்னும் எத்தனையோ 'கூடுதல் நன்மைகள்' எடுத்துக்காட்டாக, டெபாசிட் செய்ய நீங்கள் எங்களிடம் வரவேண்டிய சிரமமில்லை; நாங்களே உங்களிடம் வருகிறோம். ➤ இவை அனைத்தும் ITI தரும் கூடுதல் நன்மைகள். இந்தக் காரணங்களால்தான், தென்னிந்தியாவிலுள்ள பெரும்பாலான குடும்பங்கள் ITI-யில் முதலீடு செய்வதில் முனைந்துள்ளன. இது நம்பிக்கையின் அடிப்படையில் உருவான மரபு. இப்படி இன்னும் எத்தனையோ! எனவே சிந்தித்து செயல்படுங்கள். ITI-யைப் பொறுத்த வரை, இதை உடனடியாகச் செய்வது எளிது. எனினும், நீங்கள் விரும்பினால், இதற்கு ஒரு மணி நேரம்தான் ஆகும். ITI எனில் கூடுதலான நன்மைகள் பல!

A TRADITION OF TRUST
SINCE 1946

தி இன்வெஸ்ட்மென்ட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா லிமிடெட்.

ஒரு H. C. கோத்தாரி குரூப் கம்பெனி

"மஷ்கூர் பில்டிங்ஸ், 1, கிருஷ்ணமாசாரி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-600 034.
தொ.பே: 8276297, 8274885, 8271691, 8274871.

* இந்த சேவை சென்னைக்கு மட்டுமே விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இந்த சேவையால் ஏற்படும் பொறுப்புகளுக்கு ITI பொறுப்பாளி அல்ல.

(F) Profits of the Company before and after making provisions for tax for the three financial years immediately preceding the date of advertisement				(G) Dividend declared by the Company in respect of the said year (Rupees in lakhs/percentage)	
	Profit before Depreciation & taxation	Profit before taxation	Profit after taxation	Amount (Rs. in lakhs)	Percentage
	(Rupees in lakhs)				
31-3-94	752.74	434.91	411.91	76.27	35
31-3-93	474.37	307.08	291.08	76.27	35
31-3-92	312.81	187.44	183.19	56.10	28

(H) Summarised financial position of the Company as appearing in the two latest Audited Balance Sheets:

LIABILITIES	31-3-94 (Rs. in lakhs)	31-3-93 (Rs. in lakhs)	ASSETS	31-3-94 (Rs. in lakhs)	31-3-93 (Rs. in lakhs)
Share Capital	217.88	217.67	Fixed Assets	3239.01	2438.88
Reserves & Surplus	1233.31	897.35	Investments	741.13	215.66
Secured Loans	3229.69	2766.40	Current Assets, Loans & Advances	8671.19	6066.06
Unsecured Loans	5290.77	2802.41	Miscellaneous Expenditure	14.79	16.22
Current Liabilities	2535.08	1916.60			
Provisions	159.39	136.39			
	12666.12	8736.82		12666.12	8736.82

Note : Contingent Liabilities not provided for

(i) On partly paid Shares and Debentures Rs. 3.08 lakhs
(ii) Sales tax on lease contracts under writ petitions Rs. 22.35 lakhs

I. The amount which the company can raise by way of deposit under Reserve Bank of India directions Rs. 143.64 crores.
Aggregate of deposits actually held on the last day of the immediately preceding financial year, viz 31-3-94 Rs. 37.88 crores.

J. The Company has no over due deposits other than unclaimed deposits.

K. It is hereby declared that :-
(i) The company has complied with the applicable provisions of the directions.
(ii) The compliance with the directions does not imply that the repayment of deposits is guaranteed by the Reserve Bank of India.
(iii) The deposits accepted by the Company are unsecured and rank pari passu with other unsecured liabilities.

The above text of this advertisement has been approved by the Board of Directors on 27-5-94

(By order of the Board)
For The Investment Trust of India Limited

P.S. Balasubramanian
Chief Executive and Secretary.

Note : A copy of this text duly signed by a majority of the Directors of the Company has been filed with the Reserve Bank of India, Bangalore.

என்னுள்ளே ஆடு என்னுள்ளே!

ஆரவாரமான பல்லாவரம் பஸ் நிறுத்தம். முழம் இரண்டு ரூபாய் என்று பூ விற்கும் சிறுவர்கள். 'த்தே, ஒத்திக்கோ' என்றபடி 'புளிச்'சென்று புகையிலைச் சாறைத் துப்பும் கிழவிகள், ஓரிடத்தில் நிற்க விடாது முன்னும் பின்னும் அலையவிடும் பல்லவன்கள், முகத்தில் பரபரப்பைத் தேக்கி பேருந்தை எதிர் நோக்கும் ஒற்றைப் பின்னல் சூடிதார்கள். (ரெட்டைப் பின்னலுக்கு சென்னையில் தடை உத்தரவா?)

அவன் மட்டும் அலைபாயாத பார்வையுடன் கிழக்கு நோக்கி நின்றிருந்தான். சூரிய நமஸ்காரம்?

இல்லை. சூர்யா நமஸ்காரம்.

அவனுக்குத் தெரிந்ததெல்லாம் அவளின் பெயர். (பேருந்து இரைச்சல் நடுவில் அவள் தோழியின் உபயத்தில் கிடைத்த ஃபர்ஸ்ட் ஹேண்ட் இன்ஃபர்மேஷன்)

அடுத்து, அவள் போவது வடபழனிக்கு. தினசரி செல்கிறாள். நிச்சயமாய் முருகன் தரிசனமாயிருக்க முடியாது. வேலை பார்க்கிறாளோ? அடுத்தது, அவள் விரல்கள்!

ஆம், இதுநாள் வரை, அவனைப் பொறுத்தவரை 'அவள்' என்பதன் அறிமுகமே அந்த 'விரல்கள்' மட்டுமே.

அவளை நிமிர்ந்து கூடப் பார்த்ததில்லை அவன். வட்டமுகமோ, தட்டை முகமோ... ம்ஹூம்! சத்தியமாய்த் தெரியாது.

'தோள் கண்டார்; தோளே கண்டார்' என்பது போல அவன் பார்வை அந்த விரல்களை விட்டு அகன்றதேயில்லை.

சீவிய பென்சில், பிஞ்சு வெண்டை, வெண்ணெய், தந்தம்... என்ன சொல்லலாம்? பிரம்மனின் மாஸ்டர் பீஸ்! கரெக்ட்...

அதற்கு மேல் வர்ணனை தேவையில்லை.

இருவரும் ஒரே பஸ். அவன் இறங்குவது உதயம் தியேட்டர் ஸ்டாப்பிங்.

சூர்யாவின் உதயம் அவனுக்கு காலையில் மட்டுமே! பேட்டரியை சார்ஜ் செய்து கொண்டால் அடுத்த நாள் காலை வரை தாங்கும்.

அதோ, அவளது நிஷ்டை கலைகிறது. முன்னும் பின்னும் அசைந்து, தென்றலாய் நர்த்தனமிட்டு வரும் விரல்கள். நீண்ட விரல்கள்!

அவன் மனம் முழுக்க வாங்கிக் கொண்டான் அதன் அழகை.

அதோ இவர்களின் பேருந்து. அவளும் பின்புறம்தான் ஏற வருகிறாள். இவன் ஏறிக் கொள்ள, டிரைவர் சட்டென பஸ்ஸைக் கிளப்ப...

மைகாட்! பளிச்சென பற்றினான் அவள் விரல்களை.

கைத்தலம் நான் பற்ற கனவு கண்டேன்! படியில் ஒரு காலும், கீழே மறு காலுமாய் தடுமாறியவள் இவன் உதவியால் கீழே விழாமல் தப்பித்தாள்.

ஆசுவாசப் பெருமூச்சுக்குப் பிறகு 'நன்றி' என்றாள்.

அவன் ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்தான். 'தொட்டு விட்டேன், தொட்டு விட்டேன்' என்று குதூகலித்தன இரத்த நாளங்கள்.

'லல்லல்லா லாலல்லா' என்ற இசைப் பிரவாகம் மனசினுள்.

'நன்றி'யால் நிமிர்ந்த அவன் பார்வை முதன் முதலாய் அவள் கண்களைத் தொட்டன.

"நான்தான் நன்றி சொல்லணும்" என்றான் கிசுகிசுப்பாய்.

"எதுக்கு?" என்றாள் நயன பாஷையில்.


அவன், அவளின் கையைப் பார்த்தான். அதன் விரல்களை காதலுடன் கண்டுகளித்தான்.

அவள் முகத்தில் நாணத்தின் கீற்று ரேகை.

"நானும் ரொம்ப நாளா கவனிச்சிருக்கேன். அதென்ன, என் கைவிரல்களையே அப்படி வெறிச்சுப் பார்க்கறீங்க டெய்லி? என்ன இருக்கு அதுல?"

"என்ன இல்லை அதில்? எனது போதி மரம் அதுதான்" என்றான் மென்மையாய்.


கிருஷ்ணா



"மேடையில் போலீஸார் மட்டுமே இருக்கிறார்களே! என்னடா பட்டிமன்றம் இது?"

"ராமசாமியின் பிணம் கிடந்த பாழடைந்த கோயில், B1 ஸ்டேஷன் லிமிட்டைச் சேர்ந்ததா? B2 ஸ்டேஷன் லிமிட்டைச் சேர்ந்ததான்னு!"

— உ. ராஜாஜி



பார்வைப் பரிமாறல்கள், சிரிப்புக்கு மாறி, சிரிப்புகள், சந்திப்புக்குத் தாவி சந்திப்புகள் இதயத்தின் இடமாற்றத்தில் முடிந்தது.

அவன் குடும்பத்தின் மூத்த பையன், அவளும், அவனுக்கு கமல் பிடிக்கும், இவளுக்கு ரஜினி பிடிக்கும், அவனுக்கு சமோசா ருசிக்கும் இவளுக்கு உ.கி. சிப்ஸ் ருசிக்கும், என்று எல்லா உணர்வுகளும் இடம் மாறின.

அவளின் கையைப் பிடித்தாலோ, விரலைப் பார்த்தாலோ அவன் பேச்சு தடைப்படும். அதனால் அவர்களின் சந்திப்பின் போதெல்லாம் அவள் தன் கைகளை முதுகுப்புறம் மறைத்துக் கொள்வாள். அவன் தின்டாட, அவள் கொண்டாட, விடைபெறும் சமயம் தரிசனம் கிடைக்கும் அவனுக்கு. மென்மையான, மீசைக் குறுகுறுப்புடன் முத்தம் கிடைக்கும் அவள் விரல்களுக்கு.

இதோ கிளைமேக்ஸ்!

நான்கு நாளாய் அவன் வாழ்வில் சூர்ய(ா) நமஸ்காரமே இல்லை.

தவித்துப் போனான். ஐந்தாவது நாள் பொறுக்க முடியாமல் வீட்டுக்கே சென்றுவிட்டான். வரவேற்பு எப்படி இருக்குமோ என்ற கவலையைப் பின்தள்ளி, அவளுக்கு என்னாயிற்றோ என்ற பயம் முன்நிற்க, முதல் மாடி, இரண்டாவது மாடி, இதோ மூன்றாவது மாடி! காலிங்பெல்லை அழுத்தினான்.

"நான் சூர்யாவின் நண்பன். அவள்..." என்று கதவைத் திறந்த வயதான சூர்யாவிடம் (அம்மா) கைகூப்பி சொன்னான்.

"வாங்க. அந்த ரூமில் இருக்கா" என்றாள் இயல்பாய்.

படுக்கையில் சாய்ந்து ஒய்யாரமாய் புத்தகம் படித்துக் கொண்டிருந்தவள் கால் சப்தம் கேட்டு நிமிர்ந்தாள்.

இவனைக் கண்ட கண்களில் வியப்பு, திகைப்பு, காதல், பயம்...

அதிர்ந்தான்! எதற்கு பயம்?

அவள் கைகள் வழக்கம் போல பின்புறம் சென்றிருந்தன.

"பேசிக்கிட்டு இருங்க. டீ கொண்டு வரேன்" என்று நகர்ந்தாள் அவள் அம்மா.

"ஹேய், என்னாச்சு நாலு நாளாய்?" என்றான் தவிப்பாய்.

அவள் கண்களில் துளிர்த்த நீர் அவன் காதல் தகிப்பை அதிகப்படுத்தியது.

"சூர்யா" என்றான் சற்று நெருங்கிச் சென்று.

"இங்கேயும் அதே விளையாட்டுதானா? எதுக்கு கையை பின்னாடி வைச்சுக்கிட்டு இருக்கே?" என்றான் பொய்க் கோபமாய்.

"அது..." என்று அவள் தடுமாறும்போதே ஆவி பறக்கும் ('பிசாசு பறக்கும்' என்று ஏன் யாரும் சொல்ல மாட்டேன் என்கிறார்கள்?) டீயுடன் அவள் அம்மா வந்தாள்.

"பாருங்க தம்பி, வயசான அளவுக்கு புத்தி இல்லை. சின்னக் குழந்தை மாதிரி, வெடிக்காத தீபாவளி பட்டாசை எடுத்து, இவளும் இவ தம்பியும் பிரிச்சு, மருந்தை பேப்பரில் கொட்டி, தீக்குச்சியை பற்ற வைச்சு... கையில மருந்து இருந்ததுனாலே கை பொசுங்கிடுச்சு. ஹூம்!"

சட்டென்று அவள் கையைப் பிடித்து, இழுத்து தன் முன்னே நிறுத்தினான். தோலுரிந்து போய், திட்டுத் திட்டாய் மை தீற்றல் போல... கடவுளே!

அவன் கண்களிலிருந்து சொட்டு நீர் அதில் விழுந்தது.

"என் விரல்கள்... என்னை... இதனாலே" என்று தழுதழுத்தவளை கனிவுடன் நோக்கினான்.

"விரல்கள் போனால் என்ன? அது ஒரு விலாசம் போல. உன்னுடன் தொடர்பு கொள்ளப் பயன்பட்ட அட்ரஸ். அறிமுகமான பிறகு, விலாசத்தை விட, அதிலுள்ள நீயும், உன் மனதும்தான் முக்கியம்."

நாசியை ஒட்டி வழிந்து கொண்டிருந்த அவள் கண்ணீர், இப்போது, இடம் மாறி, கன்னத்தில் வழிய ஆரம்பித்தது.

ஸ்ரீமத் பாகவதம்

1. பாகவதம் பிறந்த கதை

1. பரம்பொருள் வணக்கம்; 2. வேத வியாசர்; 3. சில பாரத நிகழ்ச்சிகள்; 4. பரீட்சித்தின் வரலாறு; 5. சுக முனிவர்.

2. நாராயணனே பரம்பொருள்

1. பகவானின் தோற்றப் பொலிவு; 2. தத்துவங்களின் உற்பத்தி.

3. வராக அவதாரம்

1. விதுரருக்கு உபதேசம் செய்!; 2. பிரமாவின் சிருஷ்டி; 3. வராக யக்ரு மூர்த்தி; 4. துவார பாலகர்கள் பெற்ற சாபம்; 5. கபிலர் தோன்றினார்.

4. நர நாராயணர்கள்

1. பகவானின் சில அவதாரங்கள்; 2. தட்ச யாகம்; 3. துருவன் நட்சத்திரமானான்; 4. கொடுங்கோலன் மாண்டான்; 5. பிருதுவின் நல்லாட்சி; 6. பிரசேதஸர்கள்.

5. பரதச் சக்கரவர்த்தி

1. பிரிய விரதன் வம்சம்; 2. பரதரின் பல பிறவிகள்.

6. தேவர், அசுரர் போர்

1. நாராயண நாமத்தின் பெருமை; 2. வம்ச விருத்தி; 3. இந்திரன் பெற்ற சாபங்கள்; 4. சித்ரகேது; 5. நாற்பத்தொன்பது மருத்துக்கள்.

7. பிரகலாதர் சரித்திரம்

1. இரண்யாட்சகனின் முடிவு; 2. இரணியன் பெற்ற வரம்; 3. நாராயணனே என் குரு; 4. மனம் மாறா மைந்தன்; 5. நரசிம்ம அவதாரம்; 6. மூன்று கோட்டைகள்.

8. வாமன திரிவிக்கிரம அவதாரங்கள்

1. கஜேந்திர மோட்சம்; 2. பாற்கடலைக் கடைந்தனர்; 3. அசுரரை மயக்கிய அணங்கு; 4. மூன்றடி மண் கேட்டார்; 5. வேதங்களை மீட்ட வித்தகர்.

9. இராமர் பட்டாபிஷேகம்

1. ஆண் பெண் மாறாட்டம்; 2. அசுவனி தேவர்கள்; 3. அம்பரீஷன் வரலாறு; 4. மீனால் மனம் மாறிய மகரிஷி; 5. அப்படியே நில்; 6. பகீரதன் தவம்; 7. இராமாவதாரம்; 8. புரூரவச் சக்கரவர்த்தி; 9. பரசுராமர்; 10. யயாதி மன்னன்; 11. பரதன் பிறந்தான்.

10. கிருஷ்ணாவதாரம் (மூன்று பகுதிகள்)

(அ) பிள்ளை விளையாட்டு (முதல் பகுதி)

1. ஒருத்தி மகனாய்ப் பிறந்து வேறொருத்தி மகனாய் வளர்ந்தார்; 2. அடுக்கடுக்காய் வந்த அரக்கர்கள்; 3. தளிர் நடையும், தளராத விளையாட்டும்; 4. மீண்டும் அரக்கர் தொல்லை; 5. அன்பர்களுக்கு அருள் செய்த அற்புதம்; 6. ஆயர்தம் கொழுந்து; 7. பட்டம் ஏற்ற பரந்தாமன்; 8. கிருஷ்ணா லீலா விநோதங்கள்.

(ஆ) கம்ச வதம் (இரண்டாம் பகுதி)

1. சில அரக்கர் மாண்டனர்; 2. நாரதர் கூறிய இரகசியம்; 3. கம்சனின் பயங்கரத் திட்டங்கள்; 4. அக்ரூரர் அடைந்த ஆனந்தக் களிப்பு; 5. மதுரையில் நிகழ்த்திய மாயங்கள்; 6. மாமனைக் கொன்ற மாமாயன்; 7. கிருஷ்ணன் தன் பிறப்பின் இரகசியம் உணர்த்தினார்; 8. குரு மைந்தனைக் கொணர்ந்த கோபாலன்; 9. கோபியர்களின் உயர்ந்த பக்தி; 10. துவாரகையை நிர்மாணித்தல்; 11. முசுந்தன் கண்ட காட்சி; 12. ருக்மிணியின் தூது; 13. ரதி மன்மதன் திருமண வைபவம்; 14. சத்திய பாமையை மணந்தார்; 15. மணி செய்த விந்தைகள்; 16. நரகாசுரனைக் கொன்றார்; 17. பலராமன் ருக்மியைக் கொன்றது; 18. பாணாசுரன் உயிர் தப்பினான்; 19. பௌண்டரீகன் தரித்த வேடம்;

(இ) பூபாரம் தீர்த்தல் (மூன்றாம் பகுதி)

1. பதினாறாயிரம் மனைவியர்; 2. ஜராசந்தன் மாண்டான்; 3. சால்வ யுத்தம்; 4. பல்லனைக் கொன்ற பலராமன்; 5. குசேலர் வரலாறு; 6. தாயின் விருப்பம் தீர்த்த தயாபரன்; 7. அன்பருக்கு உதவிய ஆபத் சகாயன்.

11. வைகுண்டம் சேர்தல்

1. கிருஷ்ணன் உபதேசம்; 2. அவதூதர் சொன்னவை; 3. பகவான் புறப்பட்டார்.

12. கல்கி அவதாரம்

1. இனி நடக்க இருப்பவை; 2. பரீட்சித்தின் யாகம்; 3. பக்த மார்க்கண்டேயர்; 4. யாகம் இனிது முடிந்தது.

வேதங்களைக் கற்பக மரத்திற்கு ஒப்பிட்டால், அதில் பழுக்கும் பழத்திற்கு இந்தப் பாகவதத்தை ஒப்பிடலாம். இதனை வைகுண்டத்தில் இருந்து நாரதர் அறிந்து கொண்டார்; அவரிடம் இருந்து வியாசர் அறிந்தார்; வியாசரிடமிருந்து சுக முனிவர் அறிந்தார்; சுக முனிவர் மூலம் இது உலக மக்களிடையே பரவியது. புண்ணியவான் களாகிய நீங்களும் இந்த ருசியுள்ள இனிய பழத்தை நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் புசியுங்கள்.

பார்த்திப

மூன்றாம் பாகம்

1. இரத்தின வியாபாரி

அமைதியான நீலக்கடலில் அழகிய அன்னப் பறவை போல் வெள்ளைப் பாய் விரித்த கப்பல் மேற்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. சூரியன் உதயமாகும் நேரம். அவனுடைய தேஜோமயமான வரவை எதிர்பார்த்துக் கீழ்வான முகட்டில் இயற்கை தேவி வர்ணக் கோலங்கள் போட்டுக் கொண்டிருந்தாள்.

கப்பலில் இருந்தவர்களிடையே பரபரப்பு அதிகமாய்க் காணப்பட்டது. அவர்கள் பெரும்பாலும் வர்த்தகர்களாகக் காணப்பட்டார்கள். எல்லாரும் அவரவர்களுடைய மூட்டைகளை எடுத்து வைத்து, கப்பலிலிருந்து இறங்குவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். சிலர் கப்பல் மேல் தளத்தின் ஓரமாக வந்து, மேற்குத் திசையை ஆவலுடன் நோக்கினார்கள்.

இப்படி மேற்குத் திக்கை நோக்கி நின்றவர்களில் வாலிப வர்த்தகன் ஒருவன் காணப்பட்டான். பிராயம் இருபது, இருபத்தொன்று இருக்கலாம். அவனுடைய இளம் முகத்தில் களை சொட்டிற்று. அவனுடைய உடையிலிருந்தும் அவன் பக்கத்தில் கிடந்த மூட்டையிலிருந்தும்தான் அவனை வியாபாரி என்று சொல்லலாமே தவிர, மற்றபடி தோற்றத்தை மட்டும் கவனித்தால் அவன் இராஜ குலத்தைச் சேர்ந்தவன் என்று சொல்லும்படியிருந்தது. அவன் வியாபாரியாயிருக்கும் பட்சத்தில், சாதாரண வியாபாரியாயிருக்க முடியாது; பெருஞ்செல்வனான இரத்தின வியாபாரியாகத்தான் இருக்க வேண்டும்.

கப்பலிலிருந்த மற்றவர்கள் அடிக்கடி அந்த இளம் வர்த்தகன் நிற்கும் இடத்தை நோக்கினார்கள். அப்போது அவர்களுடைய கண்களில் பயபக்தி காணப்பட்டது; சிறிது கவலையும் தோன்றியது.

அந்த வாலிப வர்த்தகனோ மற்றவர்களையெல்லாம் சிறிதும் கவனிக்கவில்லை. கண் கொட்டாமல் மேற்குத் திக்கையே நோக்கிக் கொண்டு நின்றான். அவனுடைய முகத்திலேதான் எத்தனை ஆவல்? எவ்வளவு கிளர்ச்சி? அவ்வளவு ஆவலுக்கும் கிளர்ச்சிக்கும் என்னதான் காரணமாயிருக்கும்? நீண்ட காலம் அன்னிய நாட்டில் இருந்து விட்டுத் தாய்

முன் கதை :

பார்த்திப சோழ மகாராஜா, காஞ்சி நரசிம்ம சக்கரவர்த்திக்குக் கப்பம் செலுத்த மறுத்து, வெண்ணாற்றங் கரைப் போர்க்களத்தில் வீர சுவர்க்கம் அடைகிறார். ரணகளத்தில் அவருடைய உயிர் நீங்கப் போகும் தறுவாயில் தரிசனம் தந்த சிவனடியாரிடம் தம்முடைய மகன் விக்கிரமனை வீர புருஷனாக வளர்க்க வேண்டுமென்று வரம் வாங்கிக் கொண்டு உயிர் விடுகிறார்.

பார்த்திப சோழரின் பத்தினி அருள்மொழி ராணி, தன் மகன் விக்கிரமனுடன், உறையூருக்குக் கிழக்கே கொஞ்ச தூரத்தில் இருந்த காவேரி நதித் தீவில், வஸந்த மாளிகையில் வசித்து வந்தாள். அங்கு சிவனடியார் அடிக்கடி வந்து விக்கிரமனுக்கு வீர சுதந்திர உணர்ச்சியை ஊட்டி வருகிறார்.

விக்கிரமன் பதினெட்டாம் பிராயத்தைக் கடந்த போது, சிராப்பள்ளி மலையில் புலிக் கொடியை உயர்த்திச் சோழ நாட்டின் சுதந்திரத்தை ஸ்தாபிக்கத் தீர்மானிக்கிறான். பார்த்திப மகாராஜாவின் மாற்றாந்தாய் மகனான மாரப்பபூபதி பல்லவ சேனாதிபதியிடம் விக்கிரமனுடைய உத்தேசத்தை வெளிப்படுத்தி விடுகிறான். இதன் பயனாக, விக்கிரமனுடைய முயற்சி தோல்வியடைகிறது.

காஞ்சி நகரின் வீதியில் சங்கிலிகளால் பிணிப்புண்டு குதிரை மேல் சென்ற விக்கிரமனை, நரசிம்மவர்மரின் மகள் குந்தவிதேவி சந்திக்கிறாள். விக்கிரமனைத் தண்டனையிலிருந்து தப்புவிக்க அவள் செய்த முயற்சி

ன் கனவு

நாட்டுக்குத் திரும்பி வருகிறானோ இந்த வாலிபன்? ஜன்ம பூமியின் தோற்றம் எப்போது கண்ணுக்குப் புலனாகும் என்றுதான் இவ்வளவு ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கிறானோ?

ஆமாம்; அதுதான் உண்மையாயிருக்க வேண்டும். ஏனென்றால், அதோ கொஞ்ச தூரத்தில் கருநிறமாக வரப்பு போல் காணப்படும் பூமியைக் கண்டதும் அவனுடைய முகம் மலர்வதைக் காண்கிறோம். சூரியனைக் கண்ட தாமரை இப்படித்தான் மலரும் போலும்!

சற்று நேரம் அப்படியே அசைவின்றி நிற்கிறான் அந்த வாலிப வியாபாரி. ஆரம்பத்தில் வெறும் வரப்பாக மட்டும் தோன்றிய காட்சியானது வரவர மரங்கள், குன்றுகள், கோவில் கோபுரங்களாக மாறி வரும் போது, அவனுடைய உள்ளத்தில் ஆனந்தம் பொங்குவதை முகம் காட்டுகிறது. இதற்கிடையில் கிழக்கே சூரியனும் ஜகஜ்ஜோதியாக உதயமாகித் தன் யாத்திரையைத் தொடங்கினான்.

கரையையே பார்த்துக் கொண்டிருந்த வாலிபன் சட்டென்று திரும்பி நோக்கினான். கப்பலிலிருந்தவர்களில் பெரும்பாலோர் அச்சமயம் அவனையே கவனித்துக் கொண்டிருந்தார்களாதலால், அவன் சமிக்ஞை செய்ததும் உடனே நெருங்கி அவனருகில் வந்து பயபக்தியுடன் நின்றார்கள்.

"நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கிறதா?" என்று வாலிபன் கேட்டான்.

"இருக்கிறது மகா....!" என்று சொல்லத் தொடங்கிய ஒருவன், சட்டென்று வாயைப் பொத்திக் கொண்டான்.

"பார்த்தீர்களா? இதுதானா நீங்கள் என் கட்டளையை நிறைவேற்றுகிற லட்சணம்?" என்று வாலிபன் கோபமாய்க் கேட்டான்.

"மன்னிக்க வேண்டும், சுவாமி!"

"என்னுடைய கட்டளையைச் சத்தியமாய் நிறைவேற்றுவீர்களா?"

"நிறைவேற்றுவோம், சுவாமி!"

அமரர் கல்கி

"தாய்நாட்டில் இருக்கும் போது என்னை நீங்கள் சந்திக்க முயலவே கூடாது, தெரியுமா?"

"தெரியும் சுவாமி!"

"ஒருவேளை தற்செயலாய்ச் சந்தித்தால் என்னைத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளக் கூடாது."

"சித்தப்படி நடக்கிறோம்."

"அடுத்த அமாவாசையன்று எல்லாரும்

பலிக்காமற்போகிறது. விக்கிரமன் தேசப் பிரஷ்ட தண்டனைக்கு உள்ளாகிறான்.

மாமல்லபுரத்துக் கடற்கரையில் விக்கிரமன் கப்பலில் ஏற்றப்படுகிறான். கப்பல் புறப்படும் சமயத்தில் கரையில் நின்ற சிவனடியார் தமது கரங்களைத் தூக்கி அவனை ஆசீர்வதிக்கிறார். இதைப் பார்த்த குந்தவிதேவி, இந்தச் சிவனடியார்தான் விக்கிரமனுடைய துரதிர்ஷ்டங்களுக்கெல்லாம் காரணம் என்று எண்ணி, அவர் யார் என்று கண்டுபிடிக்கத் தீர்மானிக்கிறாள்.

விக்கிரமனை ஏற்றிச் சென்ற கப்பல் செண்பகத் தீவின் அருகில் அவனை இறக்கி விட்டுச் செல்கிறது. விக்கிரமன் செண்பகத் தீவின் பிரஜைகளால் அரசனாக முடிசூட்டப்படுகிறான்.

விக்கிரமனுக்கு வயது வந்த பின் கொடுக்க வேண்டுமென்று பார்த்திப மகாராஜா சொல்லியிருந்த சோழ வம்சத்து வீர வாளையும் திருக்குறளையும் உறையூர் அரண்மனையிலிருந்து கொண்டு வரும்படி படகோட்டி பொன்னனிடம் அருள்மொழி ராணி சொல்கிறாள். இந்த முயற்சியின் போது மாரப்பனிடம் அகப்பட்டுக் கொள்ள இருந்த படகோட்டி பொன்னனைச் சிவனடியார் தப்புவிக்கிறார்.

அருள்மொழி ராணி, தன்னைக் காண்பதற்கு வந்த சிறுத்தொண்டருடனும் அவருடைய பத்தினியுடனும் ஸ்தல யாத்திரை செல்கிறாள்.

வீரவாளும் திருக்குறளும் அடங்கிய பெட்டி படகோட்டியிடம் இருக்கிறது.

இந்தத் துறைமுகத்திற்கு வந்து விட வேண்டும்."

"வந்து விடுகிறோம்!"

"அன்று நான் எக்காரணத்தினாலாவது கப்பலுக்கு வந்து சேராவிட்டால் என்னைப் பற்றி எவ்விதம் விசாரிப்பீர்கள்?"

"இரத்தின வியாபாரி தேவ



சேனர் என்று விசாரிக்கிறோம்."

"இதிலெல்லாம் கொஞ்சங்கூடத் தவறக் கூடாது."

"இல்லை. சுவாமி!"

மேற்படி வாலிப இரத்தின வியாபாரி உண்மையில் யார் என்பதை நேயர்கள் இதற்குள்ளாக ஊகித்துக் கொண்டிருக்கலாம். ஆம்; பார்த்திப சோழ மகாராஜாவின் புதல்வனும், தற்போது செண்பகத் தீவின் அரசனுமான விக்கிரமன்தான் அவன்.

சென்ற அத்தியாயத்தில் கூறிய சம்பவங்கள் நடந்து ஏறக்குறைய மூன்று வருஷங்கள் ஆகி விட்டன. இந்த மூன்று வருஷத்தில் விக்கிரமனுடைய ஆட்சியில் செண்பகத் தீவு எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைந்து பெரும் புகழும் அடைந்து வந்தது. விக்கிரமனுடைய வரவுக்குப் பிறகு ஒரே ஒரு தடவை செண்பகத் தீவின் மீது பகைவர் படையெடுத்து வந்தார்கள். அவர்களுக்கு நேர்ந்த கதியை அறிந்த பிறகு செண்பகத் தீவின் மீது படையெடுக்க யாரும் துணியவில்லை. அதற்கு மாறாக, விக்கிரமனுடைய தலைமையில் செண்பகத் தீவின் படை வீரர்கள் வேறு தீவுகளின் மேல் படையெடுத்துச் சென்று அந்தத் தீவுகளிலெல்லாம் புலிக் கொடியை நாட்டி விட்டுத் திரும்பினார்கள். விக்கிரமனுடைய வீரப் பிரதாபங்களையும் மேதா விலாசத்தையும் மற்ற உயர் குணங்களையும் பற்றிய கீர்த்தியானது தூர தூரத்திலேயுள்ள தீவாந்திரங்களிலெல்லாம் பரவத் தொடங்கியது. பல தீவுகளிலுள்ள ஜனங்கள் நல்லாட்சியையும் பாதுகாப்பையும் விரும்பித் தாங்களே விக்கிரமனுடைய ஆட்சிக்குள் வந்து கொண்டிருந்தார்கள்.

இந்த மூன்று வருஷ காலத்தில் விக்கிரமன் தன்னுடைய தாயாரையாவது, தாய்நாட்டையாவது மறந்து விடவில்லை. மற்றும், பல்லவ சாம்ராஜ்யத் தலைநகரின் வீதியில் அவன் கண்ட இளநங்கையின் சந்திர வதனத்தையும் அவனால் மறக்க முடியவில்லை. செண்பகத் தீவின் பிரஜைகள் தங்களுடைய பாக்கியவசத்தினால் கிடைத்த புதிய அரசனின் வம்சம் நீடூழி விளங்க வேண்டுமென்னும் ஆசையுடன், விக்கிரமனுடைய விவாகத்தைக் குறித்துச் சிலமுறை விக்ஞாபனம் செய்து கொண்டார்கள். மகாராஜா விடை கொடுத்தால், தாய்நாட்டுக்குச் சென்று சிறந்த அரசர் குலத்துப் பெண்ணை மணம் பேசி வருவதாகவும் சொன்னார்கள். அப்போதெல்லாம் விக்கிரமன் அவர்களுடைய விக்ஞாபனத்தை மறுதலித்து, விவாகத்தைப் பற்றித் தன்னுடைய பரிபூரண வெறுப்பை யும் தெரிவித்தான். இதற்கு அடிப்படையான காரணம், அந்தக் காஞ்சி நகர்ப் பெண்ணினுடைய கருவிழிகளின் ஞாபகந்தானோ, என்னவோ, யாருக்குத் தெரியும்?

நாளாக ஆக, விக்கிரமன் செண்பகத் தீவில் தன்னுடைய தனிமையை அதிகமாய் உணரத் தொடங்கினான். எவ்வளவோ ஜனக் கூட்டத்துக்கு நடுவில் இருந்தும் தான் துணையின்றித் தனித்திருப்பதை அவன் கண்டான். வெற்றியும் புகழும் செல்வாக்கும் திரளான மக்களின் போற்றுதலும் இருந்தும் அவனுடைய இதயத்தில் நிறைவு ஏற்படவில்லை. அதில் ஒரு மூலை சூன்யமாக இருந்தது. அந்தச் சூன்ய மூலையானது நாளுக்கு நாள் பெரிதாகிக் கொண்டு வந்தது. 'நீண்ட நயனங்களையுடைய அந்தப் பெண் மட்டும் இங்கே என் அருகில் இருந்தால்?' - என்ற எண்ணம் அடிக்கடி உண்டாயிற்று. அந்த வேதனை தரும் எண்ணத்தை அவனால் மறக்க முடியாமலிருந்ததோடு, அந்த வேதனையின் நடுவி





அருள்வாக்கு

அஷ்ட குணங்களில் முதல் மூன்று தயை, க்ஷாந்தி, அநஸூயை என்பன.

'அநஸூயை' என்பது அத்ரி மஹரிஷியின் பத்னியான மஹாபதிவிரதையின் பேர் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அஸூயை இல்லாதவள் அநஸூயை. (அநுஸூயா என்று 'நு' போட்டுச் சொல்வது தப்பு.) நம்மை விட ஒருத்தன் நல்ல நிலையில் இருந்தால் வயிற்றெரிச்சல் படக் கூடாது. பொறாமையின்மைதான் அநஸூயை.

முதலில் சொன்ன அன்பு (தயை) எல்லோரிடமும்; இரண்டாவதாகச் சொன்ன பொறுமை (க்ஷாந்தி) தப்புப் பண்ணுகிறவனிடம்; பொறாமையின்மை நம்மை விட மேல் ஸ்தானத்திலிருக்கிறவனிடம். அவன்

லேயே ஒருவித இன்பமும் இருப்பதை அவன் உணர்ந்தான். தன்னை அறியாமல் அடிக்கடி அவன் பெருமூச்சு விட்டான். சில சமயம் அவனுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்ட பெண்ணின் முகம் அவன் மனக் கண்ணின் முன்னால் தோன்றும் போது, அவனுடைய இருதயமானது விரிந்து பொங்கி மேல் நோக்கி எழுந்து நெஞ்சை அடைத்து விடுவது போல் உணர்ச்சி உண்டாகும்.

வேதனையுடன் இன்பமும் கலந்து உண்டாக்கிய இந்த ஞாபகத்தை அவன் ஓரளவு மறப்பதற்கு உதவியான ஒரு சம்பவம் இரண்டு மாதத்திற்கு முன்பு நேர்ந்தது.

ஒருநாள் இரவு விக்கிரமனுடைய கனவில் அருள்மொழி ராணி தோன்றினாள். மகாராணிக்குரிய ஆடை ஆபரணங்கள் ஒன்றுமில்லாமல், தூயவெள்ளைக் கலையுடுத்தி விபூதி, ருத்திராட்சமணிந்து அவன் சிவபக்தியில் கனிந்த சிவவிரதையாகக் காட்சி தந்தாள்! முன் எப்போதையும் விட அவளுடைய முகத்தில் தேஜஸ் அதிகமாக ஜொலித்தது. நாவில் நமசிவாய மந்திரத்தை ஜபித்துக் கொண்டு வந்த அருள்மொழி தேவி விக்கிரமனைக் கனிவு ததும்ப நோக்கி, "குழந்தாய்! எனக்கு விடைகொடு!" என்றாள். விக்கிரமன் ஒன்றும் புரியாமல் திகைத்து, "அம்மா! இத்தனை நாள் கழித்து இப்போது தானே உன்னைப் பார்த்தேன்? அதற்குள் போக விடை கேட்கிறாயே? எங்கே போகப் போகிறாய்?" என்றான். அருள்மொழி ராணி அதற்கு விடை கூறாமல், "அப்பா குழந்தாய்! நான் ஒரு வாக்குறுதி கொடுத்து விட்டேன். அதை நீ நிறைவேற்றித் தர வேண்டும். முக்கியமாக அதன் பொருட்டே உன்னைப் பார்க்க வந்தேன்" என்றாள்.

"என்ன வாக்குறுதி, அம்மா? யாருக்குக் கொடுத்தாய்?"

"சக்கரவர்த்தியின் மகள் குந்தவியை நீ கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்!"

விக்கிரமன் திடுக்கிட்டு, "என்ன அம்மா சொல்கிறாய்? சக்கரவர்த்தி மகளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? யாருக்கு இம்மாதிரி வாக்குக் கொடுத்தாய்?" என்று கேட்டான்.

"சிவனடியாருக்கு வாக்குக் கொடுத்தேன் குழந்தாய்! இராமபிரான் தகப்பனாரின் வாக்கை நிறைவேற்றியது போல் நீ என்னுடைய வாக்கைக் காப்பாற்ற வேண்டும்."

இவ்விதம் சொல்லி விட்டு, அருள்மொழி தேவி விக்கிரமனுடைய அருகில் நெருங்கி அவனுடைய சிரஸின் மீது கையை வைத்து ஆசீர்வதித்தாள். உடனே, விக்கிரமன் கண் விழித்து எழுந்தான். "நல்லவேளை! இதெல்லாம் கனவாய்ப் போயிற்றே!" என்று சந்தோஷப்பட்டான்.

கனவில் கண்டதெல்லாம் வெறும் சித்தப் பிரமை என்பதில் ஐயமில்லை. பழைய பேச்சுக்களும் நினைவுகளும் குழம்பி இப்படிக் கனவாகத் தோன்றியிருக்க வேண்டும். இல்லாவிடில் இத்தனையும் நடந்த பிறகு, "சக்கரவர்த்தி மகளைக் கல்யாணம் செய்து கொள்" என்று தாய் தனக்குக் கட்டளையிடுவாளா? இதைப் பற்றிச் சிவனடியாருக்கு அவள் ஏன் வாக்குக் கொடுக்க வேண்டும்?

ஆனாலும் இந்தக் கனவுதான் விக்கிரமன் காஞ்சி நகர்ப் பெண்ணின் நினைவை ஒருவாறு மறப்பதற்கு உதவி செய்தது. கனவு கண்டது முதல், அவனுக்குத் தன் அன்னையைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை மிகுந்தது. அவள் எங்கே இருக்கிறாளோ? தன்னைக் காணாமல் எவ்விதம் பரிதவிக்கிறாளோ?

அன்று முதல், தாய்நாட்டுக்குத் திரும்பிப் போக வேண்டுமென்ற ஆர்வம் விக்கிரமனுடைய உள்ளத்தில் பொங்கத் தொடங்கிற்று.

நம்மைக் காட்டிலும் யோக்யதையில் குறைந்தவனாக இருந்தாலும் கூட, நமக்கு மேல் ஸ்தானத்துக்குப் போய் விட்டான் என்றால் அஸூயைப்படக் கூடாது. 'பூர்வஜன்மாவில் நம்மை விடப் புண்ணியம் பண்ணியிருப்பான். அதனால்தான் பகவான் அவனை உயர்த்தி வைத்திருக்கிறான்' என்று மனஸைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

போய், அன்னையை இங்கே அழைத்துக் கொண்டு வந்து விடலாம்; தந்தை கொடுத்து விட்டுப் போன சோழர் குலத்து வீர வாளையும் திருக்குறளையும் எடுத்துக் கொண்டு வரலாம் - இவ்விதம் தீர்மானித்துக் கொண்டு மந்திரி பிரதானிகளிடமும் மற்றுமுள்ள முக்கியப் பிரஜைகளிடமும் தன் தீர்மானத்தைத் தெரிவித்தான். அவர்கள் எவ்வளவோ ஆட்சேபித்தும் விக்கிரமனுடைய உறுதியை மாற்ற முடியவில்லை. "ஒருவேளை திரும்பி வரும் போது உங்களுக்கு ஒரு மகாராணியை அழைத்துக் கொண்டு வந்தாலும் வருவேன்" என்று விக்கிரமன் விளையாட்டாகச் சொன்னது அவர்களுக்கு ஒருவாறு திருப்தி அளித்தது. ஆகவே, தாய்நாட்டுக்குப் போகச் சகல வசதிகளுடன் வர்த்தகக் கப்பல் ஒன்று சித்தமாயிற்று. அந்தக் கப்பலில் இரத்தின வியாபாரியாக வேஷம் பூண்டு விக்கிரமன் பிரயாணமானான். வர்த்தக வேஷம் தரித்த மெய்க்காவலர் சிலரும் செண்பகத் தீவின் நிஜ வியாபாரிகள் சிலரும் அவனுடன் கப்பலில் புறப்பட்டார்கள்.

தாய்நாட்டில் எந்தத் துறைமுகத்தில் இறங்குவது என்பது பற்றிக் கொஞ்சம் சர்ச்சை நடந்தது. விக்கிரமன் முக்கியமாகப் போக விரும்பிய இடம் உறையூராதலால், நாகப்பட்டினம் துறைமுகத்தில் இறங்கலாம் என்று மற்றவர்கள் சொன்னார்கள். ஆனால், விக்கிரமனோ மாமல்லபுரத்துக்கே போக வேண்டும் என்றான். அவன் குழந்தையாயிருந்த காலத்திலிருந்து மாமல்லபுரத்துச் சிற்ப வேலைகளைப் பற்றிக் கேட்டிருந்தான். அவற்றைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை அவனுக்கு நெடுநாளாக உண்டு. பல்லவ வீரர்கள் அவனைச் சிறைப்படுத்திக் கொண்டு வந்து மாமல்லபுரத்துக் கடற்கரையில் கப்பலேற்றியபோதே, "ஐயோ! இவ்வூரின் சிறந்த சிற்பங்களைப் பார்க்காமல் போகிறோமே?" என்று வருந்தினான். இப்போது அங்கே இறங்கினால் அந்த ஆசை நிறைவேறுமல்லவா?

இதுவன்றி, இன்னொரு முக்கிய நோக்கமும் இருந்தது. தாய்நாட்டிலிருந்து சிறந்த சிற்பிகளையும் சித்திரக்காரர்களையும் செண்பகத் தீவுக்கு அழைத்துப் போக அவன் விரும்பினான். நாளடைவில் செண்பகத் தீவை ஓர் அற்புத சிற்பக் கூடமாகவே செய்து விட வேண்டுமென்பது அவன் கொண்டிருந்த மனோரதம். அத்தகைய சிற்பங்களையும் சித்திரக்காரர்களையும் மாமல்லபுரத்திலல்லாமல் வேறு எங்கே கண்டு பிடிக்க முடியும்? சோழ நாடுதான் இப்போது பழைய பெருமையெல்லாம் போய்ப் பாழடைந்து கிடக்கிறதே!

இதையெல்லாந் தவிர, ஒருவேளை விக்கிரமன் மாமல்லபுரத்தில் இறங்க விரும்பியதற்கு இன்னொரு காரணமும் இருந்திருக்கலாம். காஞ்சிநகர் வீதியிலும் பின்னர் மாமல்லபுரத்துக் கடற்கரையிலும் அவன் பார்த்த இளநங்கையை மீண்டும் ஒருநாள் பார்க்கக் கூடுமோ என்ற ஆசை அவன் உள்ளத்தின் அடிவாரத்தில் கிடந்திருக்கக்கூடும். இது விக்கிரமனுக்குக் கூடத் தெரியாமலும் இருக்கலாம். மனித உள்ளத்தின் அந்தரங்க மர்மம் அனைத்தையும் அறிந்து விட்டதாக யார்தான் சொல்ல முடியும்?

(தொடரும்)

த. நா.

பந்தியில் அமைச்சர்
பரிமாறுபவரிடம் சொன்னார் :
'கூட்டு வேணும்.'
எழுந்த போது
மாஜி ஆனார்!

— மாம்பலக்கவிராயர்



இடைவெளிக

எழுபத்தி இரண்டோடு ஒப்பிட்டால் முப்பத்தி ஆறு ஒரு வயசே இல்லை.

ஆனால் சிவசண்முகம் பிள்ளை (72) காத்திருக்கிறார். மயில்சாமி (36) போய் விட்டான்.

முதலில் போனில் செய்தி வந்தது. போலீஸ் ஸ்டேஷனிலிருந்து பிள்ளைவாளின் பி.ஏ. பேசினான். அவர் கூப்பிட்டு அனுப்பியதற்காகப் பார்க்க வருகிற வழியில் லாரி விபத்து. மொபெட்டும் தலையும் நசுங்கி விட்டன. மார்பில் பலத்த அடி.

"உசிர் இருக்கா?"

"அங்கியே போயிட்டது!"

பிள்ளைவாள் போனை வைத்தார். அவரது சிவா பில்டர்ஸ் அலுவலகத்தில் டைப்ரைட்டர் ஓசை, மானேஜர் போனில் பேசுவது, நாற்காலிகள் நகர்வது இப்படி சிறு சிறு சப்தங்கள் சட்டென்று அர்த்தமிழந்தன. நிசப்தம். சூன்யம்.

இந்தத் தொழிலில் அவர் இறங்கிய போது மயில்சாமிக்கு வயசு பதினெட்டு. அவன்தான் அவரது முதல் மேஸ்திரி.

நிலவிய நிசப்தத்தை அதிகாரம் செய்வது போல், ஒரு குளவி சுற்றுவது போல் நினைவில் ஒரு ரீங்காரம்.

பிள்ளைவாள் ஃபைலை மூடி வைத்து விட்டு எழுந்தார்.

வெளியில் வந்து மாடிக் கைப்பிடியில் கை வைத்து சாலையைப் பார்த்தார். கட்டட வரிசைகளைக் கடந்த வான நீலத்தில் மிதக்கிற வெள்ளை மேகங்கள். இறக்கையை அடித்து அடித்துப் பறக்கும் ஒரு கருங்குருவி.

"சாவுக்காகப் பயப்படறீங்களா மொதலாளி?"

மூன்று வருஷத்துக்கு முன் தனக்காக ஒரு சமாதி கட்டச் சொல்லிக் கேட்ட போது மயில்சாமி போட்ட கேள்வி.

"பயப்படறவன் தன் சமாதியைக் கட்டச் சொல்வானா?"

"ஹை... இது இன்னா டபாய்ப்பு! பயம் எத்தினியோ கணக்கிலே வரும். நான் பயப்படலேன்னு இல்லா காட்டிக்கிற ரூபத்திலே கூட அது வரும்!"

மயில்சாமியிடம் அவருக்கு மிகவும் பிடித்தது அந்த வெளிப்படை.

அவனுக்கும் அவருக்கும் இடையில் வயசு, அந்தஸ்து, செல்வாக்கு என்று எத்தனையோ இடைவெளிகள்.

நேருக்கு நேர் என்று இருவர் மட்டும் இருக்கும் நெருக்கத்தில் அவன் ஒரே தாண்டாகத் தாண்டி விடுவான். ஒரு சம வயசுக்காரனிடம் பேசுகிற தோழமையைக் காட்டி விடுவான்.

"சரி அப்படியே வச்சுக்க! சாவுன்னா எனக்கு ஒரு பயம். யாருக்குடா இல்லை? அதுக்காகத்தான் 'இத பார், இது இவ்வளவு தான்'னு காட்டிக்கத்தான் கட்டச் சொல்றேன்."

"நம்மாலே முடியாது மொதலாளி" அவன் நாற்காலியை நகர்த்தி எழுந்து விட்டான்.

"ஏண்டா?"

"வேற கட்டடம்னா சொல்லுங்க. இது முடியாது."

"அதான் ஏன்னு கேட்கிறேனே?"

அவன் மேல் துண்டை எடுத்து முகத்தை அழுந்தத் துடைத்தான். மூக்கு நுனி சிவந்து விடைத்தது.

"சரி... நான் வரட்டா. இந்தாங்க. வேலை கொடுக்கப் போறீங்கன்னு திருநெல்வேலி அல்வா வாங்கியாந்தேன். வேஸ்டா போவக் கூடாது" என்று கைப்பையிலிருந்து எடுத்தான்.

அது அரைக்கிலோ பாக்கெட்.

"அறுபத்தொன்பது வயசுலே அரைக் கிலோ அல்வா சாப்பிட்டா அடுக்குமாடா மயில்சாமி?"

"ஒண்ணும் ஆவாது. வெங்காய மண்டியிலே பதினெட்டு வயசுப் பையன்னு பார்க்காம குஸ்தி போட்டப்ப ஒங்களுக்கு என்னா வயசு?"

"பதினெட்டு கழிச்சுக்கோ."

"அப்பவே பதினெட்டு வயசுப் பொண்ணுகிட்ட பேசறதுன்னா ஒங்களுக்கு ஒரு கிக்கு."

"சீச்சீ"

"சரி இப்ப கூச்சப்படறீங்க! விடுங்க. அல்வா அஜீரணம் ஆகிற வயசு இன்னும் ஒங்களுக்கு வரலே மொதலாளி."

கதவு வரை போனவனை அதட்டிக் கூப்பிட்டார் பிள்ளை.

"நில்லு மயில்சாமி. இது ஒரு வினை

ள்



யாட்டு. நான் சொன்ன கட்டுமான டிசைன்களை சின்னச் சின்ன நகாசு பண்ணி எத்தனை கட்டடத்தை நீ டாப்பாக் கட்டியிருக்கே!"

"இதான் ஐஸுங்கறது!"

"ஐஸாவது நைஸாவது. வாடா இங்கே! எனக்கு இப்படி ஒரு ஆசை. நீதான் கட்டணும். நான் பார்க்கணும்" ஒரு விளையாட்டுதானே?"

"இது வெளயாட்டு இல்லே!"

அவன் தொண்டை கம்மி விட்டது. அவர் மீதுள்ள பாசம்.

புரிந்து கொண்டார்.

"டேய் மயில்சாமி, நீ பொம்பளையாடா?"

அவன் மூக்கை உறிஞ்சி விட்டுப் பதில் சொன்னான்.

"எல்லாம் ஒங்கள மாதிரிதான். எந்த ஆம்பள இங்கே அன்டர் பர்சன்டு ஆம்பிளே... எல்லாப் பொம்பளைங்களும்தான் கெடுத்து வச்சிருக்காளுங்களே!"

"யாரைடா?"

"ஆம்பிளயத்தான்."

அழுதால், உணர்ச்சிவசப்பட்டால், அது பெண் சகவாசத்தால் நேர்ந்த பலவீனம். இது மயில்சாமி கருத்து.

"டேய் மயில்சாமி! நீ மேஸ்திரி. இது வரைக்கும் எனக்காக எத்தனையோ கட்டடம் கட்டியிருப்பே. ஒரு ஐடியா சொன்னா

வையவன்

அதுக்கு மேல ஒரு சூப்பர் ஐடியா சொல்லுவே. அத்தினி கட்டடத்தில இதுவும் ஒண்ணு. யாருக்காகன்னு நெனச்சா ஒரு கட்டடம் கட்டுவோம்?"

அவன் யோசிக்கிறவன் போல் நின்றான்.

"இது ஒரு கட்டடம். ஆம்பிளை மாதிரி நின்னு கட்டு!"

ஒப்புக் கொண்டான். கட்டி விட்டான்.

சமாதி மூன்று வருஷமாக அவருக்காகக் காத்திருக்கிறது.

பின்னால் லிப்ட் வந்து நிற்கிற ஓசை. கதவு திறந்து யாரோ வருகிறார்கள். பிள்ளைவாள் திரும்பினார்.

பி.ஏ. ஏழுமலைதான். கையில் ஒரு பாக்கெட்.

"சைடு பாக்ஸிலே இது இருந்தது."

அல்வா பாக்கெட்.


மனசுக்குள் ஒரு பெரிய கிளை முறிந்த பள்ளம் உணர்ந்தார் பிள்ளை.

"பாடி எங்கே இருக்கு?"

"போஸ்ட்மார்ட்டத்துக்காக கவர்ன்மெண்ட் ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போயிட்டாங்க!"

"போன் போட்டு டாக்டரைக் கூப்பிடு. ஒரு ஃபார்மாலிட்டிக்காக செய்யறதை செய்யட்டும். ரொம்ப அறுத்துட வேண்டாம்னு சொல்லு. ஒத்துக்கலேன்னா நேரா போயிட்டு வருவோம்."

அவர் கையிலிருந்த அல்வா பாக்கெட்டைப் பார்த்தார்.



— எம். அசோக் ராஜா

"வழக்கம் போல அந்த அல்வாவை ஆபீஸ்ல எல்லாருக்கும் குடுத்துடு. இப்ப விஷயத்தை யார்கிட்டயும் சொல்லாதே."

பி.ஏ. தலையாட்டி விட்டுப் போனார்.

போன பின்பு உறைத்தது.

இல்லை. வெறும் போன் போதாது.

நேரில் போய் 'பாடி'யை வாங்கி வண்டியில் கொண்டு போய் அவன் வீட்டில் சேர்க்க வேண்டும்.

அவர் உள்ளே போய் டயல் செய்து கொண்டிருந்த பி.ஏ.விடம் கையாட்டி நிறுத்தச் சொன்னார்.

பத்து நிமிஷத்தில் ஆஸ்பத்திரி.

டாக்டர் அதிர்ச்சியுற்றார்.

"என்ன சார், இதுக்கு நீங்களே நேர்ல வரணுமா? ஒரு ஃபோன் பண்ணியிருந்தா போதுமே."

"இருக்கட்டும். எனக்கொரு ஆத்ம திருப்தி. மயில்சாமி எனக்காக எவ்வளவோ உழைச்சிருக்கான்."

அவ்வளவு தூரம் வந்தும் மயில்சாமியின் பிரேதத்தைப் பார்க்க மனசுக்குத் துணிவில்லை. காரணம் பயமல்ல.

எழுபத்தி இரண்டு வயசில் எத்தனையோ பிரேதங்களைப் பார்த்தாகி விட்டது. மரணம் பழகி விட்டது. ஒரு நண்பன் மாதிரி.

எனினும் மயில்சாமி என்ற மாஜி உடலின் சிதிலத்தைப் பார்க்க வேண்டுமா?

பி.ஏ.வை அனுப்பி போஸ்ட்மார்ட்டம் முடிந்ததும் வண்டியில் பிரேதத்தை எடுத்துப் போக ஏற்பாடு செய்து விட்டு மயில்சாமியைப் பார்க்காமலேயே திரும்பினார் சிவசண்முகம்.

வரும் வழியில் நினைவுக் குளவியின் ரீங்காரம். இல்லை. சில்வண்டு ஓசை.

வெளியூருக்கு டூர் போகும் போதெல்லாம் மயில்சாமியைக் கூட்டிப் போவார் பிள்ளைவாள். இரண்டு நோக்கம். மயில்சாமி நல்ல 'கம்பெனி' கொடுப்பான். அடுத்து கட்டடங்கள் பார்ப்பார்கள் இருவருமே. தொழில் அது. இருவருக்குமே.

மைசூரில்தான் முதன் முறையாக மயில்சாமி சொன்னான்.

"பழைய கட்டடங்களிலேயே ஒரு ராஜ ரீகம் தெரியுது முதலாளி. அந்த வளைவு நெளிவைப் பாருங்க. ஒரு அடியைக் கூட ஒரு நகாசு இல்லாம விடறதில்லை பாருங்க."

சட்டென்று அன்று அவருக்குள் ஒரு கண் திறந்தது.

வெங்காய வியாபாரத்தில், காசை அள்ள முடியவில்லை என்று 'பில்டராக' வந்தவர் பிள்ளைவாள். இதில் அள்ளி அள்ளி அலுப்புத் தட்டிய சமயம் அது.

மயில்சாமி மைசூர் மாநகரின் கட்டடங்களை மாய்ந்து மாய்ந்து ரசித்ததற்குச் சாட்சியானார்.

இது கலை. இவன் கலைஞன். பிள்ளைவாள் அவன் கண்ணை இரவல் வாங்கிக் கொண்டு கட்டடங்களைப் பார்த்தார்.

"மேஸ்திரி போயிட்டான். எத்தினியோ ஓனருங்க வாங்கிக் கைமாறி அவங்கள்ள எத்தினி பேரு நிக்கறாங்களோ தெரியலே!"

அவன் வாய் பாட்டுக்கு அலப்பிற்று. கார் மெள்ள ஓடிற்று. கட்டடம் கட்டடமாகக் கடந்தது.

அவர் உள் மனசின் வேர்களுக்கடியில் என்னவோ அசைந்தது.

"வெளயாடியிருக்கான் முதலாளி."

மைசூருக்கு அப்புறம்தான் கனவு காண ஆரம்பித்தார் பிள்ளைவாள். கட்டடக் கனவுகள். மயில்சாமியின் கொல்லு, மொழி பெயர்த்து டவுனில் எல்லாவற்றையும் நிலை நிற்க வைத்திருக்கிறது.

"ஒங்களுக்குள்ளாதான் மயில்சாமி இந்த

ஜொலி ஜொலிக்கிறான்னு ஊர்ல எனக்குக் கெட்ட பேரு முதலாளி."

"வயத்தெரிச்சல்டா."

எதற்குமே ஆசான் வேண்டியிருக்கிறது. குரு? ம்ஹூம். பெரிய வார்த்தை. ஆசான் தான் சரி.

மயில்சாமி ஆசான். அவன் கொல்லு பேராசான். அவனை மேஸ்திரி என்று வேலை வாங்கினால் மேஸ்திரியாய் விடுவது அவனுக்கு சர்வ சுலபம்.

குஜராத்தில் சத்ருஞ்ஜயா மலையடிவாரத்தில் பலிதானா நகரில் பளிங்கில் மின்னிய ஜைன ஆலயங்களில் ஆசானும் பிள்ளையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

கொல்லும் விரல்களும் காலத்தோடும் மரணத்தோடும் என்னமாய் விளையாட முடியும்! மௌனம் மொழிந்த மொழி அது. நினைத்துக் கொண்டார். டிரைவர் எதற்கோ ஹாரன் அடித்தார்.

மூன்றாம் வருஷம் மயில்சாமி கட்டிய ஷாப்பிங் ஆர்கேட் சாலையில் இடதுபுறம் நீங்கியது.

"வண்டியை ஸ்லோ பண்ணு!"

டிரைவர் வேகம் குறைத்தான்.

"நிறுத்திடு."

நின்றது.

பொடியை உறிஞ்சிக் கொண்டே மடித்துக் கட்டிய வேட்டியோடு மயில்சாமி நிற்கிற நினைவு. ஆள்காட்டி விரலை ஆர்ச்சுக்கு மேலே தூக்கிக் காட்டி "அங்கே ஒரு பின்னம் தெரியுது. ரெண்டு கொல்லு சிமிட்டி போடு" என்கிறான்.

காரை விட்டு இறங்கி வெளிச்சமும் காற்றும் துள்ளி ஓடி வரும் கட்டடத்திற்குள் காலாற நடந்து ரசிக்க வேண்டும் போல் ஓர் குறுகுறுப்பு. வேண்டாம். இப்போதே கண்கலங்கிக் கொண்டிருக்கிறது.

"வண்டியை எடுப்பா!"

வண்டி புறப்பட்டது.

அலுவலகத்தில் நுழைந்ததுமே 'கஸ்டமர்'கள் காத்திருந்தனர். காந்தி நகர் எக்ஸ்டென்ஷனில் ஒரு புது ப்ராஜெக்ட். எல்லாம் முன்பணம் கட்டியிருப்பவர்கள்.

ஒவ்வொருவர் அவசரமும் பிரச்சனையும் கவலையும் கேட்டுச் சமாளித்து அனுப்ப கவனம் மாறி விட்டது.

எல்லாரும் போன போது மணி பார்த்தார்.


நாலரை.

இருந்திருந்தால் மயில்சாமியை உட்கார வைத்துக் கொண்டு பேசியிருப்பார். கஸ்டமர்

மோட்டார் சைக்கிள் பரிசுத் திட்டம் — 25


இந்த வாரம் போட்டி ரொம்ப கலபம்! கீழேயுள்ள குறிப்புகள் உணர்த்தும் திரைப்படங்கள் என்ன என்பதை அந்தந்த எண்களுக்கு நேராகக் கூப்பனில் எழுத வேண்டும். அடுத்த வாரத்துடன் இந்தப் போட்டி முடிகிறது. அடுத்த வார கூப்பன் உள்பட நீங்கள் சேகரித்த அனைத்து கூப்பன்களையும் ஒன்றாக அனுப்புங்கள். அதிகமான போட்டிகளில் பங்கேற்று அதிகபட்ச சரியான விடைகளை எழுதும் ஒருவருக்கு மோட்டார் சைக்கள் பரிசு. ஆறுதல் பரிசுகளும் உண்டு. ஆசிரியர் தீர்ப்பே இறுதி.


குறிப்புகள்

1. 

2. தம்பி **தம்பி**

3.

4. 

5. 

6. 6 ⟶ 60

சினிமா பெயர்

1.
2.
3.
4.
5.
6.

என் பெயர்: ....

முகவரி: ....

....

....

கள் விருப்பம் புரிந்து கொள்வான். இனி அவனில்லை.

ஒரு பெருமூச்சு உள்ளே புதைந்தது.

'இண்டர்காம்' எடுத்து பி.ஏ.வைக் கூப்பிட்டார். வந்தான்.

"பாடி ரொம்ப டேமேஜ் ஆகலியே?"

"இல்லே."

"வீட்ல சேர்த்துட்டீங்களா?"

"ஓ!"

மயில்சாமியின் வீடு. அது எப்படி இருக்கும்?

எவ்வளவு பேசினான். சிரித்தான். சிரிப்பு மூட்டினான். சொல்லவில்லையே. வாடகையா சொந்தமா? அதுவும் தெரியாது.

என்னடா வாழ்க்கை... என்னடா உறவு! அவன் சொல்லவில்லை. மாட்டான். என்ன இடைவெளி தாண்டினாலும் மயில்சாமி இடைவெளிகளை மதிக்கிற மனிதன்.

நிறையக் கூலி கொடுத்திருக்கிறார். அவன் கேட்டு அல்ல. சுயமாக. எனினும் நீ இருக்கும் வீடு சொந்தமா, வாடகையா கேட்டிருக்க வேண்டாமா நான்?

அடிமட்டத்தில் தாழ்ந்தது போல் ஒரு குறுகலை உணர்ந்தார் பிள்ளை.

தான் முதலாளி.

மதிக்க வேண்டியது தொழிலாளியை அல்ல. அவன் தொழிலை. அப்படித்தான் இருக்கத் தெரிந்திருக்கிறதோ தனக்கு?

"வீடு எங்கே இருக்கு?"

"அஞ்சு கை விளக்காண்டே."

அதற்கு மேல் பி.ஏ.விடம் கேட்க அவமானமாக இருந்தது. அவர்கள் இருவர் நட்பையும் நேரில் அறிந்த பி.ஏ. கூட மேலே கேட்டால் இதுதான் முதலாளி புத்தி என்று நினைப்பான்.

"அடக்கம் எப்பவாம்?"

"ஆறு மணிக்குன்னு பேசிட்டாங்க."

"வண்டியை எடுக்கச் சொல்லு!"

புறப்பட்டனர்.

மார்க்கெட் வரும் போது ஆளுயர மாலை வாங்கக் காரை நிறுத்தச் சொன்னார். பி.ஏ. இறங்கிப் போனார்.

தெற்கே பிரிந்த பாதை தெரிந்தது. அரை கி.மீ. போனால் மயில்சாமி அவருக்காகக் கட்டியிருக்கும் சமாதி.

"சமாதியா மணிமண்டபமாடா மயிலு?"

"மனசுக்கேத்த மாதிரி அமைஞ்சிருக்கு."

மயில்சாமி கட்டடக் கலையில் அந்தச் சமாதியில்தான் கொடி நாட்டியிருந்தான்.

"பார்க்கப் பார்க்க இப்பவே செத்துப் போயிடலாம் போல இருக்குடா மயிலு!"

"அப்ப நாளைக்கு கார்த்தால இடிச்சுத் தள்ளிடறேன். வேகமாய்ச் சொன்னான். உள்ளன்பு கணகணத்தது.

கண்களில் நீர் முட்டியது. பின்னைவாள் மேல் துண்டால் கண்துடைத்தார். டிரைவர் அறியாமல்.

ஆளுயர மாலையோடு பி. ஏ. வந்தான்.

பத்து நிமிஷத்தில் அஞ்சு கை விளக்கு ஏதோ ஒரு குறுகல் சந்து. கல் படி வைத்த பழைய கால ஓட்டு வீடு. நீளமான ஜல்லிக் கல் திண்ணை.

பார்த்ததுமே இங்கேயா அவன் வசித்தான் என்று நெஞ்சு உலுக்கிற்று.

அவரைப் பார்த்ததுமே உறவுக் கூட்டத்தில் ஒரு அலை அடங்கி மறு அலை பெரிதாக எழுவது போல் ஓலம். ஒப்பாரி.

கூடம் சிறியது. மூச்சு முட்டிற்று. ஜன்னல் இல்லை. கூரையில் விரிசல் உளுத்த சுவர். பழைய மரப் பெஞ்சின் மேல் நெற்றி மட்டும் திறந்திருக்க, வெள்ளை பாப்ளின் துணியில் மூடிய உடம்பு.

கவிந்து மூடிய கண்.

"அடக்கமா தகனமா?" பக்கத்தில் யாரோ யாரிடமோ.

"அடக்கம்தான். இடுகாட்டுக்கு ஆள் போயிருக்கு, குழிதோண்ட."

அப்போதுதான் அவர் மனம் புரண்டது. பனிச்சென்று பெரிய சுழலில் மாட்டியது போல. பெரிய அலை.

பி.ஏ.வை அழைத்தார்.

செய்யப் போவது சரியா?

சரி... சரி. அவன் வந்தான்.

"ஏம்பா... நம்ப தோட்டத்துக்கே பாடியை கொண்டு போயிடலாமே... சொந்தக்காரங்களைக் கேட்டுச் சொல்றியா?"

பி.ஏ. விழித்தார்.

"அங்கே இனிமே போயி குழி வெட்டனுங்களே!"

"எதுக்குய்யா... அவனே கட்டி வச்சிருக்கானே. மணிமண்டபம் மாதிரி ஒரு சமாதி. அவனுக்கில்லாமே வேற எவனுக்குய்யா அது?"

பி.ஏ. பொறிதட்டி நின்று விட்டார்.

'அவன் கலைஞன்யா... மகா கலைஞன்' என்று உரக்கக் கூவத் தோன்றிற்று. எத்தனை பேருக்குப் புரியும்? பி.ஏ.வுக்கே புரியுமா?

கூட்டமாக நின்றிருந்த உறவினர்களிடம் பி.ஏ. போவதையே பார்த்தவாறு நின்றார் அவர்.



சுண்டி இழுக்குது சின்னத் திரை!

டி.வி. சீரியல்களில் தீவிரம் காட்ட ஆரம்பித்திருக்கிறார் கே.பி. சட்டென்று ஏன் இந்த உஜாலா?

ஏரான கேள்விகள். என்னென்னவோ பேச்சுகள். பாலசந்தரிடமே கேட்டால் என்ன?

சன் டீ.விக்காக 'கையளவு மனசு' ரீ-ரெக்கார்டிங், தூர்தர்ஷன் அனுமதி வழங்கியிருக்கும் 'குகனுக்குக் கோபம் வந்தது' சீரியலுக்கான 'பைலட்' தயாரிப்பு இரண்டுக்குமிடையே இறக்கை கட்டிப் பறந்து கொண்டிருந்தவரை ஒரு மாலை வேளையில் மடக்கிக் கேட்டபோது,

''ஒரு கலை உருவத்தை, நாம் நினைத்தபடி எடுக்க முடியாமல் பல வகையிலும் தடை போடும் சினிமா மீடியமைவிட, டீ.வி. எனக்கு ரொம்ப வசதியாக இருப்பதாக உணர்கிறேன்'' என்றார்.

அட, இதென்ன புதுக்கதை?

''பாலசந்தர் பெயருக்காக மட்டும் என் படங்கள் ஓடிய காலம் உண்டு. நான் செய்த சில 'பரீட்சை'கள், மாறுபட்ட அணுகுமுறையாகப் பரவலாக ரசிக்கப்பட்டன. 'நினைவலைகளில்' சொல்லியிருந்தேனே, 'பாலசந்தர் டச்' - என்னை நிலைநிறுத்திக் கொள்ள நான் கையாண்ட சில உபாயங்கள் - அவை இனி தேவையில்லை என்று நான் கருதியதை மக்கள் ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள். தவிர,

டட்ட டட்ட டாடா!

'கையளவு மனசு' தொடரின் ஹீரோ 'நிஜூஸ்' வரதராஜன் என்றாலும் தொடரின் ஒட்டுமொத்த கவன ஈர்ப்பாளர் தீபிகா. ஆறு வயது. ஒண்ணாங்கிளாஸ். பத்மா சேஷாத்ரி பூ.

குறும்புப் பேச்சு, உருட்டு விழி, மழலைப் புன்னகை என்று காண்போரைக் கட்டிப் போடும் இந்தக் கட்டிப் பெண்ணை கே.பி. 'மழலை மேதை' என்கிறார்!

மூன்று வயதில் பாட ஆரம்பித்த தீபிகாவுக்கு வயலினும் வாசிக்கத் தெரிந்திருப்பது ஆச்!

நியூட்ரின் மகா லாக்டோ விளம்பரத்தில் 'டட்ட டட்ட டாடா' என்று கொஞ்சும் குரல் இவளுடையதுதான். தவிர சில தெலுங்குப் படங்கள், தனியார் கேஸட்டுகள் என்று ஐந்து வயதிலேயே கலக்க ஆரம்பித்துவிட்ட தீபிகா, கே.பி. கண்ணில் பட்டது அமீர்ஜான் மூலம். இப்போது மும்முரமான மழலை ஆர்ட்டிஸ்ட்!

கீழே வருபவை, தீபிகா சொன்னவை :

1. கேமரா முன்னாடி நிக்க எல்லாரும் மொதல்ல ரொம்ப பயப்படுவாங்களாம். எனக்கென்ன பயம்?

2. ஷூட்டிங் ரொம்ப ஜாலியா இருக்கு. டைரக்டரோட அஸிஸ்டெண்ட் சரவணன் எனக்கு ரொம்ப ஃப்ரெண்ட்.

3. டைரக்டருக்கு ரொம்பக் கோபம் வரும். ஆனா நான் இதுவரைக்கும் திட்டு வாங்கவே இல்லை! எனக்கு அக்காவா நடிக்கிற பொண்ணு டோஸ் வாங்கியிருக்கா. ஆனா, ரொம்ப 'டோஸ்'னா எதிர்வீட்டுக்காரரா வராரே கிருஷ்ணன்... அவர் ஒய்ஃபா நடிக்கிற ரேணுகாவுக்குத்தான்!

4. ஐஸ்கிரீம் ரொம்பப் பிடிக்கும். ஆனா பாடணுமே? அம்மா கூடாதுன்னுட்டா.

5. 'கஜல்' கேட்பேன். ரொம்பப் பிடிக்கும். பெரிய ஸிங்கராகணும்னுதான் ஆசை.

• தீபிகா. (படம்: ராஜு நாராயண்)



• 'கையளவு மனசு'- படப் பிடிப்பில்...



இன்றைய சூழ்நிலையில், வியாபார ரீதியில் சில சமரசங்களுக்கு நாம் கட்டுப்பட நேர்வது தவிர்க்க முடியாமல் போகிறது. இந்த 'காம்ப்ரமைஸ்'களுக்குக் கட்டுப்படும் போது கலை செத்துவிடுகிறது. உடனே 'You too K.B.?' என்று கேட்டு விடுகிறீர்கள்."

அதனால்?

"நான் நினைத்ததை, நினைத்தபடி, அணு அணுவாக ரசித்து, எந்த நிர்ப்பந்தங்களுக்கும் ஆளாகாமல், என் விருப்பப்படி டீ.வி.யில் தர முடிகிறது. கலைஞனுக்கு வெளிப்பாடு முக்கியமே தவிர, எந்த மீடியமாக இருந்தால் என்ன?

ஆக, இதுதான் காரணம்?

"இதுமட்டுமல்ல. பல காரணங்களால் ஒரு படத்துக்கும் அடுத்ததற்கும் நடுவே இடைவெளி – அது சற்று அதிகமாகவும் இருக்கலாம் – ஏற்படலாம். என்னை விடுங்கள். என்னை, நான் படமெடுப்பதை நம்பி எத்தனை ஊழியர்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள் இருக்கிறார்கள்? அவர்களுக்கு வேலை தரவேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறதல்லவா? இது ஒரு முக்கிய காரணமில்லையா?"

ஸோ, இனி டீ.வி.தானா?

"அப்படி அல்ல. இது சௌகர்யமாக இருக்கிறது. சினிமாவைப் போல் பேக்-கிரௌண்ட், லொக்கேஷன் என்று சப்ஜெக்டை விட்டு விலகி அலையாமல் டைட்-குளோசப்பில் உணர்ச்சிகளை கண்கள், நாசி, உதடு மூலம் மட்டுமே வரவழைப்பது சவாலாக, சுவாரஸ்யமாக இருக்கிறது. ஆனாலும் சினிமாவை அத்தனை சுலபத்தில் விட்டுவிடுவதா? கைவசமுள்ள டீ.வி. வேலைகள் முடிந்ததும் கமலை வைத்து அடுத்தப் படம்."

—பா. ராகவன்

52

அலமாரியைத் திறந்து அதிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துக் கங்காவிடம் கொடுத்தாள், அமராவதி.

"படிச்சுப்பாரு கங்கா, பவித்ராவும் அன்னிக்கு உன் தம்பி பண்ணின மாதிரி லெட்டர் எழுதி வெச்சுட்டுப் போயிட்டா. அவளோட இந்தாத்து வேலைக்காரி தங்கமும் போயிருக்கா."

கங்கா அதைப் பிரித்துப் படிக்கலானான்.

'அன்புள்ள அம்மா, பெரியம்மா, தாத்தா,

உங்கள் எல்லாருக்கும் பவித்ரா அன்புடன் எழுதிக் கொண்டது. படிப்பை முடித்த பிறகு நான் குதிக்க எண்ணி இருந்த போராட்டத்தில் இப்போதே குதிக்க வேண்டிய கட்டாயம் நிகழ்ந்து விட்டது. வடக்கே செயல்படும் ஒரு தீவிரவாத இயக்கத் தலைவரின் கட்டளைப்படி சென்னையிலிருந்து சிலர் கிளம்பிப் போகிறோம். போய்ச் சேர்ந்த பிறகு எந்த இடம் என்பதைக் கட்டாயம் தெரிவிப்பேன். இப்போது சொல்லக்கூடாது என்பது உத்தரவு. நான் பத்திரமாக இருப்பேன். கவலை வேண்டாம்.

நம் வீட்டு வேலைக்காரி என்னுடன் அவ்வப்போது தேசியவிடுதலைப் போராட்டம் பற்றியெல்லாம் விவாதிப்பது வழக்கம். நீல் சிலை உடைப்புச் சத்தியாகிரகத்தில் முருகப் படையாச்சியும் அவர் மனைவி அஞ்சலையம்மாளும் தங்கள் கைக்குழந்தையுடன் சிறை சென்றது பற்றி ஒரு தரம் அவளுக்குச் சொன்னபோது அவள் மனத்தில் நாட்டுப் பற்றின் வித்து விழுந்திருக்கலாம். தங்கத்துக்கு ஏதும் நேராத வரையில் அவள் என்னைப் பாதுகாப்பாள் என்ற நிம்மதியோடு நீங்கள் இருக்கலாம். நம்பகமான யாரையும் இயக்கத்தில் சேர உடனழைத்து வரலாம் என்பது தலைவரின் அனுமதியாதலின், நான் தங்கத்தை அழைத்துச் செல்லுகிறேன். தங்கம் உங்களிடமெல்லாம் விடை பெற்றுக் கொண்டு, வாழ்த்துக்களோடு புறப்படவில்லையே என்று வருத்தப்படுகிறாள். அது குறித்து உங்களுக்கு எழுதச் சொன்னாள். தன்னை மன்னிக்கச் சொன்னாள். எங்கள் இருவரையும் மன்னிப்பீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

உங்களிடம் உத்தரவு கேட்டிருந்தால் தந்திருக்க மாட்டீர்கள். இப்போதெல்லாம் நம் வீட்டில் எல்லாருமே காந்தி மயக்கம் கொள்ள ஆரம்பித்திருக்கிறீர்கள். என்னை என் வழியில் போக விடாமல் தடுக்கப் பார்ப்பீர்கள். வாக்குவாதங்கள், கண்ணீர்த் துளிகள், மனக்கசப்பு ஆகியவற்றைத் தவிர்ப்பதற்காகவே நான் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பி விட்டேன்.

கங்காவைப் பார்க்க வாய்க்கும் போது என் கடிதம் பற்றிச் சொல்லுங்கள். கங்காவின் மேல் எனக்கு எந்த வருத்தமோ மனத்தாங்கலோ கிடையாது என்பதையும் தெரிவியுங்கள்.

நான் சாதனை புரிந்து வெற்றியோடு திரும்ப, உங்கள் அனைவரின் ஆசிர்வாதத்தையும் வேண்டுகிறேன்.

அன்புள்ள,
பவித்ரா.'

கடிதத்தைப் படித்து முடித்த பிறகு கங்காவின் விழிகளில் நீர் படர்ந்தது.

"என்னிக்குக் கிளம்பிப் போனா?"

"நேத்து ராத்திரி படுத்துண்டா. காலம்பர ஆள் இல்லே. தங்கம் கூடப் போறது ஒண்ணு தான் எங்களுக்கு ஒரு ஆறுதல்" என்றாள் அமராவதி.

கடிதத்தை மடித்து அவளிடம் திருப்பிக் கொடுத்த கங்கா, "ஒரு வேடிக்கை தெரியுமா உங்களுக்கு? நானும் கல்கத்தா போறேன். நாளைக்குக் கிளம்பறதா இருக்கேன். அதான் சொல்லிண்டு போகலாம்னு வந்தேன்...."

"ஒரு வேளை அவளும் கல்கத்தாவுக்குத் தான் போறாளோ என்னமோ!" என்று

மணிக்கொடி

ஜோதிர்லதா கிரிஜா



மலர்ச்சியுடன் குறுக்கிட்டுச் சொன்ன அஞ்சனாவுக்கு, அப்படித் தான் இருக்கும் என்ற நம்பிக்கையில் படபடவென்று வந்தது.

"அங்கதான் தீவிரவாதம் ஜாஸ்தி. ஆனா பஞ்சாப், ஒரிஸ்ஸா இங்கேல்லாமும் இருக்கு. மகாராஷ்டிரத்திலயும் இருக்கு. அதான் போனதும் என்ன இடம்னு எழுதறேன்னிருக்கானேம்மா?" என்றார் ராஜாராமன்.

"அப்ப நான் போயிட்டு வரட்டுமா?" என்ற கங்கா எல்லாரையும் பார்த்துக் கை கூப்பினான்.

படி இறங்கித் தெருவுக்கு வந்த பிறகு அதுகாறும் அவன் அடக்கிக் கொண்டிருந்த உணர்ச்சிகள் கட்டுப்பாடிழந்து பீறிட்டன. 'கங்கா, உம்மேல எனக்கு எந்த வருத்தமும் கிடையாது. எந்த மனத்தாங்கலும் கிடையாது' என்று அவள் திரும்பத் திரும்பக் கூறுவது போல் அவனுக்குப் பிரமை தட்டியது.

'இல்லே. பொய். நீ பொய் சொல்றே. வருத்தமும் மனத்தாங்கலும் இருந்ததனால தான் சொல்லிக்காம போயிட்டே. நான் பின் வாங்கினது தப்பாவே இருக்கட்டும். அதுக்காக எனக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? எத்தனை வருஷத்துப் பழக்கம்? சின்ன வயசுலேருந்து பழகின சிநேகிதம் கூடவா செத்துப் போயிடும்? பெண்கள் கிட்ட எவ்வளவுக்கெவ்வளவு மென்மை இருக்கோ, அவ்வளவுக்கவ்வளவு கல் மனசும் இருக்குன்னு தோணறது!'

ராமசாமி கண்ணிமைக்காமல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு திடீரென்று உணர்ச்சியின் பிடியில் சிக்கியவராய், "கங்கா, கங்கா..." என்று அரற்றிய வண்ணம் ஒரே பாய்ச்சலில் அவனைத் தம்மோடு சேர்த்துப் பிடித்துக் கொண்டு அவன் தோளில் முகம் பதித்துக் கழுத்தில் முத்தமிட்டார். கங்கா ஆடிப் போனான். மறுநாள் சென்ட்ரலில் நண்பர்களைப் பார்த்து, 'சாரி, என்னால் வரமுடியாது' என்று சொல்லி விடலாமா?' எனும் எண்ணம் கணம் போல் அவனுள் கிளர்ந்து கொள்ள, அவரது அணைப்பு தன்னைப் பலவீனப்படுத்தி விடுமோ என்ற பயமே அவனிடம் அதிகமாக இருந்தது!

"தேசபக்தி அது இதுங்கறேள். ஆனா அவாவா வீட்டுப் பிள்ளைகளை விடுதலைப் போராட்டத்துல கலந்துக்கறதுக்கு அனுப்பற நிலை வர்றப்ப மட்டும் எங்கேப்பா அதெல்லாம் ஓடிப் போறது?... பவித்ரா கூட அவா வீட்டு வேலைக்காரி தங்கத்தோட வடக்கே எங்கேயோ ஓடிப் போயிட்டா. சூர்யா சென்னோட ரிபப்ளிகன் ஆர்மியில சேர்றதுக்குன்னு நினைக்கறேன். அவாத்துலயும் எல்லாரும் அழுது மாஞ்சண்டிருந்தா நான் சொல்லிக்கப் போனப்ப."

"அட, அப்படியா?"

"ஆமா. உங்களை ராஜாராம் மாமா வரச் சொன்னார்ப்பா. சவுகரியப்படறப்பல்லாம் போங்கோ."

கங்கா புறப்பட்டுப் போனதன் பின் ராமசாமி ராஜாராமனின் வீட்டுக்குப் போய் அவரோடு நிறைய நேரம் பேசிக் கொண்டிருந்தார். காந்தி சென்னையில் தங்கிக் கலந்து கொண்ட பல்வேறு சமூக நிகழ்ச்சிகளிலும் இருவரும் தம் சகாக்களுடன் கலந்து கொண்டார்கள். காந்தியின் ஆணித்தரமான

பேச்சு மழையில் நனைந்து குளிர்ந்து, தங்கள் மனச்சூட்டைப் பெருமளவுக்குத் தணித்துக் கொண்டார்கள். காந்தி சென்னைப் பட்டணத்தையே ஒரு கலக்குக் கலக்கிவிட்டு ஒரு வாரம் கழிந்ததும் பம்பாய் நோக்கிப் பயணமானார்.

பவித்ரா, கங்கா இருவரும் புறப்பட்டுப் போனதன் பின் இருவாரங்கள் சென்ற பிறகும் இரு குடும்பத்தினருக்கும் கடிதம் ஏதும் வரவில்லை. இதனால் இருதரப்பினருக்கும் மாளாக் கவலை மூண்டது. இதற்கிடையே விரைவில் வர இருந்த சைமன் கமிஷனுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கண்டனக் கூட்டங்கள் நாடெங்கிலும் நடக்கலாயின. வடக்கிலிருந்து வந்த அது பற்றிய பத்திரிகைச் செய்திகளால் இரு குடும்பத்தினரும் திகிலடித்துப் போயினர்.

53

சைமன் கமிஷனை எதிர்த்துக் காந்தியடிகளின் ஆணைப்படி நாடு தழுவிய கடையடைப்பு வெற்றிகரமாக நடந்து முடிந்த செய்தியைக் காங்கிரஸ்காரர்கள் பத்திரிகைகளில் படித்து மகிழ்ந்து அவரது தலைமையின் இன்றியமையாமையை வாயாரப் பரப்பினர். சைமன் கமிஷன் 1928 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3 ஆம் நாளன்று பம்பாயில் வந்திறங்கியது எனில் அதே பிப்ரவரி மாதம் 12 ஆம் நாளில் வல்லபாய் படேலின் தலைமையிலான விவசாயிகளின் வரிகொடா இயக்கம் மாபெரும் வெற்றியைப் பெற்றது.

அது பற்றிப் பேசிக் கொள்ள வாய்த்த போது, மணவாளநாயுடு ராமசாமியிடம், "என்னங்காணும்? வல்லபாய் படேல் முரட்டு ஆசாமியாமே? கொலை, கொள்ளைக் கேஸ்கள்ள யமனாமே? ஜட்ஜுகளுக்கெல்லாம் அவர் சிம்ம சொப்பனம்கறாங்க? அவர் போர்சால்ங்கிற ஊர்ல ப்ராக்டிஸ் பண்ணத் தொடங்கினதும் ரெசிடென்ட் மாஜிஸ்ட்ரேட்ஸ் கோர்ட்டையே வெள்ளைக்காரன் ஆனந்த்ங்கிற ஊருக்குத் தூக்கிட்டானாமே?" என்றார் வியப்பாக.

"அவர் ஆனந்த்ல ப்ராக்டிஸ் பண்ணத் தொடங்கினதும் மறுபடியும் போர்ஸாலுக்குத் தூக்கிட்டான் கோர்ட்டை! அது தெரியுமா உமக்கு?.... ஆனா, பாரும், அப்படிப்பட்ட ஒரு முரட்டு ஆளு காந்திக்கு முன்னால அப்படியே மண்டி போடாத குறையாப் பணிஞ்சு போயிட்டாராமே? குஜராத் முழுக்க ஆச்சரியப்படறாளாம். ராஜாராமய்யருக்கு அவரோட பாம்பே ப்ரண்டு ஒருத்தர் எழுதி இருக்கார்."

"காந்தியோட வலது கையாட்டமா ஆயிட்டாராம். அது சரி, இன்னும் கங்கா லெட்டரே எழுதல்லே இல்லே? அந்தப் பொண்ணாவது அவங்களுக்கு எழுதிச்சாமா?"

"இல்லே, நாயுடுகாரு. லெட்டரெல்லாம் எழுதக் கூடாதுன்னு ஏதாவது அவாளுக்குள்ள கட்டுப்பாடு இருக்குமோ என்னமோ. இருந்தாலும் ராஜாராமய்யர் அந்தப் பொண்ணோட ஃபோட்டோவைத் தன்னோட வடக்கத்திக் காங்கிரஸ்கார ப்ரண்ட்ஸ்க்கெல்லாம் அனுப்பி வெச்சிருக்காராம் - கவனிச்சு, தெரியவந்தா தகவல் குடுக்கச் சொல்லி" -

மேலும் கொஞ்ச நேரம் காந்தியடிகளுக்குப் பெருகிவரும் செல்வாக்கு பற்றி வியந்து பேசிக் கொண்ட பின் இருவரும் பிரிந்தார்கள்.


அலெக்சாண்டரின் பதவியில் பதிலுக்கு வந்து சேர்ந்த கிறிஸ்டாபர் முரட்டு ஆளாக இருந்தான். நிக்கல்சனை விடவும் மோசமான ஆளாக இருந்ததைக் கவனித்து அந்தமான் கைதிகள் திகிலடித்துப் போயினர். சாவர்க்கர் காலத்திலும் அதற்குப் பிறகும் தற்கொலை செய்து கொண்டவர்கள், பைத்தியம் பிடித்தவர்கள் ஆகியோரின் எண்ணிக்கை போல் இனிப் பன்மடங்கு பெருகும் என்ற அச்சமான எண்ணம் எல்லாருக்குமே வந்தது. நிக்கல்சனின் தூண்டுதலின் பேரில் சாவர்க்கருக்கு மாட்டப்பட்ட மோசமான விலங்குகள் மாற்றி மாற்றி நரேந்திரநாத் பானர்ஜிக்கு மாட்டப்படலாயின. கிறிஸ்டாபருக்கு அவன் கொடுத்த மனு நிராகரிக்கப்பட்டது. ஒரு முறை சிறைக்கு வந்த கிறிஸ்டாபர், "இங்கு வந்த முதல் நாளே

"'உங்களுக்காக என்ன வேண்டுமென்றாலும் செய்யத் தயாராக இருக்கிறேன்' என்று மேடையில் சவால் விட்ட மந்திரி ஏன் கோபமாக இறங்கிப் போய்விட்டார்?"

"கூட்டத்திலிருந்த யாரோ ஒருவர் 'உங்க சொத்துக் கணக்கைக் காட்டுங்க போதும்'னு சொன்னாராம்!"

— வி. சிவா





"நம்ம பையன் ஆங்கிலத்துல சுத்த கூமுட்டையாய் இருக்கான்னு நீங்க சொல்றதை என்னால ஒத்துக்க முடியாது."

"ஏன்?"

"பக்கத்து வீட்டு பெண்ணை 'ஹாய் டார்லிங்'னு சொன்னதை என் காதால கேட்டேன்!"

— நியூபாம்பே ஜான்

கலகம் தொடங்கியவன் நீதானா? கீழ் அதிகாரிகளிடம் நற்பெயர் பெறத் தவறும் யாருக்கும் மேலதிகாரிகளின் தயவு கிடைக்காது" என்றான்.

"கீழதிகாரிகள் நியாயமாக நடக்காவிட்டால்?" என்று ஆத்திரத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு சிரித்தபடியே வினவிய நரேந்திர நாத் பானர்ஜிக்கு, "இது போன்ற அதிகப் பிரசங்கித்தனமான கேள்விகளால் மேலும் ஒரு விலங்கு மாட்டப்படும்" என்று கூறிச் சிரித்துவிட்டுப் போனான் கிறிஸ்டாபர். முகம் கறுத்துச் சிறுத்துப் பல்லைக் கடிப்பதைத் தவிர அவன் செய்யக்கூடியது வேறெதுவுமில்லாது போயிற்று.

கடைசியில் அமராவதியிடமிருந்து அவனுக்குக் கடிதம் வந்தது. சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட சாதாரணக் கடிதமாக - விவரங்கள் அற்ற - கடிதமாக அது இருந்தாலும், அவனுக்கு அவளையே நேரில் சந்தித்த புளகிதம் உண்டாயிற்று. அவளை அவன் அறவே பிரிந்த பின் வரும் அவளது முதற் கடிதம்! எல்லாரும் நலம் என்பதைச் சொன்ன பின் அவன் எப்போது இந்தியா திரும்புவான் என்று கேட்கப்பட்ட அர்த்த மற்ற கேள்வியுடன் கடிதம் முடிந்திருந்தது. தனது கடிதம் பற்றி அவள் ஏதும் எழுதக் கூடாது என்பதால் அவள் மவுனம் சாதித் தாளா, இல்லாவிடில் தன் கடிதம் அலெக் சாண்டரால் அவள் விலாசத்துக்கு அனுப்பப் படவில்லையா என்பதைத் தெரிந்த கொள்ள அவனுக்கு வழியே இல்லாது போயிற்று. 'பவித்ரா இப்போது என்ன செய்து கொண் டிருக்கிறாள் என்பது பற்றி ஒரு வரி கூட இல்லையே? எனக்குக் கடிதம் எழுதும் உற்சாகத்தில் அமராவதி மகளை மறந்தே போய் விட்டாளா?'


நரேந்திரநாத் பானர்ஜி உடனே உட்கார்ந்து பதில் எழுதினான். உப்புச் சப் பற்ற கடிதப் பரி மாற்றம் அவனுள் சோர்வை உண்டாக்கிற்று. தான் உயிருடன் இருப்பது பற்றிய தகவலைத் தவிர வேறு எதையும் தராத கடிதம் என்று எண்ணிக் கசப்புடன் சிரித்தான். 'ஏதோ, அந்தத் தகவலையாவது பரிமாறிக் கொள்ள ஆண்டுக்கு இரண்டு முறை அனுமதிக்கிறார்களே!'

இந்தச் சில நாட்களில் விசாலம் இளைத்தும் கறுத்தும் போய்விட்டிருந்தாள். அமராவதியின் பெண்ணும் வடக்கே வேலைக்காரி தங்கத்துடன் புறப்பட்டுப் போய்விட்டாள் என்ற சேதியை ராமசாமி அவளுக்குச் சொன்ன போது அவள் அடங்காத வியப்படைந்தாள். ஒரு நாள் மூன்றாவது வீட்டில் வசிக்கும் செல்லம்மாள், கங்காவும் அந்தப் பெண்ணும் 'ஓடிப் போய்விட்டதாக' ஊரில் பேசிக் கொள்ளுகிறார்கள் என்பதாய்ப் பயந்து கொண்டே - அல்லது பயப்படுவது மாதிரி நடித்துக் கொண்டே - விசாலத்திடம் தெரிவித்த போது அவள் நடுநடுங்கிப்போய்விட்டாள். அப்படியும் இருக்குமோ என்று கூடக் கணம் போல் நினைத்தும் விட்டாள். ஆனால் கங்கா, தான் வளர்த்த பிள்ளை அப்படி எல்லாம் பண்ணக் கூடியவனில்லை என்ற நம்பிக்கை அடுத்த கணமே அவளுள் தோன்றியது. 'ரொம்ப நன்னாருக்கு, மாமி. ஊர்ல யாரோ கிரிசை கெட்டவா வாய்க்கு வந்ததைப் பேசறான்னா, நீங்களும் அதைப் பெரிசா என் கிட்டவே வந்து சொல்றேளே? அந்தப் பொண்ணு போன இடமே அவாளுக்குத் தெரியாது. எங்காத்துப் பிள்ளையாண்டானாவது கல்கத்தாப் பக்கம் போறேன்னு சொல்லிட்டுப் போயிருக்கான்' என்று மறுத்து அவள் வாய்க்குத் தன்னைப் பொறுத்த மட்டில் பூட்டுப் போட்டாள்!

ராஜாராமன் வீட்டிலும் வெளிப்பார்வைக்கு எல்லாம் அமைதியாகத் தெரிந்த போதிலும் ஒவ்வொருவருள்ளும் ஓர் எரிமலை குமுறிக் கொண்டிருந்தது. பவித்ராவிடமிருந்து கடிதம் கூட வராதிருந்ததுதான் அவர்களது கவலையை அதிகரிக்கச் செய்தது.

பர்தோலி இயக்கத்தின் விளைவாக விவசாயிகள் தரவேண்டிய வரி பற்றிய விசாரணைக் குழுவை அமைக்க அவ்வாண்டு ஆகஸ்டு மாதம் இங்கிலாந்து அரசு முடிவெடுத்தது வல்லபாய் படேலின் வெற்றி என்று இந்தியப் பத்திரிகைகள் முழங்கின!

மார்ச்சு இறுதியில் திரும்பிப் போன



THE KINGDOM OF THE SKIES!
THE EXCITING WORLD OF PILOTS AND PLANES
MARCH '95 ISSUE!
GOKULAM
The monthly magazine for children
BUY YOUR CHILD A COPY TODAY!
96 pages for just Rs. 5!
Write to.
GOKULAM, 47 Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Madras - 600 097 for a subscription.

சைமன் கமிஷன் மறுபடியும் அதே ஆண்டின் அக்டோபர் மாதத்தில் திரும்பி வந்தது. கடையடைப்பு, வேலை நிறுத்தம், கறுப்புக் கொடிகாட்டல் ஆகியவை சென்ற தடவையை விடவும் இன்னும் மும்முரமாக நடந்தேறின! அக்டோபர் 30 ஆம் நாளில் லாகூரில் சைமன் எதிர்ப்பு ஊர்வலத்தை நடத்திச் சென்ற 'பஞ்சாப் சிங்கம்' லாலா லஜ்பத் ராய், ஸ்காட் எனும் வெள்ளை அதிகாரியின் ஆணையால் மிருகத்தனமான முறையில் அடித்து நொறுக்கப்பட்டதை அகில இந்தியாவும் கண்டித்தது. அடிவாங்கிய பின், 'என் மீது விழுந்த ஒவ்வோர் அடியும் பிரிட்டிஷ் ஆட்சியின் சவப்பெட்டி மீது அறையப்படும் ஒவ்வோர் ஆணியாகும்' என்றார் லாலா லஜ்பத்ராய்! அந்த ஊர்வலத்தில் மாவீரன் பகத் சிங்கும் அவன் தோழர்களும் இருந்தார்கள்.

படுகாயமுற்ற பஞ்சாப் சிங்கம், லாலா லஜ்பத் ராய், சில நாட்களில் உயிரிழக்க நேர்ந்தது. வடக்கே இயங்கிவந்த தீவிரவாதிகள் பஞ்சாப் சிங்கத்தின் மறைவால் கிளர்ந்து, கொதித்து எழுந்தனர்.


சரியாக ஒரு மாத கால இடைவெளியில் - அதாவது அடுத்த மாதம் பதினேழாம் தேதியன்று - பகத்சிங் தன் தோழர்களாகிய ராஜ்குரு, சந்திரசேகர ஆஸாத், ஜெய்கோபால் ஆகியோருடன் காவல் நிலையத்துக்கு அருகே இருந்த பள்ளி ஒன்றினுள் நுழைந்து காத்திருந்து, ஜெய்கோபால் அடையாளம் காட்டிய வெள்ளை அதிகாரியைச் சுட்டுவிட்டான். ஆனால் அந்த ஆள் ஸ்காட் இல்லை என்பதும், சாண்டர்ஸ் எனும் வேறோர் அதிகாரி என்பதும் பின்னர் தெரியவந்தது.

சுட்டபின் தப்பி ஓடிவிட்ட கும்பலுக்குப் பிரிட்டிஷ் அரசு வலைவிரித்துத் தேடியது.

மேலும் சில நாட்கள் கழித்து, ராமசாமியின் பள்ளியின் ஒரு வகுப்பறையில் வழக்கம் போல் காங்கிரஸ்காரர்கள் சிலரின் கூட்டம் நடைபெற்றது. ராஜாராமனின் மூலம் அறிமுகமான டி.டி. தியாகராஜ முதலியார், அப்துல் சலாம், ரங்கநாத சாஸ்திரி, மணவாளநாயுடு ஆகிய முக்கியமான உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

"பகத்சிங் மாதிரி ராஜதானிக்கு ராஜதானி பண்ணினா எல்லாம் சரியாயிடும்" என்றார் அப்துல் சலாம்.

"ஒரு கொலையைப் பண்ணிட்டு அப்புறம் ஒளிஞ்சுகன்னாய்யா திரிய வேண்டி இருக்கும்? கொலை பண்ணி எதையும் சாதிக்க முடியாதுய்யா. பலாத்காரம் தப்பான



"உங்களுக்குத்தான் ஹிந்தி தெரியாதே! பிறகு ஏன் ஒரு மணி நேரமா ஹிந்தி புரோகிராமை பார்த்துக்கிட்டிருக்கீங்க?"

"இது ஹிந்தி புரோகிராமா? அதான பார்த்தேன்! எங்கே தண்ணியடிச்சதும் தாய் பாஷை மறந்திருச்சோன்னு பயந்துட்டேன்!"

— அரிசி ஸ்ரீராம்

வழி. காந்தி வழி இப்பதானே சூடு பிடிக்க ஆரம்பிச்சிருக்கு? போகப் போகப் பாரும்."

"ஆமா? மோதிலால் நேரு என்ன புதுசா டொமினியன் ஸ்டேடஸ், டொமினியன் ஸ்டேடஸ்னு சொல்ல ஆரம்பிச்சிருக்காரு?"

"அப்படின்னா என்னங்கய்யா?"

"பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குள்ளேயே குடியேற்ற நாட்டு அந்தஸ்தோட இந்தியா இருக்கணும்கிறதா மோதிலால் நேரு ஒரு அறிக்கை தயாரிச்சிருக்காரு. அது சுபாஷ் சந்திர போஸ், ஜவாஹர்லால் நேரு மாதிரி காங்கிரஸ்ல இருக்குற இளவட்டங்களுக்குப் பிடிக்கல்லே. அவங்க பூர்ண சுயராஜ்யம் தவிர வேற எதுக்கும் ஒத்துக்கக் கூடாதுன்னாங்க."

"நியாயந்தானே?"

"அவன் சின்னதுகளுக்கே சம்மதிக்க மாட்டேங்கறான்..., அதனால அவனை விட்டுத்தான் பிடிக்கணும், கொஞ்சங் கொஞ்சமாத்தான் சலுகைகளைக் கேட்டு வாங்கணும், அப்படின்னு பெரியவங்க நினைக்கிறாப் போல."

"டொமினியன் ஸ்டேடஸ் பத்தின பேச்சு வார்த்தைக்காக ஏதோ வட்ட மேஜை மகாநாடு லண்டன்ல நடக்கப் போறதுன்னு பேசிக்கிறாங்களே? அப்படியா?"

"ஆமா. ஆனா காங்கிரஸ் கலந்துக்கப் போறதில்லைன்னு கேள்வி."

"டாக்டர் அம்பேத்கரைக் கலந்துக்கச் சொல்லி வெள்ளைக்காரன் ரொம்ப வற்புறுத்திட்டிருக்கானாமே?"

"அப்ப ஏதோ ப்ளான் பண்றான்னுதான் அர்த்தம்."

- இவ்வாறாகத் தலைக்குத் தலை கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள மட்டுமே பெரும்பாலும் கூடும் வழக்கமுள்ள அந்தச் சிறு கூட்டம் கொஞ்ச நேரத்தில் கலைந்தது....

(தொடரும்)



முன்னாள் கல்கி ஏஜென்ஸி ஆர்கனைசர் நெல்லை திரு எஸ். கோபாலகிருஷ்ணன் அவர்களின் புதல்வரும், கல்கி நிறுவன வெளியீடுகளின் தற்போதைய ஏஜெண்டுமான சிரஞ்சீவி ஜி. சுப்ரமணியனுக்கும், கூனியூர் ஸ்ரீ எஸ். கைலாசமய்யர் அவர்களின் புதல்வி சௌபாக்யவதி ராஜலக்ஷ்மிக்கும் சமீபத்தில் திருநெல்வேலியில் திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது. வாழ்க மணமக்கள்!

சூரிய மேளம் கொட்டும் வாலிப பாரதி!

"செவ்வந்தி பூவெடுத்தேன் - அதில் உன்முகம் பார்த்திருந்தேன்!"

பாடல் சூப்பர் ஹிட். "கோகுலம்" திரைப்படம் மூலம் பிரபலமாகி, "அட!" என்று சினிமா வட்டாரத்தை நிமிர்ந்து உட்காரச் செய்தார் பழனி பாரதி.

வேடிக்கை என்னவென்றால் வேறு பலரைப் போலவே பழனி பாரதியும் சினிமாவுக்கு பாட்டு எழுதுவதை நிறையக் கிண்டல் செய்தவர்தான்!

என்றாலும் சவாலை ஏற்றுக் கொண்டு, "பெரும்புள்ளி" படத்துக்கு பாட்டு எழுதத் தீர்மானித்தார். "முதல் பாட்டை எழுதுவது ரொம்ப சிரமமாய் இருந்தது; அப்புறம் நுணுக்கம் புரிஞ்சு போச்சு" என்கிறார்.

"விக்கிரமன் கொடுத்த ஒரு டியூனுக்கு எட்டு விதமான பல்லவிகளும் பன்னிரண்டு விதமான சரணங்களும் எழுதிக் காட்டினேன். அவருக்கு எல்லாமே பிடித்து விட்டன!"

இளமையின் விழிகளில்
வளர்பிறைக் கனவுகள்
பௌர்ணமி யாகிறது
மரங்களின் கிளைகளில்
குயில்களின் சுரங்களில்
சூரியன் மலர்கிறது....

என்ற வரிகளைத்தான் இறுதியில் தேர்வு செய்து ஒலிப்பதிவு செய்தாராம் விக்கிரமன்.

சினிமாச்ரமத்துக்கு முந்தைய பூர்வாசிரமத்தில் இவர் பெயர் பி. பாரதி. 'தாய்' இதழில் வலம்புரி ஜானிடம் ஐந்து வருடங்களுக்கு மேல் பணியாற்றியவர். 'நெருப்புப் பார்வைகள்', 'வெளிநடப்பு' என்று இவரது இரண்டு கவிதைத் தொகுப்புகள் வெளியாகியுள்ளன.

பழனிபாரதியை மேலும் பேசப்படும் பாரதியாக்கியவர் ஏ.ஆர். ரஹ்மான் - 'புதிய மன்னர்கள்' படத்தில் இருவரும் இணைந்தனர்.

"ரஹ்மான் நல்ல ரசனையுள்ள இளைஞர். புதுப் புது வார்த்தைகள் வேண்டும் என்பதில் குறியாக இருப்பார். சில சமயம் டியூனுக்குப் பொருந்தாத அழகான வார்த்தை வந்து விழுந்து விட்டால் டியூனைக் கூட மாற்றிக் கொள்வார்" என்கிறார் பழனி பாரதி.

ஒரு சினிமா பாடலாசிரியர் ஒரு சிறந்த கவிஞராகவும் இருக்க முடியுமா?... என்ற குழப்பங்களெல்லாம் இப்போது பழனிபாரதிக்குக் கிடையாது.

"கவிதை வேறு, இசைப் பாடல் வேறு...." என்று தமது தெளிவை வெளிப்படுத்துகிறார்.

படிப்படியாக சினிமா உலகுடன் முழுதுமாகக் கலந்து இந்தக் கவிஞர் கரைந்து போய் விடாமல் தனித்துவத்துடன் நிமிர்ந்து நிலைப்பாரா?

"எடுடா அந்த சூரிய மேளம்
அடிடா நல்ல வாலிபத் தாளம்"

போன்ற பாடல் வரிகள் நம்பிக்கை அளிக்கவே செய்கின்றன.

— துளசி



• பழனி பாரதி (படம் : காமிரா திருஞானம்)

அணுகவும்
தொலைபேசி:
8250173, 4347437.

பணம்

இருக்க வேண்டிய இடத்தில் இருக்கவேண்டும் வளர வேண்டிய இடத்தில் வளர வேண்டும் !

பெட்டர் கெயின்ஸ் ஃபைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்.

அளிக்கிறது

விசேஷ விழாக்கால வாய்ப்பு

30% வட்டி + 6% ஊக்கத் தொகை

பின் தேதியிட்ட காசோலைகளாக மாதாந்திர வட்டி

முந்துங்கள்:

இந்த வாய்ப்பு 1995 பிப்ரவரி 28-ஆம் தேதி வரை மட்டுமே!

ஏற்றுமதி, ரிசார்ட்டுகள், மலைத் தோட்டப் பயிர்கள் முதலிய பல்வேறு லாபகரமான தொழில்களில் வெற்றிகரமாகச் செயல்பட்டு வரும் குறிஞ்சிப்பாளை குரூப்பின் ஓர் அங்கம்தான் - பெட்டர் கெயின்ஸ் ஃபைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ். எனவே உங்கள் முதலீடு சிறந்த முறையில் பெருகி வளரச் சிறப்பான, மிகமிகப் பாதுகாப்பான இடம் - பெட்டர் கெயின்ஸ் ஃபைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்.

பிக்சட் டெபாசிட் திட்டம் :

குறைந்த பட்ச முதலீடு	: ரூ.10,000
வட்டி விகிதம்	: 24%
காலம்	: 1 வருடம்
ஊக்கத்தொகை	: 4%

பெட்டர் கெயின்ஸ் ஸ்பெஷல் திட்டம் :

குறைந்த பட்ச முதலீடு	: ரூ.10,000
காலம்	: 5 வருடங்கள்
முதிர்வுத் தொகை	: ரூ.30,000
ஊக்கத் தொகை	: இரண்டு தங்க காசுகள் (தலா 1 கிராம்)

பெட்டர் கெயின்ஸ் மினி திட்டம்:

குறைந்த பட்ச முதலீடு	: ரூ.10,000
காலம்	: 3 வருடங்கள்
வட்டி விகிதம்	: 24% (முதல் வருடம்) 24% (2வது வருடம்) 24% + 18% (3வது வருடம்)
ஊக்கத் தொகை	: 6%

பெட்டர் கெயின்ஸ் சூப்பர் திட்டம்:

குறைந்த பட்ச முதலீடு	: ரூ.40,000
காலம்	: 3 வருடங்கள்
வட்டி விகிதம்	: 30%
ஊக்கத்தொகை	: 6%

மேலும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்:

பெட்டர் கெயின்ஸ் ஃபைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

தலைமை அலுவலகம்:
37, சிவாலயா காம்ப்ளெக்ஸ், A பிளாக், 3-வது மாடி, எத்திராஜ் சாலை, (கமாண்டர்-இன்-சீஃப் ரோடு), எழும்பூர், சென்னை 600 105 தொலைபேசி : 8250173.

கிளை அலுவலகம்:
R K P கார்ப்பரேட் ஹவுஸ், 19, சரவணன் தெரு, தெற்கு போக் ரோடு பிரிவு, தி. நகர், சென்னை 600 017. தொலைபேசி : 434 7437.

ராஜகுமாரியை மீட்பானா அராபிய வீரன்?

'ஓடி விளையாடு பாப்பா' காலம் மலை ஏறி விடும் போலிருக்கிறது. 'தேடி விளையாடு தோழா' என்று விதம் விதமான கம்ப்யூட்டர் விளையாட்டுக்கள் அழைப்பு விடுக்கின்றன.

● எத்தனை எத்தனை கம்ப்யூட்டர் விளையாட்டுக்கள்... சீட்டுப் பிரியரா நீங்கள்? சாலிட்டர் இருக்கவே இருக்கிறது. கல்யாணச் சத்திரத்தில் பந்திக்கு முந்த மனசு வராமல் வெறித்தனமாக ஆடுகிறவர்கள் கூட துண்டை இடுப்பில் கட்டி எழுந்து நின்று சேவிக்கும் படியாக கம்ப்யூட்டர் உங்களோடு அபாரமாக ஆடும். "மூஜேவி... ஆழ்ழின் மூணியை எழக்கேண்டா" என்று கும்மோணம் வெற்றிலையும் பன்னீர்ப் புகையிலையும் குதப்பியபடிக்குச் சொல்வதைக் கம்ப்யூட்டர் புரிந்து கொண்டு, "பிரம்ம ஹத்தி... சீட்டப் பாத்துப் பேசு" என்று பதில் சொல்ல சாப்ட்வேர் எழுதிக் கொண்டு இருக்கிறார்கள்.



● கம்ப்யூட்டரோடு செஸ் விளையாடலாம். நீங்கள் விஸ்வனாதன் ஆனந்தாகவோ, கடாகாம்ஸ்கியாகவோ இருக்கும் பட்சத்தில் கூட நிச்சயமாகக் கெலிப்பீர்கள் என்று திருவாலங்காட்டு செப்பேட்டைத் திருப்பி பட்டயம் எழுதித் தர முடியாது. செஸ் விளையாட்டு சாப்ட்வேர் எழுதிய மகானுபாவர்கள் லேசுப்பட்டவர்கள் இல்லை.

● கம்ப்யூட்டரில் 'பிரின்ஸ்' விளையாடி இருக்கிறீர்களா? கருங்கல் சிறையில் அடைத்த ராஜகுமாரியை மீட்க பைஜாமா அணிந்து ஓடும் அராபிய வீரனைக் கொண்டு செலுத்த வேண்டும். எரிந்து கொண்டிருக்கும் தீப்பந்தம்... பாலம்... கிடுகிடு பாதாளம்.. கத்தியோடு பாய்ந்து வரும் காவல்காரர்கள்.. சாண் ஏறினால் முழம் சறுக்கும் சுவர்கள்.. இந்த விளையாட்டு ஆணைத் தொடர் அமைத்தவர்களுக்கு ராஜகுமாரியாகப் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்கலாம். குறைந்தபட்சம், கோடு போட்ட நாலு பைஜாமா வாங்கி அன்பளிப்பாகத் தரலாம்.

● 'ஆடு மேய்ச்ச மாதிரியும் இருக்கணும்... அண்ணனுக்குப் பொண்ணு பாத்த மாதிரியும் இருக்கணும்' என்ற ரீதியில், விளையாடுகிறபோதே அறிவை வளர்க்கிற கம்ப்யூட்டர்


> “
> குழந்தை மனம் கொண்ட பெரியவர்கள் விளையாட உட்கார்ந்தால், எழுந்ததும் பிஸ்கோத்து கேட்டால் ஆச்சரியமில்லை.
> ”

விளையாட்டுக்கள் பிரபலமாகி வருகின்றன. படிக்கிற முயல் (Reading Rabbit) என்று ஒன்று. பத்து வருஷம் முன்னால் குழந்தைகளுக்கு எழுத்துப் பயிற்சியும், வார்த்தை, வாக்கியப் பயிற்சியும் சொல்லிக் கொடுக்க வந்த அந்த முயல், சமீபத்தில் போட்ட குட்டி (Reading Rabbit 3) படுசுட்டி. அனிமேஷன் என்ற மந்திரக்கோலை உபயோகித்து இருக்கிறார்கள். சினிமா போல ஓடுகிற சுவாரசியமான ஆட்டம். குழந்தை மனம் கொண்ட பெரியவர்கள் விளையாட உட்கார்ந்தால், எழுந்ததும் பிஸ்கோத்து கேட்டால் ஆச்சரியமில்லை.

● சுற்றுச் சூழல் பிரக்ஞையை வளர்க்க விளையாடிப் பாருங்கள் 'ஈகோ சாரஸ்'. சூழல் தீவில் ஏகமாகக் குப்பைக்கூளம். குடித்துப் போட்ட சோடா பாட்டில்களையும் காபி நிறைத்துத் தந்த காகிதக் கோப்பைகளையும் பழைய பத்திரிகைகளையும் இன்னும் எதைஎதையோ எல்லாமோ அகற்றி, சூழலைச் சுத்தப்படுத்தி, குப்பையை ரீசைக்கிள் செய்து உருப்படியான விஷயங்களாக்க வேண்டும். எப்படிச் செய்வது என்று கண்டுபிடிப்பதில்தான் உங்கள் சாமர்த்தியம். விளையாட்டு கைவந்தால், புத்திசாலித்தனம் கூடுமோ என்னமோ, குப்பை போட மாட்டீர்கள்.

● மல்ட்டி மீடியா வந்த பிறகு கம்ப்யூட்டர் விளையாட்டுக்கள் கூடுதல் போஷாக்கு... கூடுதல் உற்சாகமாகி வருகின்றன. 'ஆப்பரேஷன் நெப்ட்யூன்' என்று நீர்மூழ்கிக் கப்பலில் போய்க் கடலின் ஆழத்தில் விழுந்து கிடக்கிற விண்வெளிக் கப்பலின் ரகசியங்களைத் துண்டு துணுக்காகத் தேடிப் பிடிக்கிற விளையாட்டை போன வாரம் விளையாடக் கிடைத்தது. கடல் சத்தமும் நீர் மூழ்கிக் கப்பலின் சத்தமும் காதில் இன்னும் குடைந்து கொண்டே இருக்கிறது. சவுண்ட் பிளாஸ்டர் கார்ட் செருகிய, விண்டோஸ் கொண்ட அந்த மாதிரிக் கம்ப்யூட்டர் வாய்க்கப் பெற்றவர்கள், 'எல்லா நலமும் பெற்று இனிதே வாழ்க' என்று சான்றோர்களால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

● 'பெர்சனல் கம்ப்யூட்டரும் வைரஸும் போல' என்று எந்த தேவதை சபித்து விட்டுப் போனதோ... கம்ப்யூட்டர் விளையாட்டு ஆர்வம்



முற்றி, சகலரிடமிருந்தும் இரவல் வாங்கிய பிளாப்பியை (அதில் ஏதோ புது விளையாட்டு இருப்பதாகக் கேள்விப்பட்டு) உபயோகித்து, உங்கள் கம்ப்யூட்டர் 'கிருமி கண்ட சோழன்' ஆகக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம். அந்தக் கிருமியை அகற்றுவது இன்னொரு சுவாரசியமான விளையாட்டு. அகற்றி விட்டுப் பார்த்தபோது, நீங்கள் அரும்பாடுபட்டு சேமித்து வைத்த தகவலோ, ஆணைத்தொடரோ அழிந்து போயிருந்தால், உங்கள் முகம் போகிற போக்கைப் பார்ப்பது மற்றவர்களுக்கு விளையாட்டு.

— இரா.முருகன்

நீங்கள் கேட்டவை



• ஒரு வாரக் கொண்டாட்டம்!



• வாலாடிய கதை!

'ஜெ' பிறந்தநாளை ஒரு வாரம் கொண்டாடி என்ன சாதிக்கப் போகிறார்கள்?

● புளியரை கணேசன்,
சென்னை - 30.

? "அ.தி.மு.க.வுடன் கூட்டு இல்லை என்றால் ஒரு லோக் சபை தொகுதியைக் கூட காங்கிரஸ் பிடிக்க முடியாது" என்று மணி சங்கர அய்யர் கூறியிருக்கிறாரே?

! "மாயூரத்தை துபாயாக மாற்றிக் காட்டுகிறேன்" என்று களத்தில் இறங்கியவருக்கே நம்பிக்கை இல்லை என்றால் காங்கிரஸிடம் மக்களுக்கு எப்படி நம்பிக்கை உருவாகும்?

● இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

? தலையிருக்க வாலாடிய கதைக்கு ஓர் உதாரணம்?

! அமைச்சர் சின்னசாமி ஏற்கெனவே ரொம்ப நொந்து போயிருக்கிறார். அவரை மேலும் நோகடிப்பானேன்!

● ஏ. கருமார், காட்டுக்காஹுர்.

? 'ஜெ' பிறந்த நாளுக்கு கோ-ஆப்டெக்ஸ் தள்ளுபடி விற்பனை அறிவித்திருக்கிறதே?

! ஏதோ ஒன்றைச் சாக்கிட்டு வியாபாரம் பெருகி, ஏழைக் கைத்தறியாளர் சற்றேனும் அனுகூலம் பெற்றால் சரி.

● ச. ஜான் ரவி, கோவில்பட்டி.

? அர்ஜுன்சிங்கைத் தொடர்ந்து ஜாபர் ஷெரீஃபும் நீக்கப்படுவாரா?

! ஏன்? எதற்காக? அவரென்ன தலைமையைப் பகைத்துக் கொண்டாரா? பிரதமர் பதவிக்கு ஆசைப்பட்டாரா? அல்லது ஆட்சி மீது குற்றச்சாட்டுக்களை அடுக்கினாரா? ஏதோ தமது பண்ணைக்குத் தாம் போய் வர வசதியாக ரயில்வே கிராஸிங்கில் மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு சுரங்கப் பாதை அமைத்துக் கொண்டார், அவ்வளவுதானே!

● ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை.

? "பதவியின் மூலம் சாதிக்க முடியாததை எழுத்தின் மூலம் சாதிக்கலாம்" என்று வீரப்ப மொய்லி கூறியுள்ளாரே?

! அப்படியானால் அவர் பதவிக்கு வந்திருக்க வேண்டிய அவசியமேயில்லையே!

● ச. ஆ. கேசவன், கோவில்பட்டி.

? அர்ஜுன்சிங் ஆறாண்டுகளுக்குக் காங்கிரஸ் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதன் எதிரொலி எப்படி இருக்கும்?

! கட்சியிலிருந்து நீக்க அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு அவர் அளித்துள்ள பதில்தான் எதிரொலி எனில் அதில் சத்தமும் இல்லை, சாரமும் இல்லை. குறிப்பாக, பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கு அன்றைய கல்யாண்சிங் அரசின் நம்பிக்கைத் துரோகம்தான் காரணம் என்பதை அவருடைய பதிலே அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. அவ்வாறிருக்க மத்திய அரசும் காங்கிரஸும் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற அவரது கோரிக்கை முதல் தர அபத்தம்.

● ஜி. எம். பாலகுரு, திருமருகல். ❑

? ஊழல் மேல் மட்டத்தில் ஒழிக்கப்பட வேண்டியதா? அல்லது கீழ் மட்டத்திலா?

! மேல் மட்டத்தில் ஒழிந்தால் தட்டிக் கேட்கும் திராணி அவர்களுக்கு உண்டாக, கீழ்மட்டத்திலும் ஒழியும். கீழ்மட்டத்தில் மட்டும் ஒழிக்க முயன்றால் நடக்காது. அரசன் எவ்வழி, அவ்வழி மக்கள்.

● எஸ். நாரம்புநாதன், காஞ்சிபுரம்.

? கலைஞர் என்ன செய்து கொண்டிருக்கிறார்?

! 'இடைத்தேர்தல் கிடையாது' என்று பிரதமர் சொல்வதை நம்பாமல் தேர்தல் நிதி திரட்டிக் கொண்டிருக்கிறார்.

● கே. சஞ்சீவிபாரதி, அவ்வையார்பாளையம்.



• நம்பிக்கை இல்லை!



நீக்கப்படுவாரா?



• பதவி எதற்கு?



• எதிரொலி எப்படி?



• மீண்டும் மந்திரி!



• நிதி திரட்டல்



• மந்திரி பதவி

? மீண்டும் மந்திரியாகியிருக்கும் ப. சிதம்பரம் பற்றி...?

! மீண்டும் "Export or perish" என்பது போன்ற sloganகள் ஒலிக்கும். மீண்டும் நளினி சிதம்பரத்தின் பணம் ஷேர்மார்க்கெட்டில் முதலீடாகாது! ஒரு போரின் போது முப்படைத் தளபதிகள் இணைந்து செயல்படுவது போல, மன்மோகன்சிங், பிரணாப் முகர்ஜி, ப. சிதம்பரம் ஆகிய மூவரும் செயல்பட்டால் இன்றையப் பொருளாதார உலக யுத்தத்தில் இந்தியா நிச்சயம் வெற்றி பெறும்.

● இரா. ரெங்கசாமி, வடுகப்பட்டி.

? ஸ்விஸ் நாட்டு வங்கியில் பலரும் பணம் போடுவதின் மர்மம் என்ன?

! பணம் எங்கேயிருந்து வந்தது என்ற மர்மம் அம்பலமாகாது என்ற காரணத்துக்காகத்தான்!

● ஏ. செந்தில்குமார், சூலூர்.

? ஜெயலலிதாவின் பிறந்த நாளை ஒரு வாரம் கொண்டாடி என்ன சாதித்து விடப் போகிறார்கள்?

! தேசிய பொருளாதார ஆய்வுக் குழுவின் தலைவர் எஸ். எல். ராவ், "தொழிலதிபர்களை ஈர்க்கும் சக்தி தமிழக ஆட்சித் தலைவர்களுக்கு இல்லை" என்று தொடங்கி, பல்வேறு குறைகளைப் பட்டியலிட்டிருக்கிறார். இரு தினங்கள் சென்று, தொழில் - வர்த்தகச் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் டாக்டர் பாலசுப்பிரமணியம் வெளியிட்டுள்ள ஓர் ஆய்வு அறிக்கை, "தொழில்கள் தொடங்க தமிழகத்தில் பல்வேறு முட்டுக் கட்டைகள்" என்று ஆரம்பித்து மேலும் ஒரு பாட்டம் புலம்பியிருக்கிறது. இதையெல்லாம் மூடி மறைத்து இங்கே பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடுவதாக ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்க ஒரு வாரப் பிறந்த நாள் கொண்டாட்டம் உதவுமே, அது போதாதா?

● சேகர், திருத்தங்கல்.

? தற்போது தராசுவைக் கவர்ந்த அரசியல்வாதி யார்?

! "திவாரியைத் "தேசத் துரோகி" என்று வர்ணித்த முலாயம்சிங் யாதவ், இந்த மன்றத்தை மட்டுமின்றி, இந்த நாட்டையும் அதன் மக்களையும் ஏன் அரசியல் சாசனத்தையும் கூட அவமதித்துள்ளார்" என்று துணிந்து கண்டித்துள்ள உ.பி. மாநில மேலவைத் தலைவர் நித்யானந்த் சுவாமி. இவரைப் போல் இன்னும் சில முதுகெலும்புடன் கூடிய நேர்மையாளர்கள் சட்டமன்றத் தலைவர்களாக இருந்தால் அரசியல் அசிங்கப்பட்டுப் போகாது.

● எச். மோகன், மன்னார்குடி.

? முந்நாள் அமைச்சர்கள் ம.தி.மு.க.வில் இணைந்தது?

! எதிர்ப்பு சிதறிப் போகாமல் ஆளும் கட்சிக்கு எதிராக ஒருமுகப்படுவது நல்லது என்ற கருத்தில் நான் வரவேற்றாலும், சேடப்பட்டியார் அப்படி எண்ணப் போகிறதில்லையே என்பதுதான் கவலை!

● எம். ஆர். பாபு, காரைக்குடி.

? மத்திய மந்திரி சபை விஸ்தரிக்கப்பட்டது பற்றி...?

! எல்லாம் சரிதான். கட்சி மாறி வந்த அஜீத்சிங்குக்கு மந்திரி பதவி கொடுத்த கையோடு "ஊழலை ஒழிக்கப் போகிறேன்" என்று பிரதமர் முரசு கொட்டுவதுதான் இடிக்கிறது!

தராசு

□ ரூ 25 பரிசு பெறுபவர் :
ஜி. எம். பாலகுரு,
4.3. தத்தபட்டார் தோப்பு, போலகம்,
திருமருகல்.

நினைவலைகள் 30

கே. பாலசந்தர்

EVERY MAN SHOULD BE A CENSOR OF HIS OWN CONSCIENCE.

- LORD SPELLMAN -

புன்னகை மன்னன்!

கமலஹாசனை வைத்துப் படமெடுத்து நான்கு ஆண்டுகள் ஆன பிறகு மீண்டும் கமல் நடிக்க, ஒரு படத்தை எடுக்க வேண்டும் என்று நான் விரும்பினேன்.

அரசியல் சூழ்நிலைகளை வைத்துப் படமெடுத்த எனக்கு ஒரு மாறுதல் தேவைப்பட்டது. ஒரு காதல் கதையை எடுத்துப் பார்த்தாலென்ன என்று தோன்றிற்று. ஆனால் இது முழுக்க முழுக்க வித்தியாசமாக இருக்க வேண்டும் என்று மட்டும் தீர்மானித்துக் கொண்டேன்.

'மரோ சரித்ரா'வின் முடிவிலிருந்து ஆரம்பித்து இன்னொரு காதல் கதையைச் சொன்னால் எப்படியிருக்குமென்று சிந்தித்துப் பார்த்தேன்.

இதைப் பற்றி கமலிடம் casual ஆகப் பேசிக் கொண்டிருந்தபோது எங்கோ, எப்பொழுதோ அவர் கேள்விப்பட்ட ஒரு உண்மைச் சம்பவத்தை என்னிடம் கூறினார். காதலர்கள் தற்கொலை செய்து கொள்வதாக முடிவெடுத்து, இருவருமே உயிரை மாய்த்துக் கொள்ள விஷம் குடித்த பிறகு, அந்தப் பெண் மட்டும் இறந்து போகிறாள். அவன் பிழைத்துக் கொள்கிறான். இந்த உண்மைச் சம்பவம் என்னை வெகுவாகக் கவர்ந்தது. 'கவர்ந்தது' என்பது சரியில்லை! பாதித்தது!

இந்தச் சம்பவத்தின் அடிப்படையில் தான் 'புன்னகை மன்னன்' படத்தின் ஆரம்பமும் புனையப்பட்டது.

படத்தின் ஆரம்பமே ஒரு climax காட்சிக்கு வேண்டிய விறுவிறுப்புடனும் அதிர்ச்சியுடனும் அமைந்தது. மயிர்க்கூச்செறியும் இந்த ஆரம்பக் காட்சி பார்த்தவர்களை உலுக்கியது. ஆரம்பத்திலும் இறுதியிலுமாக இரண்டு உச்சக்கட்டக் காட்சிகள் ஒரே படத்தில் அமைக்கப்பட்டதை பலர் பாராட்டி எழுதியிருந்தார்கள்.

Irwin Allen என்பவர் ஒருமுறை சொன்னார் : Show the earthquake at the beginning and build up the film to a more powerful climax. இதைத்தான் நான் கையாண்டிருந்தேன்.

இதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. 'மரோ சரித்ரா'வில் காதலர்கள் மலையிலிருந்து கீழே குதித்துத் தற்கொலை செய்து கொள்ளும் அந்த முடிவு, காதலில் தோல்வி கண்ட உண்மைக் காதலர்களுக்கு ஒரு inspiration ஆக அமைந்து விடக் கூடாது என்றும் விரும்பினேன். Love tragedy என்பது இலக்கியத்திற்கு இலக்கணமாகலாம்; ஆனால் நடைமுறைக்கு ஒத்து வராது என்றும், அப்படிப்பட்ட ஒரு முடிவு, முட்டாள்தனமானது என்று எடுத்துக்காட்டவும் வலியுறுத்தவும் இந்த ஆரம்பக் காட்சி எனக்குப் பயன்பட்டது.

தோல்வியுறும் காதலுக்கு தற்கொலை தான் முடிவு என்பதை நான் நிச்சயமாக ஒப்புக் கொள்ள மாட்டேன். 'மரோ சரித்ரா'வின் இந்தி வடிவம் 'ஏக் தூஜே கே லியே' வெளிவந்ததும், படத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது போலவே ஒரு புனிதமான காதல் ஜோடி நிஜமாகவே தற்கொலை செய்து கொண்டதாக வடநாட்டுப் பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்தது. "Dramas in life take place without rehearsals".

இந்தச் செய்தி என்னை மிகவும் வருத்தமடையச் செய்தது. ஒரு பரிகாரம் தேட வேண்டுமென்று நான் நினைத்தேன்.

'Every man should be a censor of his own conscience' என்று Lord Spellman சொன்னார்.

அதன் விளைவுதான் புன்னகை மன்னனின் ஆரம்பக் காட்சி.

பொதுவாகவே காதலர்களுக்கு பெற்றோர்கள் வில்லனாக இருப்பார்கள்; அல்லது . இன்னொரு ஆண் வில்லனாக இருப்பான். ஆனால் இந்தப் படத்தில் காதலர்கள் இரு நாடுகளைச் சேர்ந்தவர்கள்; அதுவே அவர்களது காதலுக்குத் தடையாக இருக்கிறது. கதாநாயகனை தமிழ்ப் பையனாகவும், கதாநாயகியை சிங்களத்துப் பெண்ணாகவும் படைத்தேன்.

எனது திரைப்படங்களில் கதாபாத்திரங்களுடன் 'location'ஐயும் சம்பந்தப்படுத்தி திரைக்கதை அமைப்பதே வழக்கம். 'மரோ

சரித்ரா'வில் எப்படி கடல் ஒரு முக்கியமான கதாபாத்திரமாக சம்பந்தப்படுத்தப்பட்டதோ, அதே போல் இந்தக் கதையில் ஒரு பெரிய நீர்வீழ்ச்சியைப் பயன்படுத்த எண்ணினேன்.

திரைக்கதை அமைத்த பிறகு locationக் காகப் பல நாட்கள் அலைந்து தேடினேன். ஏற்கெனவே திரைப்படங்களில் உபயோகப் படுத்தப்பட்ட எந்த locationஐயும் நான் பயன் படுத்த விரும்பவில்லை. ஒரு மாறுபட்ட locationஐத் தமிழ்நாடு முழுவதும் தேடினேன்.

அந்த நேரத்தில்தான் எனது நடன இயக்குநர் ரகுராம், கேரளாவில் சாளக்குடி என்ற ஊருக்கருகில் உள்ள ஒரு நீர்வீழ்ச்சியைப் பற்றி என்னிடம் குறிப்பிட்டார். பெரும் நம்பிக்கை வைக்காமல் அந்த இடத்தைப் பார்க்கப் போனேன். நேராகப் பார்த்த பிறகு அந்த இடம் என்னுள் பெரிய உற்சாகத்தையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தியது.

இந்த அற்புதமான locationல் தடுக்கி விழுந்த' பிறகு அந்த இடத்தையே முழுமையாகப் பயன்படுத்திக் கொள்கிற மாதிரி திரைக்கதையை மாற்றியமைத்தேன்.



• புன்னகை மன்னன் : நிஜ கலைஞன்

கமல், ரேவதி இருவருடைய 'கால்ஷீட்'டுக்களையும் ஜூலை மாதத்தில் வாங்கியிருந்தேன். அந்த மாதத்தில் இந்தப் பகுதியில் 24 மணி நேரமும் தொடர்ந்து மழை பெய்யும் சீசன். இருந்தாலும் வேறு வழியில்லாமல் அங்கே படப்பிடிப்பை அந்தத் தேதிகளிலேயே நடத்த வேண்டிய கட்டாயம்.

துணிந்து செயல்பட்டேன். சாளக்குடியில் camp. அங்கிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில்தான் இந்த இடம். சாளக்குடியில் போய் இறங்கிய அன்றிலிருந்து மழை. மழையென்றால் அடை மழை.

தினம் காலையில் ஆறு மணிக்குப் புறப்பட்டுச் சென்று நீர்வீழ்ச்சி இருக்கும் இடத்திற்கு ஏழு மணியளவில் போய் இறங்கி விடுவோம்.

அங்கே படப்பிடிப்பு நடத்திய 27 நாட்களில் 25 நாட்கள் தினம் அடை மழை. கேமராவுக்கு வாய் இருந்திருந்தால் நாங்கள் பட்ட சிரமங்களை அதுவும் சொல்லும். காரணம் - எங்களுடன் நனைந்து கொண்டேதான் கேமராவும் படமெடுத்தது.

யூனிட்டில் இருந்த 70 பேருக்கும் நாங்களே மழைக் கோட்டு, தொப்பி, குடை இவைகளை வாங்கிக் கொடுத்தோம். நாங்கள் கொண்டு போயிருந்த ராட்சஸ விளக்குகளுக்கும் தனித்தனியாகக் குடை. எப்படியாவது அந்த லொகேஷனில் படப்பிடிப்பு நடத்தியே தீருவது என்று யூனிட்டில் உள்ள அத்தனை பேரும் தீர்மானமாகக் கஷ்டப்படத் தயாரானார்கள். மூன்று மணி நேரம் அடை மழை பெய்து சிறிது நேரம் மழை நின்று போயிருக்கிற அந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொள்வோம். படபடவென்று சில 'ஷாட்'டுகளை எடுத்து முடிப்போம்.

மழை அவ்வப்பொழுது பெய்து, அதனால் நீர்வீழ்ச்சியில் தண்ணீர் அதிகரித்து, கண்கொள்ளாக் காட்சியாக அது அமைந்தது எங்களுக்கும் புதுத் தெம்பையும் உத்வேகத்தையும் கொடுத்துக் கொண்டிருந்தது. நாங்கள் எடுத்த அபூர்வமான 'ஷாட்'டுகளின் தனித்தன்மையில் நாங்கள் spotல்பட்ட சிரமங்களும் தொல்லைகளும் மறந்து போயின.

இந்த 'location' பின்னால் பல தமிழ்த் திரைப்படங்களில் உபயோகப்படுத்தப்பட்டது. பின்னர் அது மிகப் பெரிய tourist spot ஆகவும் ஆயிற்று. கேரளத்துக்காரர்கள் மத்தியில் கூட அந்த நீர்வீழ்ச்சி 'புன்னகை மன்னன்' நீர்வீழ்ச்சி என்று பிரபலமாகியது.

இந்தப் படத்தைத் தொடங்கியதிலிருந்து தொடர்ந்து இடைஞ்சல்கள்...

'மாமாவுக்குக் குடும்மா' பாடலைப் படமாக்க முற்பட்ட பொழுது சாப்ளின் செல்லப்பா 'சர்'ரென்று மேலே போவதைப் போன்று ஒரு ஷாட் எடுக்கலாம் என்று கமல் கூற, அந்த ஷாட்டை எப்படி எடுப்பது என்று விவாதித்தோம். கமலின் உடம்பு முழுவதும் துணியாலான tape சுற்றி, அந்த டேப்புடன் இரும்புக் கம்பியை இணைத்து, அந்தக் கம்பியை கட்டடத்தின் மொட்டை மாடியி

விருந்து ஒரு pulley வழியாக ஐந்நூறு பேர் சேர்ந்து மேலே இழுப்பது என்று முடிவானது. 'ஷாட்' ஆரம்பிப்பதற்கு முன் எனக்கென்னமோ சற்றுப் பயமாக இருந்தது. இதைப் போன்ற சர்க்கஸ் வேலைகளிலெல்லாம் எனக்கு எப்பொழுதும் நம்பிக்கையில்லை.

"We will drop the idea" என்று கமலிடம் எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். கமல் தைரியம் சொன்னார்.

'ஷாட்' செட்டப் செய்தோம்.

கமலின் உடம்பு முழுவதும் கம்பியின் காயம் படாமல் 'டேப்' சுற்றப்பட்டு அந்த டேப்புடன் இரும்புக் கம்பி இணைக்கப்பட்டது. உடம்பிலே சுற்றப்பட்டிருக்கும் tape, கம்பி இவை தெரியாத அளவுக்கு மறைத்து கமல் ஒரு கோட் அணிந்து கொண்டார்.

பாடலின் பின்னணி இசை வரும் போது ஒரு இடத்தில் கமல் டான்ஸ் ஆடியபடியே 'சர்'ரென்று மேலே ஆகாயத்தை நோக்கிப் போக வேண்டும்.

ஆகாயத்தை நோக்கிப் போகும் கமலை, கேமரா follow பண்ண வேண்டும்.

'ஒரு ஒத்திகை பார்க்கலாம்' என்று நான் சொன்னேன்... கட்டடத்தின் மொட்டை மாடியில் தயாராக கம்பியைப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள் உஷார்படுத்தப்பட்டார்கள்... ஒத்திகைக்கு முன்னால் pulley வழியாகக் கம்பியை ஒருமுறை இழுத்துப் பார்த்துக் கொள்கிறோம் என்று அவர்கள் சொன்னார்கள்.

கம்பியை மேலே இழுத்தார்கள்.... கமல் அறுபது அடி உயரத்திற்கு மேலே சென்றார். space walk பண்ணுகிற மாதிரி கமல் காற்றிலே கையையும் காலையும் அசைத்துக் கொண்டிருக்க....

அடுத்த விநாடி...

இப்பொழுது நினைத்துப் பார்த்தாலும் நெஞ்சம் பதைபதைக்கிறது...

இரும்புக் கம்பி இடையிலே அறுந்து போக... 'சதக்' என்கிற சப்தத்துடன் கமல் தரையில் அறுபது அடி உயரத்திலிருந்து தரையில் தலைகுப்புற விழுந்தார்!

அவர் தரையில் விழுந்த போது ஏற்பட்ட அந்தச் சப்தம் இருக்கிறதே...

பத்து தேங்காய்களுடன் இருக்கும் ஒரு தென்னங்குலையை தென்னை மரத்தின் உச்சியிலிருந்து வெட்டி விட்டு அந்தத் தென்னங்குலை தரையில் விழும் போது ஏற்படுகின்ற அந்த சத்தம் போல்!

'அய்யோ! கமல் என்கிற அற்புதக் கலைஞனைக் கொன்று விட்டேன்' என்று மனத்துக்குள் நான் கதறினேன்! தலையில் தலையில் அடித்துக் கொண்டேன்.

"இந்த விஷப் பரீட்சையெல்லாம் வேண்டாம் என்று சொன்னேனே..." என்று கத்தினேன்.

கமலைத் தூக்க எல்லோரும் ஓடினார்கள்.

கமல் சொன்ன முதல் வார்த்தை :

"டைரக்டர் ஸாரை முதல்லே ஜாகைக்கு அனுப்புங்கள்; அவர் ஒரு Heart Patient. எனக்கொன்றுமில்லை."

அறுபது அடி உயரத்திலிருந்து இப்படி விழுந்தவர் வேறு யாராக இருந்திருந்தாலும் அவர் சூரைத் தேங்காயாக உடைபட்டிருப்பார்; அன்று கமலுக்கு புனர்ஜென்மம்தான்.

தரையிலே land ஆகும் போது தனது முழு பளுவையும், கால்களிலும் கைகளிலும் மட்டுமே தாங்கிக் கொண்டு தரையிலே விழுந்த அந்த லாகவம், அந்த knackதான் அவருடைய உயிரை அன்று காப்பாற்றியிருக்கிறது.

ஆனால் கால் பாதத்தில் மட்டும் fracture ஏற்பட்டது.

அடுத்த மூன்று மாதங்கள் கமலினால் எந்தப் படப்பிடிப்பிலும் கலந்து கொள்ள முடியவில்லை.

இந்த விபத்து நடந்த அன்று மாலை கமலைச் சென்று பார்த்தேன். நான் அவரை விசாரிப்பதற்கு முன்பு அவர் என்னைப் பற்றி விசாரித்தார், "உங்களுக்கு ஒன்றுமில்லையே" என்று!

"அந்த நேரத்தில் கேமரா மட்டும் ஓடியிருந்தால் எத்தனை அற்புதமான, கிடைப்பதற்கரிய ஒரு ஷாட் கிடைத்திருக்கும்" என்று சிரித்துக் கொண்டே கமல் சொன்னார்.

அவர் ஒரு நிஜக் கலைஞன். சினிமாவை சுவாசிக்கும் ஒரு கலைஞன்!

(தொடரும்)

"ஆசிரியர் ஸார்! உங்க பத்திரிகையிலே சுவாமி கிரிஜானந்தாவின் தொடர் கட்டுரை வளர்ந்துக்கிட்டே போவுதே! முடிக்கவே மாட்டேங்கறாரே!"

"என்ன பண்றது? அவர் 'முற்றும்' துறந்த முனிவர் ஆச்சே!"

— வெ. ராஜாராமன்



அதுக்குள்ள

ஆபத்து

♦ உ.பி.யிலும் தமிழகத்திலும் உட்கட்சிப் பூசலால் ராவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கப் பலர் எழுந்து விட்டனர். இதற்குக் காரணம் ராவின் உறுதித்தன்மை இல்லா முடிவே என்பதை தலையங்கம் நச்சென்று சொல்லியிருந்தது. ராவ் தடுமாற, தடுமாற அவரின் பதவிக்குத்தான் ஆபத்து அதிகரிக்கும் என்பது உறுதி.

செம்பட்டி, சோ. இராமு.

உருப்படியான பேட்டி

♦ உமது நிருபர் கேட்ட உருப்படியான கேள்வி ஒவ்வொன்றிற்கும் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அளித்த பதில்கள் அனைத்துமே ஆணித்தரமானவையாகத் திகழ்ந்தன. ஆன்மிகம், அரசியல் போன்ற விஷயங்களில் மக்களுக்குப் போதிய விழிப்புணர்வு ஏற்படவில்லையென்பதில் அவருக்குள்ள சந்தேகத்தினை நன்கு உணர முடிந்தது. உரிய நேரத்தில் இக்கட்டுரையினை வெளியிட்டிருக்கிறீர்கள்.

திருச்சி - 5, தமிழ்தாசன்.

ஏமாற்றலாமா?

♦ ஜெ. பற்றி ஜெயேந்திரர் பேட்டி என்று தலைப்பிட்டு விட்டு, ஜெ.யின் கோவில்கள் பராமரிப்பு - புனருத்தாரண நடவடிக்கைகள் பற்றி மட்டும் பதிலைப் பெற்று விட்டு எங்களை ஏமாற்றி விட்டீர்களே அய்யா!

செங்குன்றம், பாலசுப்ரமணியன்.

மறக்க முடியாத மாமி

♦ 'எல்லாத்துக்கும் தூரமாயிடுத்து' என்று ரகசியத்தை வெட்ட வெளிச்சமாக்கி, சிநேகமாகி விடுகிற மாமி மனத்தில் அழுந்தப் பதிகிறார் 'மாமியின் அட்வைஸ்' சிறுகதை மூலம். தேவையை மீறி நேசம் உணர்த்திய விதம் அருமை.

ஸ்ரீரங்கம், ஆர். ஸ்ரீநிவாசன்.

ஸ்பீட்

♦ ''கட்சி சின்ன கண்ணைப் பொத்துறதா?! அதைக் காட்டிலும் 'கலக்கல்' காட்சியெல்லாம் 'கேபிள்'ல குயந்தைங்களோடு ஒண்ணாக் குந்திக்கினு கண்டுக்கிறோம் வாத்யாரே! ஆபாசத்தோட அளவு கோலே மாறிப் பூட்சுன்னு 'டீ.வி. தலையர்கள்' (16.10.94) கட்டுரையில எழுதியிருந்ததை அதுக்குள்ள மறந்துக்கினா எப்படி நைனா!

மதுரை - 10, இரா. முரளி.

எப்படி நைனா?

சயன்ஸ் ஷோ

♦ 'அபாயம் அறை எண் - 10' இரத்தத்தை உறைய வைத்து விட்டது. ஆசிரியருக்குப் பாராட்டுக்கள்.

திருவிடைமருதூர், ஏ. சிந்துபாரதி.

♦ கார்பன் மோனாக்ஸைட் வாயுவை அபாயம் அறை எண் பத்தின் உயிர்நாடியாக வைத்து சயன்ஸ் ஷோ நடத்தி விட்டார் புஷ்பா தங்கதுரை!

பள்ளிபாளையம், ரஞ்சனி ப்ரியன்.



♦ புஷ்பா தங்கதுரையின், 'அபாயம் அறை எண் - 10' எக்ஸ்பிரஸ் வேகத்தில் சென்றது. எதிர்பாராத முடிவு.

மறந்துக்கினா

திருத்தங்கல், ஜி. எஸ். சேகர்.

சைலண்ட் சோகம்

♦ பா. ராகவனின் 'பயாஸ்கோப்' சிறுகதை, பிள்ளைப்பேறு இல்லாத முதிர் நெஞ்சங்களின் சப்தமில்லாத சோகத்தின் பிரதிபலிப்பு. அருமை.

திருச்சி - 20, ஜி. விசுவநாதன்.

எது உண்மை?

♦ கல்கி 29.1.95 இதழ் 'மணிக்கொடி' தொடரில் வாஞ்சிநாதன் தன் மனைவியோடு ஒருநாள் கூட சேர்ந்து வாழ்ந்ததாகத் தெரியவில்லை என்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ''வீரவாஞ்சி'' என்று ஒரு தொடர் படித்துள்ளேன். அதில் வீரவாஞ்சிநாதன் இறக்கும் போது அவரது மனைவி கர்ப்பமாக இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எது உண்மை?

திருப்பனந்தாள், ஜி. எம். பாஷிணி.

(தவறைச் சுட்டிக்காட்டி திருத்திக் கொள்ள வாய்ப்பளித்தமைக்கு நன்றி. - ஜோதிர்லதா கிரிஜா.)

வட்ட மேஜை

மேக்சிமா - குரூப் நிறுவனங்கள்

MAXIMA

மேக்சிமா பெனிபிட் பண்ட் லிமிடெட்
மேக்சிமா கிரெடிட் லிங்க்ஸ் (பி) லிமிடெட்
மேக்சிமா சிட்ஸ் மெட்ராஸ் (பி) லிமிடெட்
மேக்சிமா இன்வெஸ்ட்மெண்ட் & பைனான்ஸ் கம்பெனி

உங்கள் முதலீட்டிற்கு

25%

வட்டி+ 1% ஊக்கத்தொகை வழங்குகிறது

ஒவ்வொரு மாத வட்டிக்கான காசோலை மொத்தமாக முதலீடு செய்யும் பொழுதே வழங்கப்படும்.

உங்கள் வருங்காலக் கனவுகளை நனவாக்கும் வளமான சேமிப்புத் திட்டங்கள்.

பிக்சட் டெபாசிட்	ஒவ்வொரு மாதம், காலாண்டு, அரையாண்டுகளில் வட்டி வழங்கப்படும்.	குறைந்தபட்ச முதலீடு ரூ.5,000/-
குமுலேட்டிவ் டெபாசிட்	**45.60% P.A** அதிக பட்ச வட்டியாக பெறுவீர்	ரூ.5,000/-
கோல்டன் டெபாசிட்	முதலீடு 3 வருடங்களில் இருமடங்காகும்	ரூ. 7,500/-

மேக்சிமா - உங்கள் முதலீட்டிற்கு முழுப் பாதுகாப்பு அளிக்கக் கூடியது.

காலம்	வட்டி
12 மாதங்கள்	26.80 %
24 மாதங்கள்	30.40 %
36 மாதங்கள்	32.66 %
48 மாதங்கள்	39.67 %
60 மாதங்கள்	45.60 %

மேலும் விவரங்களுக்கு
மேக்சிமா இன்வெஸ்ட்மெண்ட் & பைனான்ஸ் கம்பெனி.
பதிவு அலுவலகம் : 1, வேதாந்த தேசிகர் தெரு, லஸ் பஜார் அருகில், மயிலாப்பூர், சென்னை - 600 004. தொலைபேசி : 4941849, Fax : 044-4347655. தந்தி : MAXFIN
தலைமை அலுவலகம் : 146, எல்டாம்ஸ் ரோடு, சென்னை - 600 018. தொலைபேசி : 456950 / 458549 / 452559
கார்ப்பரேட் அலுவலகம் : 'ஜெயம் பில்டிங்' AA-147, 3வது அவின்யூ, அண்ணா நகர், சென்னை - 600 040 தொலைபேசி : 6280468

Aparna

கிளை அலுவலகங்கள் : -

K.R. பில்டிங் 124-A. லேட்டிஸ்பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை - 600 020 தொ.பே. 415511

'ராஜ ராஜேஸ்வரி டவர்' 567-568, டாக்டர் நஞ்சப்பா ரோடு, காந்திபுரம், கோயம்புத்தூர்-641 018. தொ.பே. 231938

மேக்சிமா - அதிகபட்ச நம்பிக்கைக்குரியது.



வள்ளி வரப் போறா

தமிழ்ப் படங்களில் கொஞ்ச நாளாய் காமெடிப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. நல்ல காமெடி என்பது குதிரைக் கொம்பா யிருக்கிறது. வள்ளி வரப் போறா, அதை நீக்க வந்திருக்கிறது.

கேரளா பக்கம் வேலைக்குப் போகும் பாண் டியராஜன், அங்கே ஒரு பெண்ணைக் காத லித்து, மணந்து வருகிறார். ஜொள்ளர்களான அப்பா, அண்ணன்கள் மற்றும் கோபமே உரு வான அம்மாவிடம் மனைவியை அறிமுகப் படுத்த பயப்பட்டு, வேலைக்காரியாக்கி விடு கிறார். உண்மை வெளிப்படுவதும், டைட் குளோசப் திருட்டுமுழி கலக்கல்களும் கிளை மாக்ஸ்.

நிறைய புதுமைகளும் மரியாதைக்குரிய அம்சங்களும் இதில் உண்டு. மோகனா, விநு சக்ரவர்த்தி எல்லோரும் மலை யாள வாசனையோடு தமிழ் பேசு கிறார்கள். அதுவும் மோகனாவின் மலையாள மழலைத் தமிழ் இருக்கே, யப்பா! மனசு கொள்ளை போகிறது!

காமெடி என்றால் உடனே இரட்டை அர்த்தம், விரசம் என்று நினைப்பவர்களுக்கு ஒரு விண்ணப் பம். படத்தைப் பாருங்கள், வெறும் சிச்சுவேஷன் காமெடிதான். அதோடு சேர்ந்து பாண்டியராஜனின் டைமிங் ஜோக்குகள்.

ஓர் இடத்தில் சார்லியும் முரளி குமாரும் இணைந்து சார்லி சாப்ளின் போலவே நடிக்கிறார்கள். சிரிக்க முடிய வில்லையென்றால், உடனே ஒரு நல்ல மருத்துவரை அணுகுவது உத்தமம்.

டைரக்டர், புரொடியூசரிலிருந்து ஆரம் பித்து காமிராவுக்குப் பின் எக்கச்சக்க அறிமுகங்கள். துடிப்புமிக்க இளைஞர் கூட்டம். குறிப்பாக ஒளிப்பதிவாளர் கல்யா ணுக்கு மிகப் பிரகாசமான எதிர்காலம் காத் திருக்கிறது.

டைரக்டருக்கு, முதல் படம். டேக் ஆஃப் வெகு பிரமாதம்! ஆகவே ஹாட்ஸ் ஆஃப்!

— துளசி

அடுத்த இதழில்....



●● "பெண்ணென்று என்னைத் தனிமைப்படுத்திக் கொள்வதில்லை!"

— சினிமா ஒளிப்பதிவாளர், டைரக்டர் பி.ஆர். விஜயலட்சுமி பேட்டி!



ஒரு சிவராத்திரி சிலிர்ப்பு!

இரண்டு வருஷங்களுக்கு முன் சிவராத்திரியன்று மத்தியானம் உறவினருடன் திருப்பதி செல்ல நேர்ந்தது. இரண்டு டாக்ஸிகள் ஏற்பாடு செய்து கொண்டோம். காஞ்சிபுரம் திருப்பம் தாண்டிய போது, திடுமென்று எனக்கு ஒரு யோசனை வந்து விட்டது. "சிவராத்திரியன்று யாராவது பெரிய - விஷ்ணு ஸ்தலத்துக்குப் போவார்களோ? இதோ மகா சுவாமிகள் பழுத்த சிவப்பழமாக சந்திரமௌலீசுவரருக்கு சிவராத்திரி பூஜை செய்கிறார். அதைப் பார்க்காமல், மூன்று தபஸ்விகளையும் தாண்டிக் கொண்டு சிவராத்திரியன்று திருப்பதி போகிறோம்'' என்றேன்.

"அதனால் என்ன, நல்ல நாளில் சுவாமி தரிசனம் செய்யறோம்; போதாதா?'' என்று என் வாயை அடைத்து விட்டார்கள் உடன் வந்தவர்கள்.

மாலை திருப்பதியை அடைந்து, குளித்து விட்டு கோயிலுக்குப் புறப்பட்டோம். ஆறரை மணிக்கு தங்க விமானம் ஜொலித்தது. "கோவிந்தா! கோவிந்தா!'' என்று பக்தர்களின் குரல்.

"இத்தனை பேரும் சிவராத்திரியன்று தான் வந்திருக்கிறார்கள்'' என்றார் என் கணவர். நான் பதில் பேசவில்லை. அவர் சமாதானத்தை என்னால் ஏற்கவும் முடியவில்லை.

கோவில் பிராகாரத்தில் பகவான் தேவிமார்களுடன் பவனி சென்று திரும்பிக் கொண்டிருந்தார்.

நாதஸ்வர வித்வான், ரேவதி ஆலாபனை முடித்து கீர்த்தனையை வாசிக்க ஆரம்பித்தார். பாட்டு முடியும் வரை உற்சவர் அங்கே நின்று பக்தர்களுக்கு தரிசனம் தந்து கொண்டிருந்தார். அந்தக் கீர்த்தனை முடிந்ததும், நாதஸ்வர வித்வான் அருகிலிருந்தமையால், "ரேவதி ரொம்ப நன்றாயிருந்தது; என்ன கீர்த்தனை?'' என்று கேட்டேன்.

"இதி தஞ்சாவூர் ச்ங்கர ஐயர் கிருதியண்டி! நேடு சிவராத்திரி காதா? 'மகாதேவா சிவ சம்போ, ஸ்ரீமகாதேவ சிவ சம்போ, மார கோடி சுந்தர ப்ரபோ!'' என்று விரல்களால் தாளம் போட்டு பாடிக் காண்பித்தார்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது! அதே சமயம் உற்சவருக்கு தீபாராதனை நடந்தது. வித்வான், "சூடண்டி! சிவ அலங்கார மண்டி!'' என்றார். துளசி மாலைக்குப் பதில் வில்வ மாலையும் நெற்றியில் வைர விபூதிப் பட்டையும் தீபாராதனை ஒளியில் 'பளிச்'சிட்டன!

பரமசிவனாக விஷ்ணு உள்ளே நுழைய, "கோவிந்தா'' கோஷம் பக்தர்களின் கண்டங்களிலிருந்து கிளம்பி, விண்ணளாவியது!

எனக்கு உடம்பெல்லாம் வியர்த்து, நெஞ்சு படபடத்து, தாரை தாரையாகக் கண்ணீரும் பெருகி விட்டது.


என் கணவர் மெல்ல என்னைத் தட்டிக் கொடுத்து, "அதைரியப்படாதே! 'சிவராத்திரியன்று சிவதரிசனம் வேண்டும்' என்ற உன் ஆசையைப் பெருமாள் நிறைவேற்றி வைத்ததாக ஆனந்தப்படு'' என்று சொன்னார்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, கியூவில் முன்னேறினேன்.

— ராமப்ரியா

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

"HE PROMISED HE HAD SOMETHING THAT COULD CHANGE OUR LIVES... WE WERE AMAZED WHEN HE SHOWED US HOW!"



The friendly man from Eureka Forbes presented his card. "I would like to demonstrate our Euroclean 2000, a cleaning system you could conveniently use everyday," he said. He began to show us how – patiently and thoroughly. From carpets to sofas, from curtains to ceilings, he made everything spotlessly clean. He even showed us how effectively the Euroclean 2000 could clean delicate audio equipment , spray paint our refrigerator or be used for watering our plants. He offered to drop by at home as often as we liked, to train us on how to use the product.



The friendly man from Eureka Forbes : Part of a successful sales organisation.

"We've helped over one and a half million families discover an easier way to a cleaner home," he said with pride. "Families prefer us because they can contact us directly – with just a phone call ! We have a country-wide service network and offer after-sales service at your doorstep. That's what makes us different from the others".

We were impressed, we bought the Euroclean 2000. And our home has never been cleaner, thanks to the friendly Eureka Forbes man.

EUREKA FORBES LTD.

Friends for life

TRITON/94/EFL/058

***For a visit from the friendly Eureka Forbes man, call or write to:** Bhupesh Gupta Bhuvan, 1st Floor, 85 Sayani Road, Prabhadevi, Bombay 400 025. Tel: 022-4301725/1718.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka